


LB.
N33.
18483

உ

பரமபதி துணை

# இராமதேவர்

திருவாய்மலர்ந்தருளிய,

கற்பம் ஆயிரமென்னும்,

# வைத்திய காவியம் க.

அரும்பத உரையுடன்

மதுரை, வடக்குமாசிவீதி

வைத்தியம்,

எஸ். வன்னியக் கோனாரவர்களால்

பரிசோதிக்கப் பெற்று

மதுரை, புதுமண்டபம், புக்ஷாப்,

இ. ராம.

## குருசாமிக் கோனார் சன்.

அவர்களாற் மதுரை

மதுரை, வடக்குமாசிவீதி குருசாமிக்கோனார் தெரு,
ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.

இதன்] 1933. [விலை ரூ 1—8—0

Registered Copy Right.

11 DEC 1963
MADRAS

M.
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் 198 வருடம்
செப்பனிட்டு முடித்த
மாதம் 19 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

LB N33

118483

உ

பரமபதி துணை.

இராம தேவர் திருவாய் மலர்ந்தருளிய,

கற்பம் ஆயிரமென்னும்,

# வைத்திய காவியம் சூ.

## காப்பு.

அண்டமெனுங் கேசரியாள் பாதங்காப்பு
அருள்பெருகும் பூரணத்தி னறிவேகாப்பு
குண்டமெனுங் குண்டலியாள் குறியேகாப்பு
குருவான பராபரத்தின் குணமேகாப்பு
மண்டலங்கண் மூன்றுமொன்றாய் நிறைந்துநின்ற
மகத்தான ரவிமதியின் அடியேகாப்பு
பிண்டமெனும் பொருளான அண்டபிண்டம்
பேரண்டம் நிறைந்தவனைப் பதிகாப்பாமே. (1)

பரியான பதிநிறைந்த பூரணத்தால்
பக்குவமாய்த் திசைகாதல் கண்டுதேறி
நெதியான மோக்ஷமென நின்றேனப்போ
கேசரத்தின் கேசரியாள் கிருபைகூர்ந்து
மதியான மதியமுர்த மீய்ந்தாளப்போ
வரிசையுட னரிசையதாய் வணங்கிப்பெற்றேன்
கதியான காலமென்று மனதுகூர்ந்து
சங்கையுட னுபதேசந் தந்தவென்னுளே. (2)

குண்டலி யென்பது—சுரோணித சுக்கிலமவை வீற்றிருக்குமிடம்.

ஆவென்ற திசைதீட்சை யறிதம்பெற்றே னதன்பிறகு ஊவென்ற வருளைப்பெற்றேன், கூவென்ற நாதமடா மௌனம் பெற்றேன் கூர்மையுடன் மூன்றினுட விவரம்பெற்றேன், சாவென்ற சொல்லகற்றுந் தன்மைபெற்றேன் தயவான புலத்தியர் தன் னருளினாலே, மாவென்ற மௌனமந்த் மனதிற்கொண்டு மகத்தான குருவினுட வளங்கண்டேனே. (3)

வளங்கண்டு குருவினுட வண்மைகண்டு மகத்தான சிவசத்தி பூசைசெய்து, கலங்கொண்டு சஞ்சாரச் சமாதிகொண்டேன் நன்மையுட னஷ்டதிசை சுற்றம்போய்து, தலங்கண்டே னத்தலத்தி னுதங்கண்டேன் தயவான மனோன்மணியாள் தன்மை பெற்றேன், உளங்கனியு மனோன்மணியாள் வாவாவென்று வுண்மையென்ற பொருளீய்ந்தா ளருப்பெற்றேனே. (4)

உருவான பொருளறிந்து வுண்மைபெற்றேன் உண்மையுடன் வாராம தேவாயென்றாள், கருவான கருக்குருவு மெனக்கீந்தாள் கைபாகம் முறைபாகம் கனகின்பாகம், இருவான வொருபாகங் குருவின்பாகம் செம்மையுடன் நன்றாகச் செப்பினாள்பார், குருவான குருவருளா லதாலொன்னைக் கூப்பிட்டுக் காப்பிட்டுக் குறிசொன்னாளே. (5)

குறியான குறியறிந்து மூலம்பார்த்து குணமான வாறுவரை மேலேசென்று, நெறியான சுழிமுனையில் வாசிபூட்டி நேரான மயிர்ப்பாலத் தப்பாற்சென்று, அறிவான மறியிரவிக் கப்பாலேசி யக்கினியின் சுடரதிலே யமர்ந்துநின்று, பரியான பரப்பிரமக் குருவைப்போற்றி பதியான வாயிரத்தெட் டிதழ்கண்டேனே. (6)

கண்டேனே யாயிரத்தெட் டிதழுக்குள்ளே கருணையுள்ள மதியமுர்தங் கருத்தாய்க்கொண்டு, தெண்டேனே யண்டவரை யறிந்தானும் திரும்பினேன் னொருகோடியிற் றிரும்பியக்த, அண்டபிரா னருள்தனால் முடிவிற்கண்ட வாயிரத்தெட் டிதழ்பெறுக வடியென்றானும், விண்டபொரு ளாயிரப்பப் பாடியாத வியாமுறைத் கருக்குருவாய் விளம்பினேனே. (7)

ஆறுவரை—ஆறுதாரம். கருக்குரு—மூப்புக்குரு.



விளம்பினசொல் ராமனுட வாக்கியமென்று விருதுபெற்ற சித்தரெல்லா மகிழ்ந்துபோற்றி, நலம்பெறவே யவரவர்க ளெடுத்துப் பார்த்து நன்மையுள்ள வாயிரத்தைப் பதனம்பண்ணி, வளம்பெறவே யிருந்தார்க ளப்போதையா மகத்தான புலத்தியரின் மகிமையாலே, விளம்பியிக வப்பதியிற் சித்தரோடே கெணிதமுடன் வாதாடி யிருந்தேன்பாரே. (8)

இருந்துகொண்டு வாதாடிக் கேழ்விபேசி யின்பமுடி வானதொரு வாயிரத்தை, வருந்தியிக வாங்கிநல்லோர்க் கீய்ந்தேனப்பா வரிசையுள்ள வாயிரத்தின் வளமைகேளு, அருந்தவமா மந்திரத்தி னதிசயித்து வருமையுள்ள வழலைமுறை யானவாறு, தெரிந்துகொண்டு முப்பூவின் குருவின்வாறு தெவிட்டாத காயாதிகற்பவாறே. (9)

வாரான வசியமுத லெட்டுவித்தை மகத்தான இலதமொடுமையின்போக்கு, கூரான செயநீரின் மெழுகின்போக்கு கூர்மையுள்ள செந்தூரச் சாக்கின்போக்கு, நேரான வேதையிலே யனந்தம்போக்கு நிட்டைமுதற் சமாதியுட கற்பப்போக்கு, தோராமனத்தோர்க்கு ஞானப்போக்கு நிரமாக நாட்டமுதல் சாற்றுவேனே. (10)

திறமான சகலித்து மாதியந்தம் தீர்க்கமுள்ள வாதியந்த மண்டபிண்டம், உறவான அண்டபிண்ட நாதகித்து வொடுங்கிநின்ற தலமதனா லண்டபாச்சு, பரமான வண்டமடா வாதியுப்பு பகருகின்ற வாதியுப்பு கல்லுப்பாச்சு, சிரமான கல்லுப்பாஞ் சத்தவெள்ளை வெள்ளையுமே சுகந்தவா வென்னசொல்வேன் பிரமமாச்சே. (11)

ஆச்சப்பா பிரமமென்ற கபாலந்தன்னை யானெடுத்து வுலகமதி லமுதுகொண்டார், பேச்சப்பா பேசாமெ லமுதுகொண்ட பெருமையினாற் இவ்வேனவே பேருண்டாச்சு, நீச்சப்பா வெகுநீச்ச வண்டக்கூறு நேர்மையுள்ள வண்டமடா வழலையாச்சு, பாச்சப்பா வண்டமென்ற வழலைதன்னைப் பாடுகிறேன் கருக்குருவாய்ப் போற்றுவேனே. (12)

வேதை—ரசவாதம். வழலை பூநீர்.

வ-ழலை.

பாடுகிறேன் வழலைமுறை நன்றாய்க்கேளு பரமான வண்டமென்ற கல்லைவாங்கி, நாடுகிறேன் கல்லுரலி லிட்டுக்கொண்டு நலமாக விருப்புலக்கை யதனாற்குத்தி, வாடுகிறேன் வகையென்னமாப்போல்குத்தி வரிசையுடன் மாவாக்கி யதன்பின்பு, கூடுகிற சுத்தசலந் தன்னிற்போடு கூர்மையுடன் கரைத்திறுத்து மறுநாள்தானே. (13)

தானே தானிறுத்திடுவாய் பக்குமுறையப்பா தயவாக விறுத்துநன்றாய் ரவியிற்போடு, வீணேதான் றிரியாமல் மனதாய்ப்பார்த்து விபரமுடன் காய்ந்தபின்பு சொல்லக்கேளு தேனென்ற பழச்சாற்றிற் பொடியைக்கொட்டி திறமாக வடுப்பேற்றிக் குழம்பாக்காய்ச்சி, வானென்ற நீர்வற்றக் காய்ச்சினக்கால் மகத்தான கல்லுப்புக் கசிவுபோச்சே. (14)

கசிவான யெண்ணை நக்கி வெள்ளையாச்சா கருணையுள்ள வண்டமென்ற கல்லுப்புத்தான், உசிதமுள்ள பூநீரென் றிதற்குப்பேரு உரிமையென்ற வழலையென் றிதற்குப்பேரு, கசிக்குமுள்ள வுவருப்பென் றிதற்குப்பேரு சுத்தமுள்ள விந்துவென் றிதற்குநாமம்வசிகரமாகியுப்பு வென்றும்பேரு மகத்தான சிவமென்ற பேருமாச்சே. ()

போன சிவத்துக்குச் சத்திகேளு பெருமையுள்ள அகாரமொடு உகாரம் ரண்டும், கூரான அகாரமடா விந்துவிந்து குறியான உகாரமடா நாதநாதம், சேரான நாதவிந்து காரசாரம் நேர்மையுடனதன் விபரம் நன்றாய்க்கேளு, பாரான பிருதிவியுமப்புமாச்சு பகருகின்ற வப்புமப்பு வென்றாய்ப்போச்சே. (16)

ஒன்றாகச் சேர்த்துநன்றாய்க் கரைத்துக்கொண்டு வுரிமையுடன் தெளியவைத்து தெளிவைவாங்கி, நன்றாகப் பீங்கானில் வார்த்துநல்ல ரவிமுகத்திற் காயவைப்பாய் நீர்கள்வற்ற, சென்றடா ரவிமுகத்தில் நன்றாய்க் காய்ந்தால் சிவசிவா வுயிரதை மென்னசொல்வேன், பின்றான் பரப்பிரம வஸ்துவுக்கு பண்புள்ள சத்தியுப்பு வென்றும்பேரே. (17)





போரான சத்தியென்று மிதற்குப்பேரு பெருமையுள்ள நாதமென்று மிதற்குப்பேரு, கூரான காரமென்று மிதற்குப்பேரு கூர்மையுள்ள பூரமென்று மிதற்குப்பேரு, சோரகச் சத்திசிவ மொன்றாய்க்கூட்டி நேர்மையுள்ள பழச்சாற்றாற் கரைத்து மைந்தா, மாசறத் ரவிமுகத்தில் வைத்தால்நல்ல மார்க்கமுடன் சிவனும் மீனாளு முப்பாயப்போச்சே. (18)

உப்பான வுப்பதற்கு நாமங்கேளு வுரிமையுள்ள வாதமொன்றும் பரமாமப்பு செப்பாத யாத்துக்கு வுயிரேதென்றால் சிவசிவா சொல்லுகிறே னன்றாய்க்கேளு, தப்பாமற் சொல்லுகிறேன் அகாசந்தான் றன்மையுள்ள சத்தமடா நாதமாச்சு, அப்பானவாதியென் விந்துவோடே யருமையென்ற நாதமதை நன்றாய்ச்சேரே.

சேர்த்துநன் றாகநீர் விட்டுவாட்டித் திறமாக வீராறு சாமமரட்டி, பார்த்துநன்றாய்ப் பதமாக வட்டுப்பண்ணி பரிதியென்ற ரவிமுகத்திற் பதமாய்வைத்து, காத்துநன்றாய் நீர்வற்றக் காய்ந்ததானால் கனியென்ற சத்தமடா வுப்புவேகம், போற்றிமிக வோட்டில்வைத்து வோடுமூடி பூட்டுவாய் தெரியாமல் மணந்தான் செய்யே. (20)

செய்துநன்றாய்க் காய்ந்தபின்பு நலமாய்க்கேளு சிவபூசை நன்றாகச் செய்துகொண்டு, மெய்யதனாற் சற்குருவைத் தொழுது போற்றி விபரமுடன் மனதறிந்து புடத்தைப்போடு, கைதவறா மனதாகக் காருதிரு காய்ந்துநன்றாய்த் தனலாறி யெடுத்துப்பாரு, செய்தமலர் முப்பூவை யென்னசொல்வேன் கூர்மையுடனீறு சுண்ணமாச்சே. (21)

சுண்ணமென்று விதன்பெருமை சொல்லக்கேளு சருக்கரை கடுங்காரச் சுண்ணமென்றும், விண்ணான வாதியுப்புச் சுண்ணமென்றும் விருதுபெற்ற வழலையுட சுண்ணமென்றும், கண்ணான மதியிரவி சுண்ணமென்று கருவான முப்பூவின் சுண்ணமென்று, வண்ணானுண் மாடகமுள்ள சுண்ணமென்று வரிசையுடனுரிமையுள்ள சுண்ணமாச்சே. (22)

ஆச்சப்பா விக்தற்றை அண்ணப்போக்கு வாயிரத்தைப் போலொருநூல் சொல்லாதையா, பேச்சப்பா பேசுதற்கு நாவு முண்டோ பெலாம தேவனுட ஞாலேக்கண்டால், மூச்சப்பா வோடாது முன்பின்னாக முனையான சுழிமுனையில் கடனங் காணும், காச்சப்பா கசடான வறிவையீயுங் கசடகற்றி வாயி ரத்தைப் பாருபாரே. (23)

பாரப்பா முப்பூவை யெடுத்துக்கொண்டு பாங்கான குப்பி யிலே பதனம்பண்ணி, காரப்பா சதாசிவத்தை வாசிகொண்டு கருவான வாசியினால் மூலம்பாரு, நேரப்பா வம்மூலஞ் சுழினை மூலம் நேரான மூலமடா வண்டமாச்சு, கூரப்பா வடிமூல மேலா தார குணமான வாதாரப் போக்கைக்கேளே. (24)

போக்கான போக்கறிந்து போக்கைக்கண்டு போக்குவாத் தாகின்ற புதுமைகாணுர் வாக்கான மவத்றிக்து போக்கைக்கண் டால், வஸ்தாகி நின்றதலம் வண்மைகாணும், தாக்கான வளமை தனைக் கண்டால் மைந்தா, தருவான வைத்துருவு முனக்கேசித்தி காக்கான ருசிதனையு மறிக்தாலந்த, தலமான வைத்துருவு முனக்கேசித்தி. (25)

## முப்பொருளின் அடிமுடிமூலம்.

சித்தான முப்பொருளின் வியாக்கேளு சிவசிவா வடிநடுவு முடியுமாச்சு, முத்தான வடிவென்று இகாரமாச்சு மூர்க்கமுள்ள சத்தியென்று மிதற்குப்பேரு, வித்தான காரமென்றுங் காரமென றும் விசையான சாரென்று மமுர்தமென்றும், வத்தான வாசி யென்றும் பூரமென்று மகத்தான பச்சையென்று முப்பூவாமே. ()

ஆமப்பா வடிமூலஞ் சொன்னேன்மைந்தா வரகுரு [illegible] மூல மார்தான்காண்பார், காமப்பா [illegible] சொல்லுகிறேன் [illegible] நடுவான வகாரமடா சிவந்தானுச்சு, [illegible] ப்பா சிவமென்று [illegible] போரூர் தயவான சிவந்தான் விந்துவித்து [illegible] நிறைந்த கங்கையென்று மகத்தான சயிலமென்றுஞ் செய நீரெண்ணே. (27)





தீரான செயநீரென் றிதற்குப்பேரு நினைவான சாரமென் றிதற்குப்பேரு, சீரான ஆசிநீருப் பென்றும்பேரு குருவான [illegible] ப்பென்று மப்பென்றும்பேரு, ஊரான கங்கையென்றுஞ் சமுத் திரந்தானென்று [illegible] மையுள்ள வறுவகையென் றிதற்குப்பேரு, தாரான சடாதார வமுர்தமென்று தயவான விந்தென்று [illegible] ச்சே. (28)

வீரமென்ற நடுவான வகாரஞ்சொன்னேன் விசையான முடி மூலஞ் சொல்லக்கேளு, தாரமென்ற நடுவான வகாரபீடத் தய வான மௌனமடா வாசியாகி, பாரமென்ற வாசியென்று மதற்குப் பேரு பரமான சத்தமென்று மதற்குப்பேரு, காரமென்ற வெடி யுப்பு வென்றும்பேரு கமலமென்றுஞ் சிப்பியென்று மிதற் குப்பேரே. (29)

பேரான வாகாசப் புரவியென்றும் பெலமான கும்பிடுகல் லென்றும்பேரு, நேரான காரமென்றும் ரவிதானென்றும் நிலை யாத பாரமென்றுங் கல்லுப்பென்றும், கூராத வெள்ளையென்றுங் கும்பமென்றும் குணமான வானைக்கல் லென்றும்பேரு, மாறாத மௌனமென்றும் பொருள்தானென்றும் மகத்தான வழலையென் றும் பேருண்டாச்சே. (30)

ஆமப்பா வழலையுப்பு வதிகஞ்சொன்னேன் மாயிரத்தெண் கமலமதி லமுர்தமுண்டு, [illegible] சொன்னகரு வாயிரத்திற் சமுசயங்க [illegible] வழலைசொன்னேன், [illegible] விந்நூலிற் கருவுகோவ [illegible] குத்துரைத்தார் சித்தர்களும் முனிவர்தாமும், காமப் பால் [illegible] விரண்டுங்கொண்டு கருவான வாயிரத்தைக் கருவாய்ப்பாரே. (31)

கருவறியா மாந்தருக்குக் கருச்சொ [illegible] கருவுருவா [illegible] கருச்சொல்லாதே, உருவ [illegible] ருருவித்த வுகமை காணார் உருவமற்ற திருவறியா ரோடுக் [illegible] மருவறியார் [illegible] வாசக்காணார் வாசமுள்ள [illegible] மனதுகூர்ந்து [illegible] ண்மையுள்ள [illegible] (32)

[illegible] வமுர்தமாமே.

ஆமப்பா மூன்றினுட விபரஞ்சொல்லி யன்பான முப்
பூவின் விபரஞ்சொன்னேன், நாமப்பா சொன்னவுப்பு விபரந்
தானும் நாதாக்கள் சொல்லார்கள் கருவாய்ச் சொன்னேன்,
தாமப்பா வாயிரத்தின் சகஸ்திரந்தன்னை தன்மையுடன் பூரண
மாய்த் தான்கண்டோர்கள், காமப்பால் மதியமுர்தச் சுண்ணப்
போக்கை கருவாள றிவார்கள் மற்றோர்காணார். (33)

காணாத கருத்துடையார் மெத்தவுண்டு காசினியிற்கண்
டறிந்தாா வடக்கிப்பேசு, தோணாத பொருளதனைத் தோற்றி
விக்குஞ் சுரூபமுள்ள வாயிமாஞ் சகஸ்திரந்தன்னை, பேணாத மாந்
தருக் கியவேண்டாம் பேணிநின் றவர்களிடம் பேசவேண்டாம்,
கோணாமற் குருபதத்தைப் பூசைபண்ணி கூர்மையுட னுயி
ரத்தைப் பூசைபண்ணே. (34)

## வெடியுப்புச் சுண்ணம்.

பண்ணப்பா வின்னமொரு கருவைக்கேளு பருவமுடன்
வெடியுப்புச் சுண்ணஞ்சொல்வேன், கண்ணப்பா வெடியுப்பு வைத்
தாங்காய்ச்சல் கம்பியுப்புக் கொண்டுவந்து சொல்லக்கேளு நண்
ணப்பா பீங்கானி லுப்பைக்கொட்டி கடுவான பச்சைநீர் விட்டுக்
கிண்டி, விண்ணப்பா ரவிமுகத்தி லுலரப்போட்டு விபரமுடன்
பத்துமுறை யிப்படியேகாய்ச்சே. (35)

காய்ச்சிநன்று வெடுத்திடவே யுப்பிலின்றும் கச்சான ஊற
லற்றுக் கட்டிப்போச்சு, தாட்சியில்லாக் கட்டாச்சுவ டிதானப்பா தன்
மையுடன் கட்டினது நக்கம்போலாம், மாய்ச்சல்செய்யு முறலற்றுக்
கட்டுமுப்பூ மகத்தான விந்துப்பு வென்றும்பேரு, நீச்சன்று நீச்
சான வுப்புச்சுண்ணம் கினவாகச் சொல்லுகிறே மனதா[illegible]

கேளடா வெடியுப்புப் பலமோபத்து இருண[illegible]
ததுவும் பலமோபத்து நாளடா சருகதுவு மதற்கு[illegible]
மாக விந்துநீர் தன்னு[illegible]டி, கோளடா வாராம் லாறுக்[illegible]
றவே யரைத்தபின்பு பழச்சார்விட்டு, மாளடா வரைத்[illegible]
சாம மார்க்கமுட[illegible]தபின்பு வட்டுப்பண்ணே. [illegible]





பண்ணியதோர் வட்டதனை ரவியிற்போட்டு பசுமையாய்க்
காய்ந்தபின்பு சுரண்டிப்பாரு, உண்ணியே கணீரென்று சத்தங்
கேட்டால் உத்தமனே வோட்டில்வைத்து வோடுமூடி, தண்
ணியே மண்சீலை வலுவாய்ச்செய்து தன்மையுடன் குழிவெட்டிப்
புடத்தைப்போடு, புண்ணியனே புடமாறி யெடுத்துப்பாரு
பொருமிவெகு சுண்ணமதாய் நீறிப்போச்சே. (38)

போச்சென்று விடுக்காதே கடுங்காரமாகப் போச்சென்று
சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு, பேச்சொன்று மில்லையடா கல்வத்
திட்டு பேணியே நாதர்நீர் விட்டுவாட்டி, மாச்சென்று விடுக்
காமல் நன்றாயாட்டி மார்க்கமுடன் முன்போலே காயப்போடு,
காச்சென்று காய்ச்சலது நன்றாய்க்காய்ந்தால் கருவாகப் புடம்
போட நீறிப்போச்சே. (39)

நீறிநின்ற நீறதுவு மதிககாரம் நீள்புவியில் மாந்தருக்குச்சொல்
லவேண்டாம், கூறிநின்ற சுண்ணமதைப் பதனம்பண்ணிக்குருவான
பராபரத்தைத் தொழுதுபோற்றி, தேறிநின்று மனதறிவால் மனதைக்
காரு தேறாத மன்மாளுல் சித்துபொய்யாம், ஆறிநின்ற அகார
மதைச் செபித்துக்கொண்டு வரகரா வின்னமொருசுண்ணங்கேளே

## கற்பூரச் சுண்ணம்.

சுண்ணமென்ற வெடியுப்புச் சுண்ணஞ்சொன்னேன் சுரூப
முள்ள கற்பூரக் கட்டிவாங்கி, திண்ணமுடன் வாவென்ற செய
நீர்[illegible] மூப்பூவிற்பண விடைதான்போட்டு,
வண்ணமுட[illegible] சுண்டக்காய்ச்சி வளமைபெறப்
பதினை[illegible] சுண்ணமாய்க் கலக்கிரவி முகத்தில்
வைக்க[illegible] தைப்போச்சே. (41)

[illegible] தன்மையுள்ள
கற்பூர[illegible] தோய்த்துத்தோய்த்து
திறமாக[illegible] வாரமற் பத்துமுறை
[illegible] நீதமுடன் கட்டி
[illegible] கேளுதொன்றே.

ஒண்டான பொருளெல்லா நாதமாகு முடன்சேர்ந்த கருவெல்லாம் விந்துவாகும், பண்டான சேதியிது முப்பூவாகும் பார்மக்கா ளிப்பூவில் சாரஞ்சேரில், குண்டாத சலமாகு மச்சலத்தில் குருவான குருசியதிற் றோய்த்துத்தோய்த்துக், செண்டான ரவிதனிலே காயப்போட்டு சிவசிவா பொருமியது சுண்ணமாச்சே. ()

ஆச்சப்பா ரசந்தனிலே சுண்ணம்போட்டு அருளான செயநீரை விட்டரைத்து, பேச்சப்பா வொன்றுமில்லை வட்டு பண்ணி பேய்மக்கா ளோட்டில்வைத்துச் சீலைசெய்து, காச்சப்பா காடையென்ற புடத்தைப்போடு கணபதிக்கும் வடுகனுக்கும் பூசை பண்ணு, மூச்சப்பா போகாம லடங்கிீறு மூதண்ட மானதொரு குருவுமாச்சே (44)

குருவிலொரு பணவிடைதா னெடுத்துக்கொண்டு கூசாமற் றேனதிலே யீந்தாயானால், தருகாதே மேகமொடு வாக்குக்குஷ்டம் தாம்வான சூலையொடு பௌத்திரங்கள், மருவிவருங் குன்மமொடு மூர்ச்சைவாய்வு மண்டியிடு மேலிளைச்சல் வயிறுகாந்தல், இருகிருப்பு நீரிழிவு பவுத்திரங்கள் கெடியாகக் கண்டவுடனோடிப்போமே. (45)

போமேதான் மூன்குருவில் கிராகனெட்டு புகழுடைய ரசபற்பம் கிராகனென்று, ஆமேதா னிரண்டுமொன்றாய்ச் செயநீர்விட்டு அமர்த்தியே யரைத்துருட்டிக் கவசஞ்செய்து, தாமேதா விழவுலர்த்திப் பதனம்பண்ணித் தனியேற்றிச் சாற்றிவிட்ட சயரோகங்கள், காமேதான் குளிர்காய்ச்சல் [illegible] கண்ணிதோஷங் காடாமலோடிவிடும் கயந்துபாரே. (46)

கயந்துமிகக் கெ[illegible] மூழுமாடும், பயங்[illegible] தனிலே யொருத்தருக்[illegible] [illegible] ஊடைய யாதந்தன்னைத் [illegible] லாய்நீ, சயந்தனிலே [illegible] டார் தனக்கீயாதே. (47)





## துருசுச் சுண்ணம்.

தனதாக வின்னமொரு கருவைக்கேளு தாயான மனோன்மணியாள் தந்தவித்தை, மனதாகச் சொன்னபடா மகிழ்ந்துகேளு மங்கையுட னாதமடா வாலைவாலை, சென்னமா மில்லையினித் தாயைப் போற்றி செகசோதி யானதொரு காயைவாங்கி, குணமாகக் கமலைப்பால் தன்னிற்போடு குமுறவே தீயெரித்து வசித்திடாயே. ()

அவித்தபத மென்னவென்றாற் கிள்ளிப்பாரு ஆவென்னெய் போலிருந்தா லிறக்கிவைத்து, தவித்துமிக வாடாதே சர்க்கரைதேனூட்டி தயவாகப் பிசைந்துருட்டித் தாயைப்போற்றி, குவித்துமுக வருதிங்கள் சென்றுபாரு கூறவொண்ணா வைங்காயச் சுண்ணமாச்சு, பவித்திடவே முப்பூவும் பூரச்சுண்ணம் பக்குவமாயிடைக்கிடையே சேர்த்துக்கொள்ளே. (49)

சேர்த்துநன்றாய்ப் பழச்சாற்றாற் சாமமாட்டித் திறமாக வில்லைசெய்து காயவைத்து, பேர்த்துமிகச் சற்குருவைத் தொழுது போற்றி பூப்புடத்தில் வைத்தெடுக்கச் சுண்ணமாகும், பார்த்திபனே யிச்சுண்ணம் பதனம்பண்ணி பங்கயத்தின் றெரிசனத்தைப் பற்றிக்கொண்டு, பூத்தமலர் வாசனையாற் கற்பங்கொண்டு பூரணத்தைப் பற்றிமன தறிவில்கில்லே. (50)

அறிவான பூரணமே தெய்வந்தெய்வம் ஆலயத்துத் தெய்வமெல்லா மாகவாகும், குறியான வழியறிந்து வாசிபூட்டிக் கும்மெனவே தப்பித்துக் குறிகண்ணூட்டி, சரியான பதினெட்டெழுத்துக்கெல்லாந் தானவனாய் நின்றதோ ரெழுத்தைக்கண்டால், பரிவான பரதேசி நீயேயாகும் பக்குவமாய யிரத்தைப் பதனம்பண்ணே. (51)

பதனமச்ச யபயிரத்தைப் பற்றிப்பாரு பார்க்கையிலே மனத்தைப் பாருபாரு [illegible] தனையெல்லாந் தானகன்று வறிவுண்டாகும் [illegible] சித்துமிக [illegible] சதமான வட்டித்துஞ் [illegible] சதாசிவத்தி னருள்பெருகித் தானூறும், மதமான வகங்கார மடிந்துபோகும் மகத்தான சிவயோகியாவாய்பாரே. (52)

## சவர்க்காரம்.

பாரப்பா சவர்க்காரஞ் சொல்லக்கேளு பாடினார் சவர்க்காரம் வெவ்வேறாக, நேரப்பா தெட்சணா மூர்த்திதானும் நிலைத்திட்டா ராயிரத் திருநூறுக்குள், சாரப்பா சவர்க்காரம் நன்றாய்ச்சொன்னார் தருவான புலத்தியர்தன் கடாட்சத்தாலே, பேரப்பா நான்பெற்ற தவப்பேறாலே பெருமைவிட்டு வாயிரத்தைப் பேசினேனே. (53)

பேசினதோர் சவர்க்கார மென்னவென்றாற் பேரண்ட மான தொரு வண்டபிண்டம், வாசிநிறைந் திருந்ததொரு வண்டபிண் டம் மகத்தான சத்திசிவ வுப்புவுப்பு, கூசிமனம் போகாம லுப்பு வாங்கி கூர்மையுடன் றகர்த்துக்கல் லுரலிற்றாக்கி, பாசிமனக் கசடகற்றி யிருப்புக்கோலால் பக்குவமாய் நொறுக்கிநன்றா யிடித் துப்போடே. (54)

இடித்துநன்றாய்த் தோண்டியொரு பாண்டத்திட்டு இள சான வழுரியிட்டுக் கரைத்துமைந்தா, பிடித்துநன்றாய்க் கரைத் தரவி முகத்ில்வைக்கப் பிரியமுடன் மறுநாள்தா னிறுத்துப் போடு, வடித்துமிக முன்போல வழுரியிட்டு வரிசையுடன் பத்து முறை சுத்திசெய்து, அடித்துமனம் பதறாமல் மைந்தாமைந்தா சுருக்கான ரவிமுகத்திற் காயப்போடே. (55)

போட்டுநன்றாய்க் காய்ந்தபின்பு வுரலிற்றாக்கிப் புத்தியுட னிடித்துநன்றாய் மாவதாக்கி, தெட்டிலமையா பாம்மாலிற் சேரு தற்கு நிறமாக மருந்துவகை செப்பக்கேளு, [illegible] சுருக்கோடு விரம்பூரக் தயவான வெடியுப்பு இந்துப்பு [illegible] நவச்சாரங் கல்லுப்போடு [illegible]மான துரிசுடனே [illegible]. ( )

தனதாக ராமனுட வைத்தியத்தைத் [illegible] வின் னாதே தனதாம்வித்தை, மனதாக வின்னமொரு [illegible] மானிலத்திற் சகலபிணி மாண்டுபோக, இனமான [illegible] கல்லைவாங்கி யிடுசமனாய்ப் பிண்டமென்ற காதக்த[illegible] மாக ரவிபீச மொட்டிலொன்று [illegible] கூட்டியே [illegible] கூறக்கேளே. (57)

பேரண்டம்—அண்டம், பிண்டநாதம்—[illegible].



கேளப்பா வாய்குவிந்த கலசந்தன்னிற் கெட்டியா யிட் டுமே லோடுமூடி, ஆளப்பா தமரிட்டுச் சீலைசெய்து ஆனகுழித் தைலமதை யன்பாய்வாங்கு, சூளப்பா குப்பிதன்னிற் பதனம் பண்ணிச் சுந்தரஞ்சேர் சற்குருவைத் தொழுதுபோற்றி, வாளப்பா யிக்கருவை வெளிவிடாதே மணிமந்திர வழிதமாய் வணங்கிப்பாரே. (58)

பாரப்பா யித்தையிலம் பதனம்பண்ணிப் பார்தனிலே மனிதருக்கு வருநோய்க் கெல்லாம், காரப்பா பணவிடைதா னுவிற் றீத்த கரைகாண தேடிவிடு மின்னங்கேளு, சீரப்பா குளிர் சுரமுந் தோஷம்போகுஞ் சிவசிவா மகோதரமுங் குட்டசூலை, நேரப்பா வோடிவிடுந் தைலப்போக்கு, நிசஞ்சொன்னேங் குரு வருளைத் தேர்ந்துகூடே. (59)

கூடவே யின்னமொரு குருவைக்கேளு குவிந்ததொரு முட்டையிலே யைந்தாக்கிக்கள், நாடவே யினமறிந்து கருவை வாங்க நானென்று சொல்லுகிறே னன்றாய்க்கேளு, வாடவே வேண்டாங்காண் ரவிபீசத்தில் மாட்டுவாய் களஞ்சியெடை வெல் லங்கூட்டி, போடவே மூன்றுநாள் காய்வெதும்பி பொற் கொடிக்கு விதனமண்டி வருகுந்தானே. (60)

தானென்ற காரீயங் கட்டிவாங்கிச் சாற்றுவாய் முப்பூவைக் கீழ்மேலிட்டு, கோனென்ற பிங்கானில் வைத்துநல்ல கொடிக் கள்ளிப் [illegible]லொரு சேரைவார்த்து பானென்ற ரவிமுகத்தில் வைத்துப்பார்க்க [illegible] வுருகியது பசமையாகி, மானென்ற மெழுகுபத [illegible] மக்களே யிம்மெழுகைப் பதனம்பண்ணே.

[illegible] யிம்மெழுகை யுலகத்தோர்க்குப் பகராதே [illegible] வெளியிடாதே, உண்ணியதோர் பொருள்கோடி குவித் திட்டாலு மொருத்தருக்கு மிராமனுட ஜூலியாதே, தண்ணி [illegible] சதாகால முனதுபதஞ் சார்வோர்க்கெல்லாம், புண்ணியமா யிதனிலொரு பொருளைச் சொல்லு புத்தியுடன் குருபதத்தைப் பூண்டுபாரே. (62)

ரவிமுகம்—சூரியன். தீத்து[illegible]—தீட்டுதல்.

பூண்டுகொண்டு பூரணமே தெய்வமென்று, புத்தியுடன் மனதிலார் பூசைபண்ணி ஆண்டுகொண்டு வவ்வள்பதத்தைத் தொழுதுநின்று, லாகார சிவயோக மதுதானுண்மை வேண்டுவது பூரணத்தை வேண்டவேண்டும், வேதாந்தப் பதியில்மன திறுத்தவேண்டும், தாண்டாத மணிவிளக்கைத் தாண்டவேண்டும் தாண்டுவது பூரணத்தாற் றாண்டிப்பாரே. (63)

பாரப்பா சத்தியுட பூசைசொன்னேன் பரமகுரு ராம னுடவாக்கியத்தால், சாரப்பா ரேசகபூ ரகமும்பண்ணிச் சார்ந்து கொண்டு கும்பத்திற் சார்ந்தாயாகில், நேரப்பா குருவினுட பதியைப்பாரு சேர்ந்துகொண்டு வப்பதியில் நினைவைத்தக்கி, கூறப்பா ரகுராம தேவனென்று கொண்டாடி யின்றாலைக் கூர்ந்துபாரே. (64)

கூர்ந்துபார் கொங்கணவர் தாலைப்பாராய் கொண்டதிலே பட்சணியின் குருவைப்பாராய், தேர்ந்துகொண்டு வெந்தனுட தாலைப்பாராய் தெரிந்ததிலே யைம்பதும் பதுவும்பாரு சாந்தமாய்ப் பொதியைமுனி சூஸ்திரத்திலே தன்மையுள்ள பட்சணியில் சார்ந்துபாரு, நேர்ந்துபார செந்தூரம் தன்னிலேதா னிச்சயமாய் வைத்தியத்தை நிறுத்தினேனே. (65)

நிறுத்தியொரு கருமையைச் சொல்லக்கேளு, நேரான தாமரையின் கொடியைவாங்கி கறுத்தகொரு காரமை ஓட்டில் வைத்துக், கனலடுப்பிற் றுவெரித்துக் கருக்கிக்கொண்டு, பெருத்தவொரு வைங்கோலத் தைலந்தன்னில் பிரவேலியரைத்து ஒன்று சிமிழில்வைத்து, நிறுத்தியே குருபதத்தைப் பூசித்தேதா நேரான குருபதத்தை நினைவிற்காணே. (66)

காணவே சிமிளெடுத்துக் காறில்வைத்துக், [illegible] பூரணத்தைத் தியானஞ்செய்து, பேண்டிவ ரேசகபூ ரகமுஞ்செய்து [illegible] கும்பகத்தில் நிலதம்போட்டு, [illegible] நினைப்பாரு தொடர்ந்தபினி இடிவிருந்து சொல்லேனப்பா, பூணவே மையெடுத்து கண்ணில்தீற்றப் பொல்லாத தோஷமொடு காசம்போமே (67)

தாமரையின்கொடி-ஆதிக்கேரடி. ஐங்கோலம்-அழிஞ்சித்தைலம்.



காசம்போம் விஷப்பாண்டு கண்டமாலை கபாலவிஷ சூலை முதல் கன்னப்புற்று, பேசவொண்ணு நெஞ்சடைப்பு மூர்ச்சை வாய்வு பின்மூல மின்மூலம் பித்தரோகம், பூசலற்றுச் செய்கின்ற குன்மரோகம் போகாத நோய்களெல்லாம் போவதற்கு வாசமுள்ள மையெடுத்து கிலத்தீற்றி வஞ்சகமாய்க் கண்ணிலிட வாங்கிப்போமே. (68)

போமப்பா வின்னமொரு சேதிகேளு பூவான பூரசத்தின் சேதிசொல்வேன், காமப்பா வைங்கோலத் தைலந்தன்னி லேக்குதர முறுக்கியதைச் சாய்ப்பாயாகில், ஓமப்பா நீர்வற்றிக் கட்டிப்போகு முறப்புமாய் முப்பூவைக் கவசஞ்செய்து, ஆமப்பா வைத்தெருவிற் புடத்தைப்போடு அப்பனே நீயது சுண்ணமாச்சே. (69)

சுண்ணமொரு பணவிடைதான் றேனிற்கொள்ளத் தீராத வெட்டையொடு சூலைபோகும், எண்ணவொண்ணுச் சயமீனிருமல்போகு மெழுந்தபுற்றுக் கிரந்திமுதற் பதினெட்டும்போம், திண்ணமுடன் பித்தமும் பதுவும்போகுந் தீராதபட்சமென்ற வாதம் போகும், அண்ணமென்ற வுண்ணாக்கில் ரோகம்போகு மறையவெண்ணு வியாதியெல்லா நேயமாமே. (70)

நேயமுட னுயர்ந்தக் காயங்கண்டால் நிலைத்ததடா வாத சித்து யோகந்தானும், பாயமென்ற வஷ்டமா சித்திகாணும் பரகான பரலோகம் வெளியாய்க்காணும், காயமென்ற சடமது வழிவோயில்லை கரைகாணு யேமமென்ற பொருள்தான் தோன்றும், மாயமென்ற வுத்தர்களோ காணப்பேற்றுர் மகத்தான மதியமுர்த தேகமாச்சே. (71)

## ஞானம்.

ஆச்சப்பா தேகமென்ற வருளைக்காணு அருளான பூரணத்தி னுறுதிகாணு, பேச்சப்பா பூரணத்தின் பெருமைசொல்வேன், பெருமையுள்ள சதுரகிரி முடியில் சமர்தா, பாச்சப்பா சதுரகிரி முடியைக்கண்டால் பதிவான கொடிமுடியில் குகைதானுண்டு, வாச்சப்பா வக்குகையில் வாசிதேவர் வாசியதி வாசியென்று தவஞ்செய்வாரே. (72)

பூரசம்—சிறுகண்ணாகம். ஆதியந்தம்—அண்டச்சவுக்காரம்.

தவஞ்செய்த சற்குருவாம் வாசிதேவர் தன்மையுட னவர் பதத்தைப் பூசைசெய்து, தவஞ்செய்து தவக்கிரக மறிந்தேனந்த கடுவான மநுக்கிரக மெங்கேயென்றேன், சிவஞ்செய்த சிவமகிமை தன்னாலந்தத் திருவான வநுக்கிரகந்தோன்று மென்றார், பவமான சந்திரொளி தன்னில்நின்று பார்த்தனடா வனுக்கிரகம் பதி வைத்தானே. (73)

பதியான பதியறிந்து பதியிற்செல்ல பாமான வாசியின் மேற் பற்றியேறி, கெதியான மோட்சமென்று சொன்னேனந்த சோதி வனுக்கிரக கிரியையாலே, மதியான பிரபையொளி தன்னிலேறி மகத்தான ரவியொளியி லமுர்தங்கண்டேன், நதியான மதியமுர்த பூரணமேயென்று நன்மையுடன் கண்டுகொண்டு நின்றேன்பாரே. (74)

பாரப்பா பதியறிந்து தலத்தில்நின்றேன் பண்பாக நிற்கை யிலே வாசிதேவர், கேரப்பா மனமகிழ்ந்து வடிவேன்றன்னை நிச்சய மாய் வாராம தேவவென்று, ஆரப்பா வுனக்கீடு சொல்லப் போறே னாதிவா ரம்பனந்தி னருளாக்கண்டாய், காரப்பா சமாதி நிட்டை யோகநிட்டை கருத்துறவே வெட்டிரண்டும்ப தத்தென்றாரே.

பத்தென்று சொன்னவுடன் பற்றிவேதிப் பதியறிந்து பதி யுடனே பத்தைக்கண்டு, சித்தென்று பூரணத்தைச் சிமிழில் வாங்கிச் சிவமான பூரணத்தைக் கையிலேந்தி, சித்தென்று ரண்டு மொன்றாய்க் கூடும்போதில் விளக்கொளியின் றிடமதை யென்ன சொல்வேன், முத்தென்று பூரணத்தைக் கொண்டதாலே முத்த னென்றும் போனேன் முழுகந்தானே. (77)

தானென பூரணமே சமூலம்வாங்கித் தன்மையுள்ள ரவி பிசங் கூடச்சேர்த்து, மனென காயாதி கற்பமென்று வுண்மை யுடன் பாணித்தனிற் பதனம்பண்ணி, சோனென குருபதந்தனைத் தொழுதுபோற்றி குருவான கற்பமென்றா[illegible] தேனென வமுர்தமெனக் கொண்டேனந்த [illegible] கற்பத் தியல்புதானே. [illegible]





## சவர்க்காரச் சுண்ணம்.

இயல்பாக முன்சொன்ன சவர்க்காரத்தை பின்பமுள்ள சுண்ணமதாய்ச் செய்வதற்கு, மயலாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு மார்க்கமுள்ள பழச்சாற்றிற் றோய்த்துத்தோய்த்து, வய மான ரவிமுகத்தில் நவநாட்போடு காய்கின்ற வெண்ணெயெல் லாங் கக்கிப்போகும், செயமான சவர்க்காரந் தெண்ணெய்போலச் சிவசிவா சவர்க்காரங் கட்டிப்போச்சே. (78)

கட்டிநின்ற சவர்க்காரங் கல்வத்திட்டுக் கணக்காகச் சரி யெடையாய்க் காரசாரம், திட்டமுள்ள வீரமுடன் பூரஞ்சேர்த்துச் சிவசிவா யைந்துமொன்றாய்க் கூட்டிக்கொண்டு, சட்டமுள்ள வறு பகைநீர் தன்னாலாட்டிச் சமாசமா யாட்டிநன்றாய் வட்டுப்பண்ணி, திட்டமுடன் ரவிமுகத்திற் காயப்போடு சாம்வற்றிக் காய்ந்த பதஞ் சுக்காம்பாரே. (79)

சுக்காகக் காய்ந்தபின்பு ஓட்டில்வைத்துச் சுகமாக வலு வறிந்து புடத்தைப்போடு, தொக்காகப் புடமாறியெடுத்துப்பாரு சுகமான சுண்ணம்பு யென்னசொல்வேன், இக்காத பொருள்க ளெல்லா மிதிலேயிருக்குஞ் சிவசிவா சரக்குகளுங் கட்டிப்போகும், தக்காத பொருள்களெல்லாந் தக்குந்தக்குந் தயவான சுண்ணமதைப் பதனம்பண்ணே. (80)

பண்ணினதோர் சுண்ணம்பு முப்புவாச்சு பதிவான சவர்க் காரச் சுண்ணமாச்சு, புண்ணியனே வழலையென்ற சுண்ணமாச்சுப் பூமி தனில் விலைவான பூநீறாச்சு, தன்னிமையா யிச்சுண்ணங் காரசுண் ணந் தயவான விங்காரக் கல்லுச்சுண்ணம், இன்னமுள்ள சுண்ண மதிற் செயல்கேளு, திருவான பூரணத்திற் சேர்த்துக்கொள்ளே.

சேர்த்துநன்றாய்ப் பிசைந்துரவி முகத்திற்வைக்கச் சிவ சிவா பூரணத்தின் செயலைச்சொல்வேன், பூத்தமலர் வாசனைதான் பூரம்பூரும் பூரணத்தின் வாசனையைப் புகலப்போமோ, பார்த்தி [illegible] பூரணந்தானெழுகாய்ப்போகும் பக்குவமா யம்மெழுகைப் [illegible] தன்னில் [illegible] சேர்த்திநன்றாய்ப் பாணிதனைப் பதனம்பண்ணித் [illegible] தன்மையுடன் பூரணத்தைப் பணிந்துபோற்றே. (82)

பணித்துமிகப் பூரணத்திற் பணவிடைதான்கொள்ளப் பரமான தேகமதற் குறிவேயில்லே, கலித்துமிக மண்டலமே கொண்டபோது காயமதிற் சட்டைதன்னிக் கசடுபோகும், தனித்துமிக யான்டொன்றிற் சகலசித்தர் தாளுதத் தோன்றுமடா தன்மையாக, முனித்திரண்டு வாண்டுதனி லட்டசித்து முக்கியுடன் றேனுமடா முழுதுர்தானே. (83)

## கட்டுவகைச் செயநீர்.

தானென்ற சவர்க்காரச் சுண்ணத்தோடே தன்மையுள்ள சாரமது பத்துக்கொன்று, மானென்ற கல்லுமதில் மத்தித்தக்கால் மார்க்கமுட னிளகிவரும் பதத்திலமைந்தா; பானென்ற பீங்கானில் வழித்துவைத்துப் பரிதிமுகக் காணும் லரையில்வைக்க, தேனென்ற சலமாகு மைந்தபாரு திறமான காசிபென்ற குப்பிவாங்கே. ()

வாங்கியந்தக் குப்பிதனிற் றெளிவிறுத்து மார்க்கமுடன் மறுபடியும் நிழலில்வைக்க, பாங்குபெற நீர்சொலிக்கு நீயராவாங்கிப் பத்துமுறை யிப்படியே பதமாய்வாங்கி, சாங்கமாய்க் குப்பிதனிற் பதனம்பண்ணிச் சார்வான செயநீரில் வீரம்பூரம், ஆர்க்கிகொண் டேயதிலே பொடித்துப்போட்டு வாகார் ரவிமுகத்தில் வைத்துப்பாரே. (85)

பார்க்கவே ரவியொளிதா னீரிற்சென்று பரிதிநீர் செந்நீசம் செயநீர்மைந்தா, ஏர்க்கையுட னிந்நீர்தான் கட்டுவகை செயநீரெட்டோடு சரக்கையெல்லா மிருத்திக்கட்டு, மார்க்கமுட னிந்நீரைப் பதனம்பண்ணு மகத்தான கட்டுவகை செயநீரப்பா, ஆர்க்குமிதை யன்றியாதே யமர்த்திவென்று மாமீர்த்தின் கருவறிந்து ராமவென்னே. (86)

என்னவே யின்னமொரு செய்திசொல்வே னின்புமுடனுயிர்த்தெட் டிதனைப்போற்றி, முன்னுமே சொன்னசவர்க்காரச்சுண்ண முக்கியமுடன் கல்வத்தி லிட்டுக்கொண்டு, சுண்ணமதற் கெட்டிரண்டு வீரஞ்சேர்த்து அந்தமுள்ள புழுகதுவும் புத்துக்கொன்று, கன்னமமாய்க் கல்வத்தி லரைக்கும்போது தன்மையுட னிளகிமெழு காகும்பாரே. (87)





பாரப்பா மெழுகெடுத்து வுருட்டிநல்ல பதிவான பீங்கானிற் பக்கத்தப்பி, கோப்பா பூரணச் சிமிகைதன்னி லினிவாக வைத்திருக்கச் சலந்தானுறும், வாரப்பா குப்பிதனில் வார்த்துக்கொண்டு மார்க்கமுடன் பின்னுமே வைத்துப்பாரு, காரப்பா விப்படியே பத்துமுறைவைக்க கருவாக வூறுமடா செயநீர்தானே. ()

தானென்ற செயநீரைக் குப்பிக்கேற்றி தன்மையுடன் பதனமதாய் வைத்துப்போற்று, ஊனென்ற விந்துநீ ரிதுதான்மைந்தா வுறுதியுள்ள விந்துநீ ரார்தான்காண்பார், கோனென்ற விந்நீரைச் சரக்கில்மைந்தா கூர்மையுடன் சுருக்கிடவே கட்டிநல்ல, தேனென்ற செந்தூர நிறம்போலாகுந் திறமாக விந்நீரைப் பதனம்பண்ணே. (89)

பதனமுள்ள கட்டுவகை செயநீர்சொன்னேன் பக்குவமாய்ச் செந்தூர நீருஞ்சொன்னேன், விதனமெல்லா நீர்வதற்கு வுப்புச்சொன்னேன், விசையான சவர்க்கார விரிவுகொண்டு பதனமதா யைங்கோலத் தைலஞ் சொன்னேன் பக்குவமாய்ப் பூரணத்தின் வகையுஞ்சொன்னேன், சுதமாக விருப்பதற்கு கற்பஞ் சொன்னேன் நயவாக வின்னமொரு சேதிகேளே. (90)

## மெழுகுவகைத் தைலம்.

கேளப்பா மெழுகுவகைத் தைலந்தன்னைக் கெணிதமுடன் சொல்லுகிறேன் கேளுகேளு, காளப்பா பூர்வமாம் பஞ்சாளில் நலமான வாதியந்தக் கருவைப்பற்றி, வாளப்பா தன்னாலே மார்க்கஞ்செய்து வரிசையுட னிறுத்தலந்தி வைத்துக்கொண்டு, கோளப்பா வாரம்ற் காரசாரங் குறிப்புடனே ரண்டுமொன்றாய் கூட்டிக்கொள்ளே. (91)

கூட்டியொன்றாய் ரவிமுகத்தி லுலரப்போடு கூர்மையுடன் பழச்சாறு விட்டுக்கிண்டி காட்டியொன்று யிப்படியே பத்துமுறை செய்தால் நலமான சாரமடா கட்டிப்போச்சு, நாட்டிகமாய்க் கூடிநின்ற காரத்தோடே நயமாக வாதியந்தக் கருவைச்சேரு, மாட்டிடுவாய் வீரமுடன் பூரமிரண்டு மார்க்கமுடன் கணக்காகச் சேர்த்துப்போடே. (92)

சேர்த்துகன்றாய்ப் பிசைக்துருட்டி வட்டுப்பண்ணிச் செம்மையுடன் ரவிமுகத்திற் காயப்போடு, சார்த்துகன்றாய்க் காய்ந்தபின்பு கலசத்திட்டு கருவாகக்குழித் தைலமிறக்கிக்கொண்டு பார்த்திபனே தைலமதைப் பரணிதன்னிற் பருவமுடன் விட்டொன்றாய்ப் பதனம் பண்ணி, பூத்தமலர் வாசனைபோற் பதனம்பண்ணு புண்ணியனே மெழுகுவகைத் தைலமாச்சே. (94)

## இலதவகைத் தைலம்.

ஆச்சப்பா மெழுகுவகைத் தைலஞ்சொன்னே னப்பனே இலதவகைத் தைலங்கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை கரிசலுப்பு பேணியே கொண்டுவந்து பாண்டத்திட்டு, பாச்சப்பா நன்னீரை விட்டுமைந்தா பக்குவமாய்க் கரைப்போலே வடிக்கொண்டு, காச்சப்பா ரவிதனிலே காயப்போடு கமலமென்ற வண்டமதைப் போட்டுச்சேரே. (94)

சேர்த்துகன்றாய்ப் பிசைக்துருட்டி வட்டுப்பண்ணித் திறமாகக் காய்ந்தபின்பு பாண்டத்திட்டு, சார்த்துகீ குழித்தைலம் நன்றாய்வாங்கிக் கருவைபெறக் குப்பிதனைப் பதனம்பண்ணி, பார்த்திபனே சற்குருவின் பாதம்போற்றி பாரபரத்தி வருள் பெருகப் பருவமாகத், தேற்றிமனம் பூரணமாய் பூரணத்தைலஞ் செப்பாதே தாலிருக்கு தென்றுதானே. (95)

## அஞ்சனத் தைலம்.

தானென்ற இலதவகைத் தைலஞ்சொன்னேன் றன்மையுட னஞ்சனத்தின் தைலங்கேளு, கோனென்ற குருவருளாற் சொல்வேன்மைந்தா குருவான வைங்கோலச் சமூலம்வாங்கி, வானென்ற வளரத்தாற் கண்டமாக்கி மார்க்கமுடன் கல்லுரலி லிட்டுக்கொண்டு, ஏனென்ற வாலுவத்தா லிருப்புக்கோலால் நையவே யிடிக்கையிலே தாரஞ்சேரே. (96)

சேரப்பா தாரமுடன் காரசாரஞ் செம்மையுடன் சேர்த்துநன்றா யிடித்துமைந்தா, ஆரப்பா வைத்தெடுத்து பாண்டத்திட்டு ந்கமாக ரவிமுகத்திற் காயப்போட்டு, காரப்பா நினைத்தேனிங் கின்றிஇன்றி கசித்தெடுத்து நீர்வற்றிக் காய்ந்ததானால், வீரப்பா செய்யாமல் ரவிபிசக்தால் விபரமுட னவ்வளவு சேர்த்துக்கொள்வே

கரிசலுப்பு—பூநீர் உப்பு. ஐங்கோலச்சமூலம்—அண்டச்சமூலம்.



சேர்த்துகன்றாய்க் காசமதி விட்டுக்கொண்டு செம்மையுடன் குழித்தைலம் நன்றாய்வாங்கி, பார்த்திபனே சற்குருவைத் தியானம்பண்ணிப் பதிவான தைலமதைப் பரணிதன்னில், வார்த்துமிகப் பரணிதனைப் பதனம்பண்ணு வரிசையுட னீசனையும் வணங்கிக்கொண்டு, தேற்றிமனர் தறிவாலே யறிவிற்கூடி திகம்பரமாம் மம்பரத்திற் சேர்க்துநில்லே. (98)

நில்லென்று நிலையறிந்து நிலையினின்று நிட்சயமாய் மதியமுர்தம் பூசைபண்ணி, சொல்லொன்றுந் தவராம லறிவிற்கூடி குருவுள்ள வாயிரத்தைப் பூசைபண்ணி, சல்லென்று மடிபிடிக்குஞ் சமயத்தோரை தானகற்றி யவர்களிடம் பேசவேண்டாங், கல்லென்ற கல்லறிந்து களைத்தாண்டி கற்பூர தீபமதைக் கண்ணுற்பாரே. (99)

கண்ணான மனக்கண்ணாந் றன்னைப்பார்த்து கமலமென்ற வாயிரத்தெட் டிதழைப்போற்றி, நுண்ணான மூலமதி லொளியைக் கண்டு வுறுதியுடன் வாசியையீ யொளியிலேற்றி, கண்ணான மூலமதி லாதாரம் கருவான மூலமடா மேலாதாரம், விண்ணான மேன்மூல மாராதாரம் விள்ளூறு றுயர்தர் தனதாம்பாரே. ()

பாரப்பா வாதியந்த மண்டபிண்டம் பகாரர்கள் சிவயோகப் பண்புள்ளோர்கள், கோரப்பா ராமனுட வாக்கியத்தன்னி லிட்சயமாய்ச் சடாதாரக் கோர்வைதோன்றுஞ், சாரப்பா சாரமெல்லாந் தோன்றுமென்று தயவாகச் சித்தர்கள்தா னிர்தநாலை, ஆரப்பா வறிவார்கள் குகைக்குள்வைத்து வழுத்திமிகப் பதனமதாய் வைத்தார்பாரே. (101)

பாரான குகையினிடஞ் சென்றேனைந்த பதிவான சித்தரெல்லா மொன்றாய்க்கூடி, கோரக வாராம தேவவென்றார் சீசுபமா யவர்கள்பதம் பணிந்தேனப்போ, கூறுதபொருளை யெல்லாங் கூறலாமோ கூறினதை செயத்தோர்கள் கண்டாராகில், தோரத யோகியெல்லாந் தேடிப்போவார் செம்மையுடன் கைலாய மிடக்கொள்ளாதே (102)

பரணியென்பது—குப்பி.

கொள்ளாத பொருளையெல்லாங் கூறுவாரை கொண்டருள வேண்டுமென்று கேட்டாரப்பா, நல்லோர்க ளறிந்துகுறை தீர வேண்டி காட்டினேன் சமுசயங்க ளில்லாமற்றான், சொல்லாத விடங்களிலே யிந்தநூல்தான் செலுத்தினவர் கிரகவெடித் திருக்குமென்று, சொல்லாமற் சொன்னதொரு சாபஞ்சொன்னேன் குருவமுள்ள வாயிரத்தைப் பதனம்பண்ணே. (103)

## மாரணத் தைலம்.

பண்ணப்பா வஞ்சனத்தின் தைலஞ்சொன்னேன் பக்குவமாய் மாரணத்தின் தைலங்கேளு, விண்ணப்பா ஞானியென்ற வண்டம்வாங்கி விபரமுடன் கருவெடுத்து வதனேடொக்க, பெண்ணப்பா பேய்சுரியி னஞ்சுகூட்டி பேசாம லஞ்சபர் வூரனங் கூட்டி, நண்ணப்பா கல்வத்தி லிட்டுக்கொண்டு நாட்டிநன்று யரைத்திடுவாய் மெழுகுபோலே. (104)

மெழுகான பதங்கண்டு வழித்துமைந்தா விபரமுடன் பீங்கான்றன் பக்கத்தப்பி, நழுகாமல் ரவிமுகத்தில் வைத்துப்பார்க்க நன்றாகச் சூடேறித் தைலமீறும், குழுகுழுமென்ற தைலமதா யிருக்குமப்பா கூறுகப் புஷ்டியெல்லாங் கரைந்துபோகும், சுருக்கான தைலமா ரணத்துக்காகுந் சுத்தமுள்ள குப்பிதனிற் பதனம்பண்ணே. (105)

பதனமிகவே பதனமதாய் பதனம்பண்ணு பார்தனிலே யின்னூலைக் காட்டாதையா, வதனமுள்ள மகத்துகளுக் கிடறுசெய்யும் வஞ்சகர்க்குச் சங்கார முருத்திரனாகும், விதனமென்ற விதனமெல்லாந் தீர்க்குமிந்த விசையான தைலமடா யார்தான்செய்வார், சதமான கருவிகா ரறியான சங்கற்ப மானதொரு தைலந்தானே.

தானான தைலமடா யார்தான்செய்வார் தன்மையுள்ள சித்தரடா செய்வாரப்பா, வானான கருமான மென்னசொல்வே னறிவொரு வருதிபடா, வுண்மையுண்மை, கோனான குருவருளாற் சொன்னவித்தக் குருவான வாயிரத்தைக் குணமாய்ப்போற்றித் தேனான மதியமுர்தங் கொண்டாலமைந்தா செம்மையுட னட்டசித்தன் கைக்குள்ளாமே. (107)

ஞானிஅண்டம்—கோழிமுட்டை. கஞ்சு—பித்து.



## அட்டசித்துத் தைலம்.

ஆமப்பா மாரணத்தின் தைலஞ்சொன்னே னாகாரவட்ட சித்துத் தைலங்கேளு நாமப்பா சொல்லுகிறே னன்றாய்க்கேளு நலமான காயமடா வெங்காயந்தான், வாமப்பா வாலையைத்தான் பூசைசெய்து மகத்தான மனதில்தா னெண்ணிக்கொண்டு, தாமப்பா தகர்த்துமொரு பாண்டத்திட்டு தவறாமற் காடிவிட்டுக் கலக்கிடாயே. (108)

கலக்கிரவி முகத்தில்வைத்து கருவைக்கேளு கருவென்ற வீரமுடன் பூரஞ்சேர்த்து, பலக்கவொரு குடுப்பிட்டு வடுப்பிலேற்றிப் பிரியமுடன் தீயெரிக்கும் வகைக்கேளு, சலக்காரனாகவே மைந்தாமைந்தா சருகுகம்பு விறகதனாற் றனலேத்தாக்கு, துலங்கமதாய் நீர்வற்றிக் கடுகின்மேலே தோன்றுமடா வெண்ணைநல் லெண்ணைதானே (109)

தானென்ற வெண்ணைதனை வடித்துக்கொண்டு தயவான வகலப்பீங்கான் றன்னிலூற்றி, கோனென்ற சற்குருவைத் தொழுது போற்றிக் குணமாகக் கல்லிட்டுச் சீலைமூடி, மானென்ற ரவிமுகத் தில் வைத்தால் மைந்தா மகத்தான வெண்ணையது குஞ்சாதையா, கானென்ற ரவிபடா திருந்தாலையா கருவான வெண்ணையது குஞ்சம்பாரே. (110)

பாரப்பா குஞ்சிநின்ற வெண்ணைவாசம் பார்க்கவென்று நல்லெண்ணை யிடோயில்லை, காரப்பா வெண்ணையந்த வெண்ணையாகுங் கருக்குருவாய் நின்றதொரு வெண்ணைதன்னை, சேரப்பா மனந்தேறிப் பதனப்பண்ணு சிவசிவா பதனமதாய் வைத்துக்காரு, ஆரப்பா வறிவார்க ளாதியந்த மன்பான வெண்ணைதனைப் பதனம்பண்ணே. (111)

பதனமுட னெண்ணையது பதனம்பண்ணி பக்குவமாய்க் கடுகதுவும் பதனம்பண்ணி, சதமான சற்குருவைத் தியானஞ்செய்து சதாகாலம் பூரணத்திற் சார்ந்துகொண்டு, அதமான பூத்திவைத்தா னகலத்தன்னி யாயிரத்தைத் தானெடுத்து வன்பாய்ப்பார்த்து, சதமான தொழிலெடுத்துச் சகத்தைப்பாரு தூண்டாத மணிவிளக்கின் சுடரைப்போற்றே. (112)

ஐங்காயம்—பிண்டம். சருகுகம்பு—யெட்டிவிறகு

போற்றியே யத்தீப் கடரினின்று பொருளான பரம வெளி தன்னிலேறி, ஆற்றியே பாதார மூலதார மத்திக வாறு வரை யருளைப்பெற்று, தேற்றியே வாசிகொண்டு நிறமாயேறித் திறமாக வாயிரத்தெட் டிதழைப்போற்றி, சாத்துமிக மதியமுர்தம் கொண்டால்மைந்தா கருணையுள்ள பூரணமாந் தேகமாமே. (113)

## சர்வமோகத் தைலம்.

ஆமப்பா வட்டசித்தத் தைலஞ்சொன்னேன் னாகார தின்னமொரு தைலங்கேளு, காமப்பா சொல்லுகிறே னாட்டி லுள்ள நலமான சிவசொர்க்க வலற்றிலைக்கு, தாமப்பா சருவ மோகத் தைலஞ்சொல்வேன் றாணிதனி லின்னாலைக் காட் டாதையா, வாமப்பா மதியாலே மதனோத மனம்பற்றி விளை யாடு மங்கைதானே. (114)

தானென்ற மங்கையடா வங்கமக்கத் தயவான வங்கமடா சீவிசீவி, தேனென்ற சீவியடா வளிப்பச்சை தெவிட்டாத போதமடா சமூலவாங்கி, மானென்ற சமூலமதைக் கண்டமாக்கி மகத்தான கல்லுரலி லிட்டுக்கொண்டு, கோனென்ற கெந்தியுடன் ஞாம்விரங் கூர்மையுடன் சிலசத்தி யொன்றுப்தாக்கே. (115)

தாக்கியொன்றாய் நன்றாக விடித்துகொண்டு தப்பாமற் றுளிதனிற் றேண்டிமைந்தா, பாக்கியமாய் ரவிதனிலே காயப் போடு பண்பாக நீர்வற்றிக் காய்ந்ததானால், தாக்கியே மறு பாண்டத் திட்டுமைந்தா சுகமாகக் குழித்தைலஞ் சுருக்காய் வாங்கி, சோக்கியொரு பாணிதன்னி லிட்டென்றாய் தன்மை யுடன் வாய்மூடிச் சீலைசெய்யே. (116)

சீலைசெய்து பூமிதனிற் சமாதிவைத்து திறமாக மண்ட லஞ்சென் றெடுத்துப்பாரு, மாலையிட்ட தைலமடா அன்னி நல்ல மஞ்சள்நிறம் போலிருக்கு மைந்தாபாரு, வாலையென்ற தைலமடா வென்னசொல்வேன் மகத்தான தைலமடா வாலை யாச்சு, ஞாலமென்ற வாலையடா சொல்லபோமோ சுகமாகத் தைலமதைப் பதனம்பண்ணு. (117)

பாமவெளி—அண்டஆகாயம். அவுரிபச்சை—நாபிக்கொ[illegible]



பண்ணியதோர் தைலவகை யெல்லாஞ்சொல்வேன் பர மகுரு வருளாலே மைந்தாகேளு, உன்னியே மூலமதின் மனதைவைத்து வுறமடா வாசியைநீ யுற்றுப்பண்ணி, சென்னி தனிற் றீபமதில் வாசிபூட்டி திறமாக வாசியினால் மௌனங் கொண்டு, கன்னியே பூரணத்தைப் பூசைபண்ணி சற்கமலத் தாயிரத்தை நன்றாய்ப்போற்றே. (118)

போற்றியே யாயிரத்தைக் காட்டாதையா பூரணமாய் மனதடக்கி யறிவிற்சேர்த்தால், சாற்றிசைக்கு முன்னுடைய சீர்த்தி யுண்டு நாவடக்கமில்லாமல் வெளியிற்போட்டால், பார்த்திபனே யுன்னுடம்பைக் காணமாட்டாய் பஞ்சதனி லக்கினிபோற் பற்றிப் போகும், கூற்றனென்ற மறலியவன் கொடுமைசெய்வான் கூர்மை யுடனாயிரத்தைப் பதனம்பண்ணே. (119)

பண்ணப்பா பதனமிகப் பதனம்பண்ணு பார்தனிலே திருக்குருவைப் பகரவேண்டாம், கண்ணப்பா மனக்கண்ணாற் கனலைத்தாண்டி கருவான வாருதலங் கடந்தப்பாலே, விண்ணப்பா நடுமையம் ரவியின்வீடு மேலான பராபரத்தின் வீட்டுக்குள்ளே, நண்ணப்பா வவ்வீட்டி லொளிதானுண்டு நலமான விண்ணி னொளி யாகாசமாச்சே. (120)

ஆச்சப்பா வாகாய மாதியந்த மங்கமென்றப் பிருதிவியா மங்கமங்கம், ஆச்சப்பா வங்கமென்ற வாதியந்த மருமையுள்ள பொருளதுவும் பேசவேண்டாம், காச்சப்பா ரவியிலொரு கருவைக் கேளு கருணையுடன் கருவான கடுக்காயாகும், பாச்சப்பா புரிவு டனே நீயுமேதான் பதிவான கடுக்காய்ச்சூரணத்தைக்கேளே. ()

## கடுக்காய்ச் சூரணம்.

கேளப்பா கடுக்காயாண் டொன்றதாகும் இருமையுள்ள செங்கடுக்காய் வாங்கிக்கொண்டு, ஆளப்பா வக்கடுக்காய் விரைதான் போக்கி மப்பனே சமூலங்கை வசமேசெய்து, கோளப்பா வாராம லிற்றுக்கிக் குமுறவே யிடித்துநீ பாண்டத்திட்டு, நீளப்பா பழச்சாறு விட்டுநன்றாய் நிட்சயமாய்க் கிண்டிநன்றாய் ரவியில்வையே.

நடுமையம்—மூலாதாரம். ரவிவீடு—சூரியன்வீடு.

வைத்ததவு மறுநினம்நீ வடித்துப்போட்டு மார்க்கமுடன் பின்னுமந்தப் படியேவார்த்து, சுத்தமுட னிப்படியே பத்துமுறை செய்தாற் சுகமான கடுக்காயின் குடலப்போச்சு, பத்தியுடன் குடலமது நீக்கிப்போன பதிவான கடுக்காயின் பொடியைவாங்கி, வெற்றிபெற ரவிமுகத்திற் காயப்போட்டு விசையாகக் காய்ந்தபின்பு வின்னங்கேளே. (123)

கேளடா காய்ந்தபொடி தன்னைவாங்கிக் கிருபையுடன் கல்லுரலி லிட்டுக்கொண்டு, தூளடா போலவுமே யிடித்துக்கொண்டு சுகமான பாண்டத்தி லிட்டுக்கொண்டு, பாளடா போகாமற் காடிவார்த்து பக்குவமாய்க் கிண்டிமது பாண்டத்தூற்றி, கோளடா வாராமற் றெளியவைத்துக் கூர்மையுடன் றெளிவிறுத்துக் குணத்தைக்கேளே. (124)

குணமென்ன வுரைக்கின்ற புஷ்டிவாங்கிக் கூர்மையுடன் பீங்கானில் வழித்துப்போட்டு, கனமென்ன ரவிமுகத்திற் காயப்போடு கசிவான நீர்வற்றிக் காய்ந்ததானால், தனமென்ன விதற்குநிக ருண்டோபிள்ளாய் தன்மையுடன் றூளாகப் பொடித்துப்போடு, மனமென்ன விப்படிக்குப் போதாதென்ன மகத்தான வமுர்தசர்க் கரையுமச்சே. (125)

### வல்லாரைச் சூரணம்.

ஆச்சப்பா கடுக்காய்ச்சூ ரணத்தைச்சொன்னே னன்பாக வல்லாரைச் சூரணத்தைக்கேளு, பேச்சப்பா வொன்றுமில்லை வல்லாரைதான் பேணியே மூலைந்தநேர் ராறுமாதம், கூச்சப்பா வல்லாரை கொண்டுவந்து குணமாகச் சமூலமதா யுலர்த்திக்கொண்டு, மாச்சென்மிகச் செய்யாமல் மைந்தாகேளு மார்க்கமுட யிடித்துத் தூளாகப்பண்ணே. (126)

தூளாகப் பண்ணியதோர் பொடியைத்தானுஞ் சுகமாகப் பாண்டமதி லிட்டுக்கொண்டு, பாளான பசுவின்பா லுழக்கிரண்டு பக்குவமாய்ச் சரியிடையாய்ப் பாண்டத்தூற்றி, காளான மதுசார்ந்து நிறுத்துப்போட்டு கன்னமையுடன் மறுபடியு முன்போல் வார்த்து, கோளான கோளறவே யிறுத்துப்போடு குணமாக்கிப் படியே பத்துமுறைசெய்யே. (127)

கோளறவே—குச்சி, காம்பு நீங்க.



செய்யவே சுசடற்றுத் தய்யவெள்ளை செம்மையுட னிருக்குமடா வல்லாரைதான், பையவே தானெடுத்து ரவியிற்போடு பாலகனே யீரம்வற்றக் காய்ந்ததானால், கையவே கல்லுரலில் மாப்போலப்பண்ணி நன்மையுட னேவிட்டுப் பிசைந்துரைத்து, உய்யவே பீங்கானி லெடுத்துவைத்து வுத்தமனே ரவிமுகத்திற் காயப்போடே. (128)

போட்டுநன்றாய் ரவிமுகத்திற் காய்ந்ததானாற் பொறுமையுடன் றூளாக வரைத்துக்கொண்டு, தாட்டிகமாய்ப் பாவிதனி லடைத்துக்கொண்டு சமாசமாய்ச் சற்குருவைத் தியானம்பண்ணி, வாட்டமில்லா வல்லாரைச் சூரணத்தை வணக்கமுடன் றுன்றேறூழு பதனம்பண்ணி, தேட்டமுடன் வல்லாரை முறைதானப்பா செகத்திலே யாரறியப் போறார்பாரே. (129)

### அண்டச் சூரணம்.

பாரப்பா வல்லாரை முறைதான்சொன்னேன் பாராமாமண்டசூ ரணத்தைக்கேளு, ஆரப்பா வறிவார்க ளண்டக்கூறுவப்பனே யண்டமென்று லார்தான்காண்பார், சேரப்பா நின்றவர்க ளண்டங்காண்பார் நினைவாக வண்டமடா கும்பிடானே, காரப்பா மாங்கிஷத்தோ டெடுத்துவந்து கருவெடுத்து சோற்றோடு பதனம்பண்ணே. (130)

பதனமுள்ள கருவெடுத்துப் பீங்கானுள்ளே பக்குவமாய்ப் பதவழித்து வைத்துக்கொண்டு, விதனமெல்லாந் தானகல ரவிப்ரசத்தை மிக்கவே யெட்டிரண்டு மாகச்சேர்த்துச், சதனமதாய்த் தான்பிசைந்து ரவியில்வைக்க க்ஷணத்திலே தண்ணீர்போற் றுனேயாகுஞ், சுதமான தண்ணீரைப் பாண்டத்தூற்றி சுத்தமாய் மேற்றோட்டை யுடைத்துப்போடே. (131)

போட்டெடுத்து வடுப்பேற்றி யனலெரிட்டி பொருந்திநீர் வற்றமட்டு மெறித்துப்போடு, தாட்டிகமாய்த் தோடெடுத்துக் கல்வத்திட்டு சமர்த்தாகத் தானுருக்கிப் பழச்சார்வார்த்து, மட்டிநன்றாய்த் தானரைத்துக் காடிதன்னில் மார்க்கமுடன் றுனரைத்து மைந்தாகேளு, நாட்டியே பாண்டத்தி லிறுத்துப் போடு நன்றாக வடியினின்ற கப்பிவாங்கே. (132

தும்பிடானே—துளத்துச்சிப்பி. மாங்கிஷம்—மாமிஷம்.

வாங்கியே கல்வத்தி லாட்டிக்கொண்டு மார்க்கமுடன் றெளிவிறுத்துக் கரைத்துமைந்தா, தாங்கியே கரைத்துநன்றா யிறுத்துமைந்தா சமரசமாய் ரவியில்வைத்துத் தெளிவைவாங்கி, சாகுமா யடிமண்டி தன்னைவாங்கி சார்வாக ரவிமுகத்திற் காயப்போடு பாங்குபெற ரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தாற் பால்போலே வெள்ளையென்ற பொடியதாமே. (133)

## அண்ட மெழுகு.

ஆமப்பா வண்டரு ணத்தைச்சொன்னே னாகார வண்ட மெழு கதனைக்கேளு, தாமப்பா தன்னிலையைத் தான்றான்கண்டு சமரசமாய் ஞானியென்ற தலைமையாலே, நாமப்பா சொல்லுகிறோம் ஞானிபண்ட, நாளதுவே சென்றதோ ரண்டம்வாங்கி, வாமப்பாற் றன்னாலே சுத்திசெய்து. மார்க்கமுடன் ரவிமுகத்தி னவாட்போடே. (134)

போடுவது ரவிபீசஞ் செலுத்திநின்றாற் பூரணமாய்க் காய்ந்தபின்பு சொல்லக்கேளு, வாடுவது வேண்டாமே மக்காள்மக்காள் மகத்தான வீரமுடன் பூரஞ்சேர்த்து, நூடுவது வழுரி தன்னி லரைத்துமைந்தா சுகமாக வண்டமதிற் சூட்டிபின்பு தேடுவது அதன்மேலே மூப்புச்சூடு திறமாக மண்ணரைத்துச் சீலைசூடே. (135)

சூடப்பா மண்சீலை வலுவாய்ச்செய்து சுத்தமுள்ள பாண்டமதை யுப்பையிட்டு, போடப்பா வண்டமதை யதன்மேல் வைத்துப் பொருமபடியே மேலுநன்று யுப்பைக்கொட்டி, சாடப்பா மேலோடு பதியமூடிச் சந்துவாய் தெரியாமல் மண்ணுஞ் செய்து, நாடப்பா சமாதிவைப்பா யரைக்குள்ளாக நன்றாக வைத்தபின்பு நாட்டுக்கேளே. (136)

## வாசி.

நாட்டமென்ன நாட்டமுட னூடிப்பாரு நடுவான நாடியடா வந்தமைந்த. தேட்டமுட னந்தமென்ற நாடிதன்னிற் சிவசிவா வாசியைநீ திறமாய்ச்சூடு, நாட்டமென்ன வாசியைநீச் சூடிமைந்தா வரிசையுடன் ரேசகபூரகமும்பண்ணி தாட்டிகமாய்க் கும்பகத்தின் மேலேசென்று தாயான மனோன்மணியைத் தியானஞ்செய்யே. (137)

நடுவேநாடி — சுழிமுனைநாடி.



செய்யப்பா சொல்லுகிறேஞ் சமாதிதன்னிற் செயலாகவிருந்து பூசைசெய்து, பொய்யப்பா போகாமல் மண்டலமூன்றுனாற் போதமாய்க் குருபூசை பொருந்தச்செய்து, மெய்யப்பா வாலைதனைப் பூசைசெய்து மேலான பராபரத்தைக் காணுதற்கு, ஐயப்பா சமாதிதனைத் திறந்துவந்த பாண்டமதைத் தானெடுத்துப் பணிந்துகொள்ளே. (138)

பணிந்துமிகத் தொழுதுகொண்டு பாண்டந்தன்னைப் பக்குவமாய்த் தான்திறந்து மைந்தாபாரு, தணிந்துமிகச் சற்குருவைத் தொழுதுபோற்றித் தாயாரை ரவிமுகத்திற் றிசைகாணவைத்து கனிந்துமிகக் கருணையினாற் கனிந்துகூர்ந்து காயதி கற்பமெனக் கருத்திலவைத்து, அணிந்ததொரு பாண்டமதை யடுப்பிலேற்றி யன்பாகத் தீமூட்டி யெரித்திடாயே. (139)

எரித்தபத மென்னவென்றால் யானைமேலே யேகுமடா வரியது மைந்தாமைந்தா, குறித்ததோர் ரவிதனைக் கண்டால் மைந்தா குணமாகத் தானிறக்கி யாறவைத்து, பெருத்ததொரு மந்திரத்தைத் தியானம்பண்ணிப் பேசாமலுப்புடைத்து வண்டம்வாங்கி, கருத்துறவே கலசமதை யெடுத்துப்பாரு கருவெல்லா மொன்றாகித் திரண்டுபோமே. (140)

திரண்டபத மென்னவென்றால் மெழுகுபோலே செம்மையுடன் றானுருண்டு இருக்குமப்பா, உருண்டதொரு மெழுகெடுத்துப் பரணிதன்னி லுத்தமனே தானடக்கிப் பதனம்பண்ணு, முரண்டகத்தில் மெய்ஞ்ஞான முடிவின்மைந்தா முக்கடரி லச்சடரை முயன்றுபாரு, சுருண்டிருந்த கற்பூர தீபமான சிவசிவா மெழுகதனைப் பதனம்பண்ணே. (141)

பண்ணப்பா பதனமதா யிந்நூலைப் பகாத மூடரிடம் பகர்ந்தா யானால், விண்ணப்பா தகர்ந்திடுமே மெய்தனைச்சொன்னேன் வேதாந்த வாயிரத்தைப் பதனம்பண்ணி, நண்ணப்பா குருவினுட பதத்தைப்போற்றி நலமாக மானுக்கா மகிழ்ந்துகேளு முன்னப்பா வெகுசாபஞ் சொன்னேன்சொன்னேன் முக்காலு மாயிரத்தைப் பதனஞ்செய்யே. (142)

திசைநாள் — எட்டுநாள்.

## பிண்ட மெழுகு.

செய்யப்பா வண்டமெழு கதனைச்சொன்னேன் சிவசிவா பிண்டமெழு கதனைக்கேளு, மெய்யப்பா வண்டபிண்டம் ரெண்டுங் கண்டால் மேலான பரபரத்தைக் காணலாகும், பொய்யப்பா வென்றென்ன வேண்டாஞ்சொன்னேன் பூரணமாய் மனதுகந்து கேளுகேளு, மையப்பா மூலமுத லாதாரம் பாங்கான வாதார மெய்தானப்பாரே. (143)

பாரப்பா மெய்யான பிண்டந்தன்னிற் பக்குவமாய் செஞ்சதனை யகற்றிப்போட்டு, சோப்பா நின்றநிலை சோலைபோக்கி நிச்சயமா யழுகிவிட்டு முன்போலப்பா, சேப்பா ரவிமுகத்திற் காயப்போட்டுத் தினந்தோறுங் குருபதத்தைச் சிந்தைவைத்து, காரப்பா வாயிபுட பாதந்தன்னிற் கருணைபெற வப்புருப்புங் கட்டிப்போமே. (144)

கட்டிப்போம் ரவிமுகத்தி னிலைகாண்வைக்கக் கம்பியுப்பு காரத்தசனை பொன்றாய்க்கிற்குக், கிட்டமுடன் கல்லுரசி விட்டுக் கொண்டு திறமான விருப்புலக்கை தன்னாற்குத்த, புஷ்டிசதை பொய்ருபொப் புளிபோனிற்கும் மிலமாக வீரது சாமமாட்டு அட்டியில் லாமலே பிடித்துப்பாரு வஷ்டதிசை பொன்றுன வருமோப்பாரே. (145)

அருளான வகையொன்று சொல்லக்கேளு வாக்கையுட னிலைதன்னை யார்தான்காண்பார், திருவான வஷ்டிசதை பொன்றாய்ச்சேர்த்து செம்மெழுகு போலவே யிருக்குமப்பா, உருவான மெழுகிதுட வாசங்கேளு, வுற்றகெந்த மலர்வாச முண்மை யுண்மை, கருவான மெழுகெடுத்துப் பரணிதன்னிற் கருத்துறவே யடக்கமதாய்ப் பதனம்பண்ணே. (146)

## சாத்திரம் படிக்கும் விதம்.

பண்ணப்பா வடக்கமதாய்ப் பதனம்பண்ணி பக்குவமா மாயிரத்தெட் டிதனைப்போற்றி, விண்ணப்பா தாளேதி யமுர்தங்கொண்டான் விசையான வாயிபதற் குயிர்தானச்சு, தண்ணப்பா போலவேமே யிந்தநூலைக் காசினியி லொருவரிடங் காட்டவேண்டாம், தன்னப்பா தன்னிலேயைத் தான்றுன்கண்டு தானாக வாயிரத்தைப் பதனம்பண்ணே. (147)

அண்டபிண்டம்—பிரமகிரப்பிடம்.



பதனமதாய்ப் பண்ணினால் ராமன்வாக்கியம் பழுதொன்று மில்லையடா நிசமாமைந்தா, மதனமதா யிந்தநூற் றன்னைப்பார்த்து மனதடங்கிக் குருவுருவை வணங்கிப்பாரு, விதனமெல்லாந் தானுக வாயிரத்தைக்காண விள்ளாத கருக்கமெல்லாந் நன்றாய்த்தோன்று, முதன்மையுள்ள வாயிரத்தை வணங்கிப்போற்ற முத்திதரு மெய்ஞ்ஞான முதலைப்பாரே. (148)

பாரப்பா பரணிதனி லிருக்குமந்த பசுமையுள்ள மெழுகெடுத்துக் கல்வத்திட்டு, ஆரப்பா அறிவார்கள் வீரம்பூர மாகாரசம் வெட்டிரண்டு மாகச்சேர்த்து, காரப்பா கல்வத்தில் மத்தித்தாக் கால் கடுங்கார மானதொரு மெழுகாமப்பா, சாரப்பா விம்மெழுகைப் பதனம்பண்ணிச் சதாசிவத்தி லனுதினமுஞ் சார்த்துவில்லே. (149)

## மை.

சார்த்துமிகப் பிண்டமெழு கதனைச்சொன்னேன் சங்கையுடன் மைவகையைச் சாற்றக்கேளு, கூர்த்துகொண்ட கூர்மையினாற் பூடுவாங்கி குறிப்பொன்று சொல்லுகிறே னன்றாய்க்கேளு, வார்த்துகொண்டு ளமாக மைந்தாநீதான் வகையுடனே வாங்கிதனைத் தியானஞ்செய்து, தேர்த்துகொண்டு ரணகளத்திற் சென்றுமேதான் கிழியொன்ற வட்டகையாக் தங்கத்தானே. (150)

தங்கமென்ற பாத்திரத்திற் சூரிதன்றும் றன்மையுடன் றுனெடுத்து வைத்துக்கொண்டு, அங்கமுடன் வலமிடாய்க் குறிப் பாய்வாங்கி யன்பாக வலபுறத் தங்கந்தன்னிற், பங்கமில்லா விடதுபுறக் கருணைமைந்தா பாத்திரமாய் வெள்ளிதனிற் பதனம் பண்ணி, சங்கையுட னிருவகைப்பாத் திரத்தில்வைத்த சதுரான கருக்கன்ரண்டும் பதமாய்ப்பண்ணே. (151)

பண்ணுவது வெந்தவித மென்றால்மைந்தா பத்தியுடன் கற்பூரம் பொடித்துப்போட்டு, உண்ணுவது ரவிமுகத்தில் வைத்துப்பார்க்க வுருகியது கரிபோலே தண்ணீராகும், நண்ணுவது ரவிமுகத்தி லேத்துகாள்வை காட்டமுள்ள கருக்கன்ரண்டு மையாய்ப் போகும், தன்னிமையாய் வந்தமையை யானைக்கொம்பு தனித்ததோர் சிமிழ்தனிலே பதனஞ்செய்யே (152)

பூடு—திகைப்பூடு. கரு—முப்பு.

செய்யப்பா பதனமதா யடக்கம்பண்ணிச் சிவபூசை குரு பூசை நிசமாய்ச்செய்து, மெய்யப்பா சொல்லுகிறே மாரா தார மேன்மூலா தாரமடா பிரமமாச்சு, பையப்பா பரப்பிரம கமலாசனத்திற் பத்திவைத்த வுறுதியடா சாத்திரசுருபம் பொய்யப்பா போகாது சாத்திரந்தான் பொருளான வாயிரத்தைப் போற்றிக்காரே. (153)

காரப்பா கருணைதரும் கமலவீடு கற்பூர தீபமது தோன் றும்வீடு, சேரப்பா வாசிசத்தி யுகந்தவீடு சினைவாலே சினை வறிந்து நிலக்கும்வீடு, பாரப்பா பரமகுரு புணர்ந்தவீடு பரபர மாய் நிறைந்துநின்ற பரமவீடு ; ஆரப்பா லறிவார்க ளந்தவீடு அம்பரமாய் நின்றதொரு வருபவீடே. (154)

வீடப்பா வந்தரங்க மானவீட்டில் மேலான வீட்டி லொரு விபரங்கேளு, கூடப்பா வெமகூட பருவதத்திற் குரு வான சித்தா பிரம்பெருவ்டு, நாட்டப்பா வுல்ளூரில் வாழ் வாரப்பா நாட்டமென்ன வவர்களுக்கு நயனநாட்டம், தேடப்பா நாட்டமென்ற கமலவீட்டிற் றேனருவி பாய்ந்தடா வமுர்தந்தானே. (155)

தானான வமுர்தத்தைத் தான்றான்கண்டு சங்கையுடன் றானருந்தத் தன்மைகேளு, வானான காயமடா வுறுதியாச்சு வுத்தமனே வாதியதற் குறவுமாச்சு, பூனான மூலமது வதுத்துப்போச்சு பூரணமாச் தேகமெனப் புகலலாச்சு, கோனான குருமகிமை கூறலாச்சு குருவான வட்டசித்து மையைப் பாரே. (156)

பாரப்பா வட்டசித்து மையைச்சொன்னேன் பக்குவமா யறிந்துணர்ந்த பண்புள்ளோர்க்கு, சேரப்பா சின்றபொரு டானேதோற்று சின்மலமாங் கற்பூர தீபங்காணும், ஆரப்பா வறிவார்கள் தீபப்போக்கு வந்தீபங் கண்டவனே பாசகுருக், தோரப்பா தீபகடர் தன்னிற்றோர்ந்து சிந்தைமன தொன்றுள் கருவைக்கேளே. (157)

காமலவீடு—இருதயம்; கற்பூரதீபவீடு—சுழிமுனைவீடு.



## திராவகம்.

கேளப்பா கருவான திராவகத்தின்போக்கு கெட்டியாய்ச் சொல்லுகிறே னுண்மையாக, வாளப்பா மனதறிந்து மனதினின்று மனவாக்குக் காயமதை மருவிக்காரு, ஆளப்பா மனவாக்குங் காயத்தாலே யாயிரத்தெட் டிதமறிந்து வமுர்தங்கொண்டு, கோளப்பா வாராம லமுர்தங்கொண்டாற் குடிலமதுள் திராவ கத்தை யுரைக்கிறேனே. (158)

உரைக்கிறேன் திராவகத்திற் கருவைக்கேளு வுத்தமமா மைங்கோலத் துப்புவுப்பு, தரைக்குமேல் வளர்ந்தவுப்பு யார்தான் காண்பார் தன்மையுள்ள வுண்டையடா மௌனப்பூடு, அரைக் கிறே னப்பூடு சமூலம்வாங்கி யாகார கண்டித்து வுலர்த்திமைந்தா, நிரைக்கிறே னவர்க்கனை தீ யனலிற்புக்கி நீறாக வெந்தபின்பு சாம்பல்வாங்கே. (159)

வாங்கியந்த சாம்பலைக் காடிதன்னில் வரிசையுடன் றான் கரைத்துத் தெளிவைவாங்கி, இங்கியதோர் பாண்டமதிற் றெளிவைக்காய்ச்ச வுறுதியுள்ள வுப்பாச்சு வின்னங்கேளு, பாங்கு பெறுமுன்னிறுத்த புஷ்டிதன்னிற் பக்குவமாய்க் காடிவிட்டுச் சலக்கினைத்தா றாங்கமாய்த் தெளிவிறுத்துக் காய்ச்சிப்பின்பு சம ரசமாய்ப் பத்துமுறை யிவ்வண்ணங்காய்ச்சே. (160)

காய்ச்சியன்று யெடுத்தவப்பு வொன்றாய்ச்சேர்த்து கமல மென்ற பீங்கானில் ரவியிற்போடு, கூச்சமறக் குரவியிற் காய்ந்து தானாற் கூர்மையுள்ள நாதவுப்பை யென்னசொல்வேன், பேச் சான பேச்சில்லை காணப்போமோ பெருமையென்ற மௌன முள்ள நாதவுப்பை, வாச்சுதென்று மனமுறாண்டு செய்யாமற்றான் வரிசையுடன் பரணிதனிற் பதனம்பண்ணே. (161)

பண்ணியதோ ருப்பதிலே பலமோர்மூன்று பாங்கான கல் லுப்பு யிந்துப்போடு, உண்ணியதோர் சாரமுடன் றுருசுந்த முத்தமனே பூநீறு மூப்புச்சண்ணம், தன்மையுட னிடைசரியா யெடுத்துக்கொண்டு தானெடுத்து விடைசரியாய்ப் பெதிகட்டி புண்சுயியனே யிந்தவிடைக் கம்பிசேர்த்து பொடியாகச் செய்த பின்பு புகலக்கேளே. (162)

ஐங்கோல உப்பு—அமுரி மூலப்புளி உப்பு.

கேளடா பொடிசெய்த லவணமெல்லாங் கெடியுள்ள கலசமதி லிட்டுக்கொண்டு, நாளடா புத்தோடு வில்லைபோலே தமர்செய்து வாய்கட்டுவே மேலமூடி, நாளடா சேர்த்ததெல்லாஞ் சீலைசெய்து தான்கவசக் குகைமூடிக் குகையின் மேரில், கோளடா வாராமற் புடம்போற் போற்று குறிப்பாகச் சாமியென்ற மேருவாங்கே. (163)

வாங்கியே விலைப்புகத்திற் றமர்தான்செய்து வகையான குகைத்தமரிற் சேர்த்துமூடி, பாங்குபெற மண்சீலை வலுவாய்ச் செய்து பருதிதனிற் காயவைத்துப் பின்புகேளு, சாக்கமாய்ச் சிவபூசை சத்திபூசை தன்மையுடன் றான்செய்து வடுப்பிலேற்றி, காங்கையிக வேறுமா லெரிப்பாய்மைந்தா கருத்துடனே தானெரித்துக் குருக்கொள்வாரே. (164)

பாரடா குப்பியுட மூக்குக்குள்ளே பன்னீர்போற் றிராவகந்தான் புகையோடொக்க, சாரடா போலவுமே வருகுமைந்தா தன்மையுள்ள சீக்காவில் வாங்குவாங்கு, காரடா இப்படியே திராவகத்தைவாங்கி கனதியுள்ள சீக்காவிற் பதனம்பண்ணி, வீரடா செய்யாமற் குருவைப்போற்றி விபரமுட னின்னமொரு முறைகேளே. (165)

## வெடியுப்புத் திராவகம்.

கேளப்பா வெடியுப்புத் திராவகத்தைக் கெவனமுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு, காளப்பா வெடியுப்பு பலமோரைந்து கலமான சீனமுடன் அரிதுத்தம், நீளப்பா கல்லுப்பு வன்னபேதி கிலையான பூநீறு மொன்றாய்க்கூட்டி, கோளப்பா வாராமற் பொடியாய்ச்செய்து குறிப்பொன்று சொல்லுகிறே னன்றாய்க்கேளே. (166)

கேளப்பா முன்சொன்ன திராவகத்தைவாங்கிக் குருபையுடன்பொடிசெய்து வுப்பிலிட்டு, மாளப்பா சீசாவின்றாய்க் கலசத்திட்டு மார்க்கமுடன் முன்போல வரிசைசெய்து, காளப்பா தினம்பார்த்துக் குருவைப்போற்றி, கன்மையுடன் சிவபூசை சத்திபூசை கோளப்பா வாராமற் செய்துகொண்டு குறிப்பாக வடுப்பேற்றிக் குருவைக்காரே. (167)

பருதியென்பது—சூரியன்.



குருவான சற்குருவைத் தொழுதுபோற்றிக், குணமாக வடுப்பேற்றி யனலைமூட்டி, அருமையுடன் றீயெரிப்பாய் மைந்தாகேளு வழகான திராவகந்தா னிவியோடே, பெருமையுடன் வருகுமடா சீக்கான்றன்னில் புண்ணியனே தானிறக்கி வைத்துக்கொண்டு, உருமையுடன் மனதறிவாய் பதனம்பண்ணி யுற்றசிவ சத்தியைநீ பூசைபண்ணே. (168)

## கல்லுப்புத் திராவகம்.

பண்ணப்பா வின்னமொரு வரிசைகேளு பாங்கான கல்லுப்புத் திராவகந்தான், கண்ணப்பா கல்லுப்பு பலமோபத்து நன்றாக விடித்துத்தூ ளாக்கிக்கொண்டு, தன்னப்பா வெடியுப்புச் சீனக்காரந் தன்மையுள்ள துரிசுடனே துத்தங்கூட்டி, பொன்னப்பா போலிருக்கு மன்னபேதி புரிசமுள்ள பூநீறு மொன்றாய்ச்சேரே. (169)

சேர்த்துநன்றாய்ப் பொடித்ததெல்லா மொன்றாய்க்கூட்டித் திறமாகக் கலசமதி லிட்டுக்கொண்டு, கார்த்துநன்றாய் முன்போலப் பாங்குசெய்து கற்பூர தீபமதைக் கருத்தாய்ப்போற்றி, வார்த்துநன்றா யடுப்பேற்றி யனலைத்தாக்கி வரிசையுடன் பார்த்திருக்க வளமைகேளு, பார்த்திபனே குப்பியுட மூக்கிலேதான் பரியுமடா புகையோடே நீர்தான்பாரே. (170)

பாரப்பா நீரான திராவகத்தைப் பழுதில்லாப் பரணிதனிற் பதனம்பண்ணி, சேரப்பா சற்குருவைத் தொழுதுபோற்றி நிலையான வாசியைநீ நிலைத்துக்கொண்டு, காரப்பா பராபரத்தைக் கருத்துள்வைத்து கருவாய கமலமல ரமுர்தங்கொண்டு, சேரப்பா குருபாதந் தினமேபோற்றிச் செம்மையுட னின்னமொரு கருவைக்கேளே. (171)

## கரியுப்புத் திராவகம்.

கேளப்பா கரியுப்பு பலமோபத்து கெணிதமுடன் சுத்திசெய்து வெடுத்துக்கொண்டு, தாளப்பா வெடியுப்பு சீனக்காரந் தன்மையுட னிந்துப்பு வளையலுப்பு, வாளப்பா துரிசுதுத்தங் காரசாரம் வளமான ரூடனேடு சரியாய்க்கூட்டி, கோளப்பா வாராமற் பொடித்துக்கொண்டு கூர்மையுள்ள பழச்சாற்றி லிசைந்தவையே. (172)

கமலமல ரமுர்தம்—அண்ணாக்கின் அமுர்தம்.

பிசகின்றுப் கலசத்தின் முன்போல்மைந்தா பெருமையுடன் வைபாகஞ் செய்துகொண்டு, அசதியில் லாதிருந்து வடிப்பிலேற்றி யருள்பெருகும் பூரணத்தை யன்பில்வைத்து, இசமான நீட்சையினு லணலைமூட்டிச் செம்மையுடன் குருப்பத்திற் சேர்த்து நில்லு, வசபறவே யனலேற்றி யானிமீதில் வருமுடா திராவகந் தான் வரிசைபாரே. (173)

வரிசையுடன் திராவகத்தை வளமாய்வாங்கி மைந்தனே பீங்கானிற் பதனம்பண்ணி, உரிசையுடன் பூரணத்தை வாங்கி மைந்தா வுன்மனியிற் கற்பூர தீபம்பாரு, புரிசமுட னின் னால்நூல் ஞாபகத்தில்மைந்தா பூட்டாத கருக்களெல்லாம் பூட்டி வைத்தேன், அருமையுட னின்னாலேப் பதனம்பண்ணி யுலைய டக்க மாகவே யெடுத்துப்பாரே. (174)

அரைத்துநன்றாய் வழித்துருட்டி வட்டுப்பண்ணி யன லேற ரவிமுகத்தி லாறப்போட்டு, விரைந்துநன்றாய்க் காய்ந்த பின்பு வரைத்தெடுத்து விபாமுட னோட்டில்வைத்து மேலோ டிட்டு, நிறத்துடனே மண்சீலை வலுவாய்ப்பத்து செம்மையுடன் காயவைத்தார் சொல்லக்கேளு, தரைக்குளொரு குழிவெட்டிப் புடத்தைப்போடு சற்குருவைத் தொழுதுவனல் மூட்டுவாயே. ()

மூட்டியன லேற்றிமன தொன்றாய்நின்று மூன்றுதாஞ் சுற்றிவந்து முன்னேநின்று, தாட்டிகமா யெனக்காக்குந் தாயே யென்று தன்மையுடன் றன்தொழுது தனதாய்நின்று, மாட்டி னதோர் புடமாறி யெடுத்துப்பாரு மகத்தான வமுர்தரசங் கட் டிப்போகும், தேட்டமென்ன விதனைவிட்ட தேட்டமுண்டோ சிவசிவா தங்கமாய்க் களங்கம்பாரே. (360)

பாரப்பா கட்டினதோ ரசத்தைவாங்கி பக்குவமாய்க் குகை தனிலே யுருக்கும்போது, வாரப்பா தங்கமதை நாலுக்கொன்று மாட்டிநன்று யுருக்கிப்பார் மயிலிபோலாகும், காரப்பா வம் மணியைக் கருவைப்போலே கருவான வெள்ளியிலே நாற்றுக் கொன்று சேரப்பா சேர்த்துநன்று யுருக்கிப்பாரு சிவசிவா வெள்ளியெல்லாங் குருவாய்ப்போச்சே. (361)

குருவான வெள்ளியைநீ யெடுத்துமைந்தா குணமாகச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, கருவான செம்பெடுத்து வுருக் கிக்கொண்டு காட்டுவாய் செம்பதிலே நாற்றுக்கொன்று, தருகா மற் றன்கொடுத்து வுருக்கிப்பாரு தூயவான செய்பதுவை யென்ன சொல்வேன், திருவான லட்சுமிப்பெண் வயதைச்சொல்ல செகத் திலே யாரறியப் போறார்தானே. (362)

§ அறுசாமம் என்பது—ஆறுசாமம்.

தானவனாய் நின்றபொருள் தானேயாகுந் தானுமென்ற துதானேதென்றுக்கால், ஊனவனு முறநிபுள்ள காயங்காய முண்மையென்ற காயமடா வெங்காயந்தான், ஈனவனாய் நின்றதோருப்பேயாச்சு, நன்மையுட னுப்பறிந்து வுப்பைக்கொண்டால், கோனவனாய் நீயாகி யுலகுக்கெல்லாங் குருவான சற்குருவா யாவாய்பாரே. (363)

பாரப்பா பரப்பிரம கமலபீடம் பாருலகிற் பீடமதை யார்தான்காண்பார், தோப்பா வப்பீடஞ் சால்கிராமகுந் திறமான சால்கிராம மாயிரத்தைக், காரப்பா வாயிரத்தை வெளிவிடாதே கருத்துறவே மனதறியால் வைத்துப்பாரு, பேரப்பா வப்பேரின் பெருமைகண்டால் பெருமையுட னண்டவரை காணலாமே. ()

காணவே பின்னமொரு கருவைச்சொல்வேன் கைலாச நந்நீசர் கருத்தானப்பா, தோணவே நந்தியென்ற மூலந்தன்னைத் தொடுகுறிபேத லாரறியப் போறாரப்பா, பேணவே சொல்லுகிறே னென்றுங்கேளு பெருமையுள்ள நாதவிந்து காரசாரம், பூணவே காரமுடன் சாரம்ரெண்டும் போக்கான வப்பாச்ச வுப்புமாச்சே.

ஆச்சப்பா வப்புமுப்பு மொன்றாய்ச்சேர்த்து வருமையுள்ள ரவிபீசந் தன்னிற்கூட்டி, பேச்சப்பா போதே மூன்றுமொன்றாய்ப் பெருமையுடன் றுன்கரைத்துக் கலசத்தூட்டி, பாச்சப்பா மேலோடு பதியமூடி பக்குவமாய் ரவிமுகத்தில் வைத்துப்போடு, காச்சப்பா § தசைநாள்தா னெடுத்துக்கொண்டு கருவான கட்டுவகை செயநீர்வாரே. 366)

வார்த்துநீ குழம்பாகக் கரைத்துக்கொண்டு வகையாக ரசமதிலே வார்த்துநீயும், பார்த்திபனே மேல்மூடி சீலைசெய்து பக்குவமாய்க் குழிவெட்டிப் புதைக்கும்போது, கார்த்திகை யாமினியுட் கத்தம்போட்டுக் கலசமதைப் பதியவைத்துக் கருத்தாய்மூடி, போற்றியே மந்திரத்தைத் தியானஞ்செய்து பூரணமென் றேநீயுங் காருகாரே. (367)

§ தசைநாள் என்பது—பத்துநாள்.



கார்த்திகை மண்டலந்தான் சென்றபின்பு கருவான கலசமதை யெடுத்துக்கொண்டு, போற்றியே மேல்கவச மெடுத்துப்பாரு பொல்லாத ரசமதுவும் வாலையாகும், பார்த்திபனே யக்கவசந் தன்னிலேதான் பருவமுடன் கட்டுவகை செயநீர்விட்டு, தேற்றியே முப்பூவுங் கூடச்சேர்த்து சிவசிவா முன்போலக் கவசம் பண்ணே. (368)

கவசமது வலுவாகச் செய்துகொண்டு கருவான கழுதையுட கத்தம்போட்டு, கவசமாய்க் கவசமதை நடுவேவைத்து நன்றாக மணல்பரப்பி நடுவணையைப்போற்றி, தவராசநீர் கருணையதால் விளங்குஞ்சோதி தானவனாய் நின்றதிவன் தானேதோற்றம், பவராசநீர் பொருளதனை லெண்ணக்கார்க்கப் பரப்பிரம வஸ்துவெனப் பணிந்துபோற்றே. (369)

போற்றியே மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு பொன்னிறம்போல் வெண்ணெயதாய்த் திரண்டுநிற்கும், பார்த்திபனே யமுரிவிட்டுப் பதனமாகப் பக்குவமாய்க் கழுவிரவி முகத்தில்வைக்க, தேற்றியதோர் வெண்ணெதனில் நின்றநீரை செம்மையுடன் வைத்தவெண்ணெ திறமாய்க்காணும், தோற்றியந்த ரசவெண்ணெ கத்தவாலை ரூபமுள்ள § வாலையைநீ வணங்கிக்கொள்ளே. (370)

வணங்குவது யமூர்தரச வாலைதன்னை வரிசையுள்ள பரணிதனில் வைத்துக்கொண்டு, இணங்கிவிளை யாடுவது தேகமானவேளையுடைய மாதாவே யென்றுபோற்றி, தனங்கள்விளை வித்தரசவாதத்தில் தான்செய்யுந் தொழில்தனைச் சாற்றக்கேளு, குணங்களொரு மனதாகக் குருவைப்போற்றி குருவான வெள்ளிசெம்பெட்டிரண்டே. (371)

எட்டிரண்டுமாய்ச் சேர்த்துத் தகடுதட்டி யென்மகனே யந்தகட்டில் வெண்ணெபூசி, சட்டமுட னோட்டில்வைத்துப் புடத்தைப்போடு சாரபாகப் புடமாறி யெடுத்துப்பாரு, கட்டான தங்கமடா மகத்தானதங்கங் கருவான தங்கமதை யென்னசொல்வேன், திட்டமுடன் வாலையையா றறியப்போறார் சிவசிவா வயதுபதினாறுகளிதானே. (372

§ வாலையென்பது—சத்தி.

கலைதவறு தின்னமொரு கருவைக்கேளு கருத்தாகும் வெள்ளிசெம்பு பொன்மூன்றொன்றாய், வகைதவறுக் குகைதனிலே யுருக்கிக்கொண்டு மார்க்கமுடன் தகடுதட்டி வைத்துக்கொண்டு, இலைதவறுத் தகட்டில்நவ நீதம்பூசி கிருபையுடன் புடம்போட வென்னசொல்வேன், அலைதவறு வகண்டபரி பூரணமேயாகும் அரகரா யமர்ந்ததொரு வாதியந்தமாமே. (373)

ஆதியந்தப் பொருளறிந்தா லெல்லாஞ்சித்தி அரகரா ஞானமொடு வாதமெய்தும், நீதியுள்ள காயாதி கற்பந்தோன்றும் நிலைதவறு மந்திரங்க ளெல்லாஞ்சித்தி, சோதியெனும் ஞானவொளி தீபஞ்சித்தி சுருபமுள்ள தேகமடா லிங்கமாகும், சாதியெனுஞ் சமாசங்க ளெல்லாந்தானாய்த் தனதுள்ளே தானவனாய்த் தானுவாயே. (374)

வாயாற மந்திரத்தை வழுத்தவேண்டும் மனதாகக் கற்பமுறை கொள்ளவேண்டும், நேயமுள்ள வாசிதனை யறியவேண்டும் நினைவாக யவ்வாசி பற்றவேண்டும், தாயகமாய் வாசியிலே மனதைநாட்டித் தனதான சுழினையிலே சாரவேண்டும், மாயமென்ற §சுழினைவழிக் குள்ளேபுக்கி மகத்தான பூரணத்தில் மருவிச்சாரே. (375)

சார்பறிந்து சாராத மடையர்மெத்த தன்சார்பு நிலையறிந்து சாராமாண்பர், கூறறிந்து குறியறிந்து குறிபிற்சாரான் குறிப்பறிந்து வக்குறியிற் கூடான்பாவி, வேரறிந்து நடுவறிந்து முடியினில்லான் வேதாந்த மின்னதென்று விளம்பமாட்டான், பாரறிந்து நிசமறிந்து பருகமாட்டான் பக்குவங்க ளறியாத பாசசர்தானே (376)

## பாம்பு சித்தர் வாதமுறை

தானென்ற சித்தரிலே பாம்புசித்தர் தனதான வாதமுறை தன்னைக்கேளு, மானென்ற காயமடா சித்தியான வுறுதியுள்ள சித்தனவன் செய்யுமார்க்கம், தேனென்ற வமுர்தமடா தண்ணீரப்பா தெளிவான தண்ணீரிற் பூரச்சுண்ணம், நானென்ற சுண்ணமதிற் கலக்கிக்கொண்டு நடுவான விந்துவடா வென்னைப்பாரே.

§ சுழினையென்பது—சுழிமுனை.



வெள்ளையென்ற பாஷாணக் கட்டிவாங்கி விபரமுள்ள தண்ணீரைப் பாண்டத்தூட்டி, நல்லதொரு பாஷாணக் கட்டி தன்னை நடுவாகத் §தோளேந்திர மாகக்கட்டி, கள்ளையென்ற வடுப்பேற்றி யனலைமூட்டிச் சுருக்காக நீர்வற்ற வெரிப்பாயப்பா, வல்லமையாய் நீர்வற்ற வெரித்துத்தீர்ந்தால் மகத்தான பாஷாணங் கட்டிபோமே. (378)

கட்டினதோர் பாஷாணக் கட்டிவாங்கிக் கருவான நாட்பூவும் விராஞ்சேர்த்து, திட்டமுடன் வாய்நீரா லரைத்துமைந்தா திறமான பாஷாணக் கட்டிக்கப்பி, சட்டமுடன் மண்சீலை வலுவாய்ச்செய்து சாதகமாய்ப் பூப்புடத்தில் முழுக்கட்டாகும், மூட்டடங்கக் கட்டினதோர் பாஷாணத்தை முக்கியமாய்க் கல்வத்திற் பொடித்துக்கொள்ளே. (379)

பொடித்ததொரு பொடிக்குரொட்டி ரசத்தைவார்த்துப் புதுமான கட்டுவகைச் செயநீராலே, விடுத்துமிக மிருசாம மரைக்கும்போது விசையான பாஷாணம் ரசத்தைக்கொல்லும், தடுத்துமிக சாமிரண்டும் மெழுகாய்ப்போகுந் தனதான மெழுகதனைப் பதனப்பண்ணி, கனத்ததொரு வெள்ளீயக் கட்டிவாங்கிக் கருங்குகையி லுருக்கையிலே மெழுகைப்போடே. (380)

போடப்பா யிம்மெழுகைப் பத்துக்கொன்று பூட்டிமிக வுருக்கியதைக் குகைக்குள்மைந்தா, நாடப்பா குகையாறி யெடுத்துப்பாரு நலமான வெள்ளீயங் கட்டிப்போகும், ஆடப்பா வெள்ளீயக் கட்டிதன்னை யப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு, தேடப்பா குகைதனிலே வெள்ளிபோட்டுச் செம்மையுட னுருக்கையிலே கட்டுசேரே. (381)

சேர்ப்பதுதான் வகையென்ன சொல்லக்கேளு திறமான ரெண்டுகட்டு ரெண்டுவெள்ளி, கூர்ப்புடனே ரெண்டுமொன்றா யுருகிப்போனால் குருவான வெள்ளியுடன் கட்டுச்சேர்ந்து, நேர்ப்புடனே யுருகியது மணிபோலாகும் நிச்சயமா யம்மணியை யுடைத்துக்கொண்டு, பார்ப்பதுதான் செம்புருக்கிப் பத்துக்கொன்று பக்குவமாய்த் தான்கொடுத்து வுருக்கிப்பாரே. (382)

§ தோளேந்திரம்—தொங்கவிடுதல்.

உருக்கிமிகப் பார்க்கையிலே வெள்ளிமாற்று வுயர்த்திமிக மாற்றதிக மென்னசொல்வேன், கருக்கான வெள்ளிதனில் நூற்றாக்கொன்று காட்டினால் மாற்றுபதி னாறுமப்பா, திருக்கான வெள்ளிவித்தை யாதிவித்தை திருவான லட்சுமிப்பெண் ணிருக்கும்பிடம், அருக்கான வெள்ளிபுனை ரதிக்கோர்க்கெல்லா மதிவித்தை வெள்ளிவித்தை யறிவாண்பாரே. (383)

## புத்தி.

அதிசீன போதமடா வமுர்தபோத மக்தமிர்த போதமதை யார்தான்காண்பார், கெதியான வமுர்தகலை யறிந்தோர்க்கெல்லாம் கோரான மதியமுர்த பூரணமுமாகும், குறியான பூரணமே தெய்வமென்று கும்பமுனி யெந்தனுக்கு § குறியுங்காட்டி, சரியான நிலைகாட்டி சாஸ்திரமுமீய்ந்து தன்மையுள்ள தேவர்களோடொப்பென்றாரே. (384)

ஒப்பென்று சொன்னவுடன் தேவரெல்லா முறுதியுடன் மனமகிழ்ந்து வுண்மையாக, செப்பமுடன் சிராம தேவரென்று திறமான தசதீட்சை வைத்தாரப்பா, அப்பென்று சித்தவுட னேதமைந்து அருளான சமாதி காயசித்தி, உப்பென்று வுன்னிருக் குருதிசொல்லி யுறுதியுடன் யோகமதிருவென்றாரே. (385)

இருவென்று சொன்னவுடன் பொதிகைமேனி யிருந்தனடா கும்பமுனி தஞ்சமென்று, அருமையுடன் மதியமுர்தந் தன்னைக் கொண்டு அடங்கிமன தடங்கிமனக் குகையைக்கார்த்தேன், வருமையென்ற மனதுள்வைத்து வதட்டுதற்கு வந்தாரே புலத்தியரு மகனேயென்று, உருமையுட னேயழைத்தா ரப்போ தானும் உளமகிழ்ந்து மலரடியி லொடுங்கினேனே. (386)

ஒடுங்கிநிலை தனையறிந்து யருட்பாலிப்பத்து வுபதேச வாக்கிய முடனேசொல்லி, அடக்கநிலை பாடுதற்கு யஷ்டசித்தி அடைவாக யதுபத்த நசங்குறிசொல்லி [illegible] முறை தீட்சைசொல்லித் திடமாக சமாதி கற்பஞ்சொல்லி, நடங்கொண்ட நாதவொளி காட்டிக்காட்டி நன்மையுடனே நின்றுண்டு கொண்டார்பாரே. (387)

§ குறியென்பது—இடம்.



## வாதிகள் பிரட்டு.

பாரப்பா பின்னமொரு சேதிகேளு பாருலகில் வாதிகள்தான் செய்யுமார்க்கம், கோப்பா நின்றநிலை தவறவிட்டு நிச்சயமாகப் § பிலத்திற் சரக்கைக்கட்டி, சாரப்பா வச்சரக்கில் காருஞ்சேர்த்து சுனத்திலே வாதமுறை நாலேத்தாகும், வீரப்பா தான்கொண்டு செய்யும் வேலை விபரமுடன் மாற்றதிகங் காணுதென்னே. (388)

காணுமல் கலங்கிமிக அலைவார்மெத்த காசினியில் கண்டிவினை தீராதப்பா தோணுமல் கருவெடுத்து வாடப்போவான் கருத்திலைத்துச் சரக்குகளை யூதிப்பார்ப்பான், பூணுமல் சரக்குவெரு புகையாய்ப்போகும் புகைத்தவகை யென்னவகை யெதுபயன்பின்பு கோணுத சாஸ்திரங்கள் பொய்யென்றெண்ணிக் குவலயத்திற் சண்டிதான் கூறுவாரே. (389)

ஊர்வசனம் தவறாத குருவைக்கண்டு குணமாக வவர்பதத்திற் பணிந்துகொண்டு, சேர்வசன சிவவசன மாகப்பெற்று நின்றதனும் சகலசித்து கோதாகும், ஊர்வசனம் சொன்னாலும் கேட்கக்கொண்டு அலைவார்க அலகமதி லசட்டுவாதி, பேர்வசனப் பெருமையினும் போனடத்தைப் பேணியே பெற்றவனே சித்தனாமே. ()

சித்தரிலே கும்பமுனி புலத்தியமாமுனியுஞ் செய்பாகங் கைபாகந் தீட்சையாக, பெத்தநிலே யவர்களைப்போ லார்தான்பெற்றார் பேர்பெற்ற வகைவிபரம் பலிப்பாராச்ச, சித்தமுள்ள வயிரத் திருநாதக்கூர் தோன்றுத பொருளையெல்லா தோற்றிவைத்தார், பத்தியுட னன்னூலைத் தேடிப்பார்த்து பகருவாய்க் கண்டவர்கள் பாமரம்பாரே. (391)

பரமான பராபரத்தி னருளைப்போற்றிப் பரமகுரு புலத்தியர்தன் பதமேற்கொண்டு, சிரமான வயிர்தநிலை பெற்றுனாலுஞ் சிவசத்தி சத்திசிவ பூசைசெய்து, திரமாகச் சிதம்பரத்தின் பூசைசெய்தேன் தீர்க்கமாய்ப் பூசைசத்தி திறத்தைக்கேளு, சிவபரமான பூசையைநான் சொல்லப்போமோ வஞ்சமற்ற சிவமென்றே சொல்வேன்பாரே. (392)

§ பிலம் என்பது—குகை.

## சிதம்பர சக்கர தீட்சை,

பாரப்பா சிதம்பரத்தின் தீட்சைகேளு பக்குவமா யாறு வரை கேரேறி, சேரப்பா வாறுவரை குறுக்கேகீறிச் செம்மையுடன் கீறியதோ ரரையைக்கேளு, கேரப்பா யிருபத்தைந் தறையுமாகும் சேர்மையுட னக்தரையி லெழுத்தைக்கேளு, காரப்ப வைக்தெழுத்து பஞ்சபூதங் கருவான பூதமடா ந-ம-சி-வ-ய மென்னே. (393)

என்னவே ந-ம-சி-வ-ய மென்றுபோட்டு எறடா நடு வெழுத்தைப் பிடித்துமாற, சொன்னதோர் சக்கரத்தைச் சூழ மூன்று திருவமுடன் § விந்திட்டு விந்துக்குள்ளே, நன்னவே முதற்சுற்றில் மூன்றிதழைப்போடு நடுச்சுற்றி லிதழி ரெட்டும் போடு, முன்னுன மேற்சுற்றில் முப்பத்திரண்டு மூன்றாற்றிலம்பத்தோ ரிதழுமர்ச்சே. (894)

ஆச்சப்பா ரேகைமேற் கோட்டைவியம்போட்டு அக் கோட்டை தனக்குநால் வாசல்விட்டு, காச்சப்பா கீழ்வாசல் கணபதியின்பீசம் கருணைபெற வட்சரத்தைக் கருவாப்போட்டு, மூச்சப்பா தானொடுக்கு மேல்வாசல்தன்னில் முக்கியமாய் வடுக ஊட பீசம்போட்டு. பாச்சப்பா தென்வாசல் வடக்குவாசல் பத்தியுடன் ரவிமதியின் பீசம்போடே. (895)

போடப்பா வதிர்துவகை யிட்டம்போட்டுப் புத்தியுடன் தேவதைக்குப் புகலக்கேளு, காடப்பா வக்தக்தத் தேவதைகள் தனக்கு நன்மைபெறப் பூசைகை வேத்தியமுஞ்செய்து, கோடப்பா மறவாமற் கோட்டில்நின்று குறிப்பாக ந-ம-சி-வ-ய மென்றுமாறி, ருடப்பா வாசியின்மே லேறிக்கொண்டு திருவமுடன் ரேசகபூ ரகும்பண்ணே. (896)

பண்ணப்பா கும்பகத்தில் பாவித்தேறிப் பக்குவமாய் நக் கென்று செபித்தாயானல், முண்ணப்பா செபித்ததெல்லாம் வசிகாமேயாகு மூவுலகி லனதுசொல் மேலாய்நிற்கும், கண்ணப்பா பசிக்காது பிதுவேருட்சம் காட்டினுள்ளோர்க் கிச்சூட்சம் நவில வேண்டாம், பொன்னப்பா குவித்தாலும் புகலாச்சூட்சம் புத்தியுடன் மோகனத்தைப் புகலக்கேனே. (897)

§ விந்திட்டு யென்பது—வட்டமிடுதல்,



## மோகனம்.

கேளப்பா மோகனத்தைச் சொல்லக்கேளு கெணிதமுடன் சிதம்பரசக்கரத்தைக்கீறி, நாளப்பா சி-வ-ய-ந-ம வென்று போட்டு நன்மையுடன் நடுவெழுத்தை நன்றாய்மாறி, கோளப்பா வாராமற் சக்கரத்தைச்சுற்றிக் குறிப்பாக மூன்றுசுற்று விருத்தம் போட்டு, சூளப்பா விருத்தமதி லிதழ்தான்போட்டு அகமாக மூன்கோட்டைக் கட்டுகட்டே (398)

கட்டியதோ ரக்கோட்டை வாசல்தன்னிற் கருத்துடனே மூன்போலே தேவதைகளிட்டு, திட்டமுட னவரவர்க்கும் பணியே செய்து செம்மையுடன் தானிருந்து சிங்-வங்கென்று, சட்டமுட னுருவேற்றி வாசிதனில்நின்று சமரசமாய் ரேசகபூ ரகும்பண்ணி, இட்டமுடன் கும்பகத்தில் மேவிச்சென்று இருளறுக்கு மெஞ்ஞான தீபம்பாரே. (399)

பாரப்பா தூபமுடன் தீபம்ரெண்டு பக்குவமா யற்புதமே பணிந்துசெய்து, சேரப்பா விபூதிதனை செற்றிக்கிட்டு சேமமுடன்நீயிருக்க வுலகமெல்லாம், வீரப்பா தானொடுங்கி மோகமே செய்வார் விசையான மந்திரத்தின் சித்துமார்க்கம், ஆரப்பா யறிவர்கள் சிதம்பரத்தினேர்மை அரகார நடுவணையின் னுமர்தானே. (400)

## தம்பனம்,

தானென்ற மோகனத்தின் கிரியைசொன்னேன் றன்மையுடன் தம்பனத்தின் மார்க்கங்கேளு, வனென்ற சக்கரத்தில் ய-ந-ம-சி-வ வென்றே யுண்மையுடன் ருனெழுதி நடுவணையை மாறு, மானென்ற நடுவணையை மாறியபின்மைந்தா மார்க்கமுடன் மூன்போலே வரிசையுடனெழுதி, கோனென்ற தேவதைகள் குணமறிந்துபூசி குறிப்புடனேசெய்துவந்தன் கூறுவகைகேளே. ()

கேளப்பா அங்கென்று § திருவுருவைச்செய்து கிருபையுடன் வாசியைநீ திறமாய்க்கூவி, நாளப்பா ரேசகபூ ரகமுஞ்செய்து நன்மையுடன் கும்பகத்தில் மருவிச்சார்ந்து, ஆளப்பா தூபமொடு தீபஞ்செய்து அணைத்திடுவாய் விபூதிதனை யன்பாய்மைந்தா, கோளப்பா செய்துமன துரிமையில்லான் குணமாக மோகமதாய் வணங்குவானே. (402)

§ திருவுருவென்பது—பாவை

வணங்குமடா லோகமதில் மாமோகமாகி மார்க்கமுட னுன்னடியைப் பணிவேனையா, இணங்கியிந்த பாடுவதற் கதிக மோக மிக்குருதான் மந்திரத்தி னின்பமின்பங், குணங்களொரு மனதாகு மொன்றுமில்லை கூர்மையுட னொருமனதாய்க் குறித்துப் போற்றி, மனங்குவிந்து வைங்கெழுத்தை யறிந்துமாறி மகத்தான வஷ்டசித்தங் கைக்குள்ளாமே. (403)

ஆமப்பா மோகமதாய்த் தம்பனமே யாரு மம்பரத்திலோடு கிற வருமையப்பா, நாமப்பா தம்பனத்தை நன்றாய்ச்சொன்னேன் நன்மையுள்ள வைங்கெழுத்தி னுட்டமப்பா, காமப்பாற் கலகிமெ லொன்றுமில்லை கருவான வகாரமடா லெத்தின்கூறு வாமப்பா லகிரிமினுற் சிவனைப்போற்றி வரிசையுடன் சத்தியைநீ வணங் குவாயே. (404)

வாயார மந்திரத்தை யுருத்தவேணும் மனதாகப் பூர ணத்தை வணங்கவேணும், ஓயாமல் வாசியைநீ வணங்கிக்கொண்டு உறுதியுடன் யோகமதி லிருக்கவேண்டும், நேயமுட னுலகமதி லிருந்தாலுந்தான் நிருவிகற்பச் சமாதியிலே நிலைக்கவேண்டும், தாயகமாய்ச் சமாதியிலே நிலைத்தாலுந்தான் தனதாகத் தானவ னாய்த் தன்னைப்பாரே. (405)

## உச்சாடனம்.

பாரப்பா தம்பனத்தைப் பகுத்துசொன்னேன் பயனறிந்து கதியறிந்து புண்பாய்ப்பாரு, வீரப்பா செய்யாம லுச்சாடனத்தைச் சொல்வேன் விபரமுடன் சிதம்பரத்தை விரும்பிக்கீறி, நேரப்பா மேல்வரையில் ந-ம-சி-வ-ய மென்று கீழ்வாகத் தானெழுதி நடு வணையைமாறி, சேரப்பா விருபத்தைத் தரையுமாறிச் செம்மை யுள்ள சக்கரம்போல் விருத்தம்போடே. (406)

போடப்பா விருத்தமதி லிதம்முன்போட்டுப் புத்தியுடன் கோட்டையிலுல் வாசல்விட்டு, நாடப்பா வாசலிலே தேவதை கள்பீசம் நன்றாகச் சமர்ப்பித்து வலாவர்க்கோ, விடப்பா சத்தி செய்து §வமுர்தகறிவர்க்கம் விபரமுள்ள பரமானம் பால்பழங்க ளுடனே, கூடப்பா தான்படைத்துத் தூபதீபஞ் சுகமாகத் தான் செய்து சுருதிபாரே. (407)

§ அமுர்தகறியென்பது—மதுமாமிசம்,



சுருதியென்று லாரறியப் போறாப்பா சுருபமுள்ள சுருதி யடா முன்பின்னேர்ந்து, வருதியினுற் சுருதிமுறை யறிந்துகொண்டு மார்க்கமுள்ள வாசியிலே மனதைவைத்து, சரியையொடு கிரியை யோ கத்தில்நின்று சண்முகமா மைந்தலகில் ஞானதீபம், உரி மையுடன் தீபங்கள் காணவேண்டி யொருமனதாய் ரேசகபூ ரக மும்பண்ணே. (408)

பண்ணியதோர் கும்பகத்தில் அம்-உம்-என்று பக்குவ மாய்ப் பதினாறு உருவேசெய்து, கண்ணியதோர் விபூதிதனை நெற் றியிலிட்டு காலினைத்த காரியமுஞ் சாடாவென்று, வன்னியிலே யனலேற்ற வுலகமெல்லாம் வாய்மனவுஞ் சாடனமா மைந்தா மைந்தா, சென்னியிலே கண்டிறந்து நெற்றிக்கண்ணில் நிக் கொளுத்தி வாசியினூதிப்போடே. (409)

போடப்பா வுச்சாடனத்தை நன்றாய்ச்சொன்னேன் புண் ணியனே மனதறிந்து புகழ்ந்துபாரு, நாடப்பா வாகிருஷ்ணத்தி னுட்டங்கேளு நாடறிந்து சிதம்பரத்தில் வ-ய-ந-ம-சியென்று, விடப்பா தானறிந்து வெழுத்தைநாட்டி மெஞ்ஞான நடுவணையிற் பிடித்துமாறு, கூடப்பா சக்கரத்தில் மாறித்தாலும் குறிப்பாக முன்விருத்த மிட்டுப்போடே. (410)

போடப்பா விதழிருந்த சமயத்தோறும் புத்தியுடன் கோட்டையு நால்வாசலிட்டு, நாடப்பா வாசலிலே தேவதை கள்பீசம் நடுவறிந்துவப்பீச நாட்டிப்பின்பு, கூடப்பா யவரவர்க ளமுதகறிவர்க்கங் கூர்மையுடன் பால்பழமுங் குணமாய்ச்செய்து, விடப்பா பலிப்பதாகும் வாசிபூட்டி விபரமுடன் ரேசகபூ ரகமுஞ்செய்யே. (411)

செய்தபின்பு கும்பகத்திற் றிறமாய்நின்று செம்மையுடன் ஐயும்-கிலியும்- சவ்வென்றேறி, உய்தமுட னேயிருந்து விபூதி சாத்தி உரிமையுட னினைத்ததெல்லாம் கைவசமாகும், தொய்த முள்ள வாகிருஷ்ணத்தின் றுடுக்குமெத்த துருவமுடன் கண்ட தெல்லா நினைக்கச்சித்தி, பைதலர்கள் தனக்குமிதைப் புகலா தையா §பஞ்சா க்ஷரத்தின் பயங்கள்தானே. (412)

§ பஞ்சாட்சரமென்பது—ந-ம-சி-வ-ய ஐந்து அட்சரம்.

தானவனுந் தன்னருளைத் தானேகண்டு தனதான காயமடா வைக்காயத்தான், வனான காயமடா வுறுதிமெத்த வுறுதியுள்ள வாக்கையைநீ யறிந்துகொண்டால், காணாத காட்சியெல்லாங் காணலாகும் கருக்களெல்லா முடிக்கலா மதிவிற்சேர்வான், பூணாத பொருள்முடிக்க விந்நூல்தன்னைப் புத்தியுட னறிதொடுத் தர்தம்பரே. (418)

அந்தமென்று லாரியப் போருரையா வமுர்தாச மதியமுர்த மருந்தைக்கண்டோன், சொந்தமென்ற கிலையறியான் சுருதிகண்டான் § சுருதியுள்ள வாயிரமா மலைக்காண்பான், பந்தமென்ற மலரிணுட பாலைக்கொள்வான் பக்குவமாய்க் கேசரத்தின் பதத்தைக்காண்பான், சிந்தைமல தொன்றுமி யறிவிற்சேர்வான் சிவசிவா கைலாசச் சித்தனுமே. (414)

## வித்துவேஷணம்.

வித்தமுட னுரிருஷ்ணஞ் சொன்னேன்மைந்தா செம்மையுடன் வேஷணத்தைச் செப்பக்கேளு, முத்தியுள்ள சிதம்பரத்தின் வரைகள்தன்னில் முக்கியமாம் வ-சி-ய-ந-ம வென்றுதாக்கி, பத்தியுடன் வேஷணையில் நின்றுமாறி பக்குவமாய் மாறினபின் விருத்தம்போடு, சுத்தமுள்ள விருத்தமிட்டு விதழுமூன்போட்டு துருவமுடன் கோட்டையும் நால்வாசற்போடே (415)

வாசலிட்டுத் தேவதைகள் பீசம்போடு மகத்தான சக்கிரத்தை வைத்துமைந்தா, பாசமுட னெழுதகி பரிமானங்கள் பத்தியுடன் னுன்படைத்துத் தூபதீபம், நேசமுட னர்ச்சனைகள் செய்துகொண்டு நினைவாக ஐயும்-கிலியுஞ் சவ்வுமெய்யேதான், வாசமுடன் பதினாறு வுருவேசெய்து வணக்கமுட னீறெடுத்துப் பூசிக்கொள்ளே. (416)

கொள்ளடா விபூதிதனை நெற்றிக்கிட்டுக் கொண்டபின்பு ரேசகபூ ரகமும்பண்ணி, செல்லடா கும்பகத்தைச் சென்றுதன்மே சிவசிவா கற்பூர தீபம்பாரு, கல்லடா நினைத்ததெல்லாம் வேஷணமேயாகும் கலமான வித்துவே ஷணமாம்வித்தை, மல்லடா வித்தூற் பதனம்பண்ணை மந்திரத்தை யுனக்காக வருள்செய்தேனே (417)

§ சுருதியென்பது—சாஸ்திரம்.



## மாரணம்.

அருளான வித்துவே ஷணத்தைச்சொன்னே னருளுக்கும் புலத்தியர்தன் றவத்தினாலே இருளான மாரணத்தை யியம்பக்கேளு யேகாந்த சிதம்பரச்சக் கரத்தைக்கீறி, பொருளான சி-ய-ம-வ-ந வென்றுபோட்டு புத்தியுட ன்டுவணையைப் பிடித்துமாறி, மருளான மாறினபின் விருத்தப்போட்டு மைந்தனே பிதழ்யோட்டுக் கோட்டைகட்டே. (418)

கட்டியதோர் கோட்டையுடன் வாசலுமிற் கருத்தாகத் தேவதைகள் § பீசம்போட்டுத் திட்டமுடன் சக்கரத்தைச் சுத்திபண்ணிச் செம்மையுடன் னுனிருத்தி செப்பக்கேளு, அட்டாசத்தோட்முதுபல காரவர்க்கஞ் சங்கையுடன் னுன்படைத்துத் தூபதீபம், இட்டமுடன் செய்தபின்பு நீறெடுத்துமைந்தா யேகமனதாய்த் தொழுது ஊதிப்போடே. (419)

ஊதிபிகப் போடுவது வென்னவகையென்று உண்மையுடன் னுன்பேசி வஞ்சகமேசெய்தோர், சாதியிலே யெச்சாதியாருமென்ன சங்கையுட னவன்பேரைச் சுழித்தியிலேநின்று, விதியிலே யவ்வாசி மேலெழுப்பிமைந்தா மேலான தீபமதிலபூதிதனையூதி, சோதியுள்ள தேகமடா தழன்றுமிகநொந்து சுடுகாட்டுக் கதியாகச்சுழன்று தவிப்பானே. (420)

தவித்துமிக விரைந்திலவனுயிர் மாணமாதல் சந்தேகமில்லையடா சங்கையுடன்பார்த்தால், குவித்துவரும் பகைஞருக்குமிப்படியேசெய்தால் குலைகுலைந்து யவர்களுயிர் மாணமேயாகும், செவிக்குமவர் சாபமது யிச்சாபத்திரா தேவதைக ளாறுமுஞ் சிதம்பரத்திற்கெதிரோ, அவிக்குயிர் பிழைக்குமென்று வாரறியப் போரு ரதிகமப்பா மாரணத்துக் கதிகர்தானே, (421)

தாமேதான் றனதாகத் தன்னருளைப்போற்றித் தானிருக்கும் வாசியடா தன்னுயிரேயாகும், ஊனேதா னுயிரான வாசிதனை மைந்தர் உண்மையுடன் னுனறிந்து வாசிதனைப்பார்க்க, கோனேதான் தானவனுங் குறிகாட்டவேண்டும் குறிப்பான யுக்தியில் வித்துமனதொன்றுய் நானேதா னென்றவக நடுச்சுழியிலேற்றி தன்மைபெற வாசியைநீ காட்டிப்பாரே. (422)

§ பீசம்யென்பது—உயிரெழுத்துக்கள்.

## பேதனம்.

பாரப்பா மாரணத்தை நன்றாய்ச்சொன்னேன் பத்திகொண்ட பத்தியினாற் பலிக்குஞ்சித்தி, ஆரப்பா யறிவார்கள் பேதனத்தின் போக்கை அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு நேரப்பா நிதம்பாசக் காத்தைக்கீறி கிட்சயமாம் ஈ-வ-ம-ய-சி யென்று போட்டு, காரப்பா கடுவனையைப் பிடித்துநீயுங் கனக்கக மாரிணபின் கருவைக்கேளே. (423)

கேளப்பா சக்கரத்தைக் கற்றிமூன்று கெனிதமுடன் விருத்தமிட்டு விதம்தான்போட்டு, ருளப்பா கோட்டையுகால் வாசல்விட்டுத் தலங்கவே பவ்வாசல் தேவதைகள்பிசம், வாளப்பா யட்சரங்கள் பிசாசமற்றுன் வணக்கமுடன் முனைமூதி மைத்தா கேளு. ஆளப்பா சக்கரத்தைச் சத்திபண்ணி அதற்குமேல் பிராணப்பிற திட்டைசெய்யே. (424)

செய்யப்பா பழச்சார வர்க்கத்தோடே செம்மையுடன் முப்பழங்கள் பரமாணங்கள், வையப்பா § வஸ்துவுடன் சந்திரனும் வரிசையுடன் முன்படைத்து வணக்கமாக, மையப்பா தூபமொடு தீபங்காட்டு பத்திமன தொங்குகிப் பாத்திற்செல்ல, மெய்யப்பா ரேசகபூ ரகமும்பண்ணி மேன்மைபெறக் கும்பகத்தில் வாசிபூட்டே. (425)

பூட்டியபின் வாசியைநீ நிபந்தேற்றிப் பூரணமா மதியமுர்தம் புகழ்ந்துகொண்டு, தாட்டிகமாய்ச் சர்க்கரை விழிவாங்கித் தன்மையுட னிறனிக்கு தனதாய்நின்றால், காட்டினிலே நினைத்த தெல்லாம் பேதமேயாகும் நன்மையுள்ள பேதனத்தா னென்ன வென்றால், காட்டியதோர் கருக்கிடை கருத்தாய்ப்பார்த்தால் கருவாகக் கண்டபொருள் பேதனமாம்பாரே. (426)

### அஷ்டகருமத் தைலம்.

பாரப்பா வட்டகர்ம மெட்டுக்தானும் பக்குவமாய் மந்திரப்பட்டணமாய்ச் சொன்னேன், ஆரப்பா யறிவார்கள் மந்திரபாடமாகியந்த கடுவனையா லனமந்திரம், காரப்பா மந்திரங்க ளென்ன வென்று கசடர்கள்தான் பேசியே கண்ணிற்காணார், பேரப்பா பப்போதான் மந்திரமாகும் பெருமையுள்ள மந்திரத்தைக் குயிர்தான்கேளே. (427)

§ வஸ்துவென்பது—கள்ளு, சாராயம்.



உயிரான வுயிரறிவு முயிரைக்கேளு உறுதியுள்ள வாதி படா § யேகமாகும், பயிரான யேகமடா பிரமமாச்ச பாலகனே பிரமமென்று லண்டமாச்ச, வயிரான வண்டமடா நிற்றோர்வண்டம் வாய்நிறைந்த வண்டமதி கருவைவாங்கி, தயிரான கருவிலொரு விபரங்கேளு தன்மையுட னிங்கோலத் தைலம்வாங்கே.

வாங்கியந்தத் தயிரோடே தைலஞ்சேர்த்து வன்மையுடன் முன்குழைத்து ரவியில்வைத்து, பாங்குபெற ரவிதனிலே காய்ந்தாலல் பக்குவமாய்க் கருப்பேறி மெழுகாய்ப்போகும், சாங்கமாய் ரவிதனிலே நவநாள்வைக்கத் தன்மையுள்ள மெழுகதுவை யென்ன சொல்வேன், ஆங்கதுகொண் டேமெழுகைப் பாணிதன்னி லவை படக்க மாகவுநீ பதனம்பண்ணே. (429)

### அஷ்டகர்ம மெழுகு.

பதனமுள்ள மெழுகதிலே விபரங்கேளு பக்குவமா யஷ்டகர்மம் பண்பாயாடும், மதனமுள்ள மெழுகதிலே முலைப்பால்விட்டு மத்தித்துச் சக்கரத்தில் வளமாய்ப்பூசி, விதனமெல்லாந் தானகற்றிப் பூசைசெய்ய விரும்பியந்த வசிகரத்துக் குயிரேயாச்சு, சதமான வசிகரத்தா னிலையின்றுடுஞ் சந்தேகமில்லையடா தன்மைபாரே.

### மோகனம்.

தன்மையுடன் மோகனத்துக் குயிரைக்கேளு தருவான மெழுகதிலே தேனைவிட்டு, உண்மையுடன் மத்தித்துச் சக்கரத்திற்பூசி உறுதியுடன் பூசையிலே யுகந்துநின்றால், நன்மையுள்ள மோகனந்தான் நன்மையாகும் நாட்டிலுள்ளோர்க் கிக்கருவை நவிலரதையா, தன்மையுள்ள மனதகற்றித் திருவைநோக்கித் திறமாகும் யஷ்டாங்கந் திறந்தான்பாரே. (431)

### தம்பனம்.

பாரப்பா தம்பனத்துக் குயிரைக்கேளு பதிலான விந்துவுட னமுரிதன்னால், நேரப்பா மையதனை நன்றாயாட்டி நிச்சயமாய்ச் சக்கரத்தில் வளமாய்ப்பூசி, காரப்பா மனோன்மணியைக் கருத்திலவைத்து கசடறவே சக்கரத்தைக் கருத்தாய்ப்போற்றி, கூரப்பா தம்பனமே ஓமென்றுசொல்லி குறிப்பாக வெத்தொழிலுந் தம்பனமுமாமே (432)

§ யேகமென்பது—வெளி, ஆகாயம்.

## உச்சாடனம்.

ஆமப்பா வுச்சாடனத்தைக் குயிரைக்கேளு வாநிமென்ற மெழுகதிலே நாதம்விட்டு, தாமப்பா மந்திக்க ரெண்டுமொன் றாய்த் தடையறவே ரேகித்துச் சக்கரத்திற்பூசி, நாமப்பா சொல் லுகிறே மானதமாய்ப்பூசை நன்மையுடன் செய்து நீ றணிந்தால் மைந்தா, காமப்பா வுச்சாடனத்தை யென்னசொல்வேன் கைகண்ட வித்தையடா கருவிற்பாரே (433)

## ஆக்கிருஷ்ணம்.

பார்க்கவே யாக்கிருஷ்ணத் தாதிகேளு பத்தியுடன் மெழு கதிலே § வாய்நீர்விட்டு, சேர்க்கையுடன் மந்திரித்துச் சக்கரத் திற்பூசி செம்மையுடன் றனிருந்து பூசித்தாக்கால், மார்க்கமுள்ள ஆக்கிருஷ்ணந்தா னதிகமாகும் மகத்தான சித்தியடா வித்தையா கும், ஆர்க்குமிந்தக் கருவதனைச் சொல்லப்போகா அலையடக்க மானதொரு வதிதந்தானே. (434)

## வித்துவேஷணம்.

தானென்ற வித்துவே ஷணத்தைக்கேளு தன்மையுள்ள கருவெடுத்து வித்துவிட்டு, கோனென்ற குருவருளால் மந்திரித்தே தான் குறிப்பான சக்கரத்திற் பூசிமைந்தா, நானென்ற வகம் போக்கித் தியானஞ்செய்து கழுகாமல் வித்துவே ஷணமின்றும், மானென்ற மௌனமடா மகத்தாம்வித்தை மக்களே மனதடங்கி யறிவாற்பாரே. (435)

## மாரணம்.

பாரப்பா மாரணத்திற் கருவைக்கேளு பகைமையுள்ள கரு வெடுத்துப் பகருகின்றேன், காரப்பா கருநாக விடத்தைவாங்கிக் கருவோடே மந்திரித்துச் சக்கரத்திற்பூசி, வீரப்பா செய்யாமல் அக்கினியில்வாட்ட வெகுசுறுக்கு மாரணத்தை யென்னசொல்வேன், ஆரப்பா அறிவார்கள் எட்டுகருவித்தை யலையடக்க மாகநீ யதிர்துசெய்யே. (436)

§ வாயநீரென்பது—உமிழ்நீர்



## பேதனம்.

செய்யப்பா பேதனத்திற் கருவைக்கேளு செம்மையுடன் மெழுகுடனே புழுகுசேர்த்து, பையப்பா கருவுடனே மந்திரித் தேதான் பக்குவமாய்ச் சக்கரத்திற் பதிவாய்ப்பூசி, உய்யவே மனதிலெண்ணிச் செபித்தாயாகி லுருக்கமுள்ள பேதனந்தா னுரு திமெத்த, ஐயனே வட்டகர்ம மாடவென்று லடக்கமுடன் கரு வெடுத்து ஆடுவாயே. (437)

## அஷ்டகர்மச்சிலை.

ஆடுவா யஷ்டகர்ம மெட்டெட்டுக்கு மாறியந்த மான தொரு § சிலையைக்கேளு, நாடுவாய் நமதுருப்போற் சிலையாம்பூடு நன்றான பொற்சிலையா மாண்டொன்றப்பா, தேடுவாய் சிலையைத் தான் கண்டால்மைந்தா செம்மையுடன் றனித்தேதான் வாங்கிப் போடு போடுவா யவ்வேரி லேங்காயத்தைப் பூரணத்தி லுலரைத்து மேலேபூசே. (438)

பூசினன்றாய் ரவிதனிலே நவநாள்வைத்துப் புத்தியுடன் றன்னருகே பதனமாக, கூசிமனந் தளராமல் நிதானத்தாலே குறிப்புடனே பதனமதாய்க் காருகாரு, வாசிமன தொன்றாகக் காத்தால்மைந்தா வகையான வஷ்டகர்மச் சிலைக்குத்தானும், மாசிலா ரவியொளிதா னதிலேசென்று மகத்தான சிலையதுவும் பொம்மையாச்சே (439)

பொம்மையென்ற வச்சிலையை வாங்கிமைந்தா பூட்டுதற்கு பின்னமொரு விபரங்கேளு, நன்மையுள்ள சந்தனத்தைப் பன்னீ ராலே நன்றாகக் கரைத்ததிலே புழுகுசேர்த்து, தன்மையுடன் களப்கஸ் தூரிசேர்த்துச் சந்தனத்தைத் தானரைத்துத் தயவாய் மைந்தா, உண்மையுள்ள சிலையதனை தோய்த்துநீயும் உறுதி யுடன் ரவிதனிலே தசைநாட்போடே. (440)

போட்டுநன்றாய்க் காய்ந்தபின்பு வெடுத்துப்பாரு பொம்மை யென்ற சிலையதுவே யென்னசொல்வேன், தாட்டிகமா யச்சிலையைப் பதனம்பண்ணித் தன்மையுட னீயிருக்கு மொடுக்கந்தன்னில், நாட் டிநன்றாய்ச் சிலைதனக்குத் தூபதீபம் நாலுபுறந் தான்போட்டு வேகமாக, வாட்டமில்லா தீபமது நன்றாய்வைத்து வரிசையுடன் தூபத்தை நன்றுப்போடே. (441)

§ சிலையென்பது—உருவம்.

போடுவது ரெண்டுதிக்க லானபின்பு புத்தியுடன் மறுநாள் தான் பிலேயைப்பாரு, காடுவது முன்னேதா னடக்கும்பாரு கடன் தானும் பாரதியப் போருரப்பா, மூடுவது வச்சிலேதான் மாயாரூப முன்னேறிப் பாயுதற்கு அருக்குமெத்த, கூடுவது பிச்சிலக்குப் பேசைக்கேளு குட்டியென்ற சாதிகுட்டி சாதி யாச்சே. (442)

ஆச்சப்பா சாதியென்ற குட்டித்தன்னை அன்பாக முன் னிருந்தி பதிகனாபம், பாச்சப்பா வதனருகே யிருந்துகொண்டு பத்தியுடன் சரமெடுத்துப் பானஞ்செய்து, பேச்சப்பா பேசா மற் சாத்தைப்பூட்டு பெருமையுள்ள குட்டிவெகு பதிவாய்நிற்கும், காச்சப்பா சாமெடுத்துக் காய்ச்சக்காய்ச்ச கருவேறி யுருவேறிக் களங்கம்போச்சே. (443)

களங்கமென்ற பேர்போன குட்டிச்சாத்தான் கோட்டு முன்னே பாயுமடா கல்தான்செம்மை, உளங்களிய மகிழ்ந் தேற்றிப் பூசைசெய்ய உறுதியுட னிங்கும் வுன்முன்னப்பா, குளங்கமென்ற சாதிகுட்டிச் சாதிசேர்மைக் கூறுகிறே னன்றாகக் கூர்ந்துகேளு, விளங்குகிற சித்திவெகு சித்துக்கெல்லாம் வேனுமடா வஷ்டகர்மச் சிலையைப்பாரே. (444)

பாரப்பா பிச்சிலையைப் பதனமாகப் பக்குவமாய் நீயிருக் கும் § பதியில்வைமைந்தா, ஆரப்பா பதியாம் லடக்கம்பண்ணி அவை யடக்கம் வெகுபதன மைமாசவையா, சீசப்பா சொன்னதொரு புத்தியாலே மெய்மறந்து வெருளியினால் சினக்கருஞ்செய்தால் நீரப்பா நிர்மலமாய் நீதிப்போவாய் நிட்சயமாய்த் தயிதெரிக்கும் நினைவாய்க்காணே. (445)

காணவே வசிகரமோ கனமாத்தம்பனக் கருவான வுச்சா டன மாகிருஷ்ணமாகும், பேணவே வேசனமா மாரணமாம்பேதம் பெருமையுள்ள வெட்டுவித்தைத் தொழிலுக்கையா, தோணவே யஷ்டகர்மச் சிலைகாட்டித் தொழுதகர்மஞ் செய்திடவே வெட்டுமோடும், பூணவே வெட்டுவிதஞ் சித்தியாகும் பொன்னுல கில் நீயுமொரு சித்தனாமே. (446)

§ பதியென்பது—பூசையறை, இருப்பிடம்.



சித்தனாய் நீயிருந்து வுலகந்தன்னிற் செம்மையுட னஷ்ட கர்மச் சித்தைகன்றாய், உத்துணர்ந்து கருக்குருவா லாடுமைந்தா உருதிவெகு யுருதியடா சிலையின்மார்க்கம், புத்தியுள்ள சிவனென் றும் சிலைகாட்டிப் பூலோக மெய்க்கவெகு சித்துவிளையாடும், பத்தியுடன் சற்குருவின் பாதமலர்காணப் பங்கயமா மாயிரத்தி னிதனமூர்தமுண்ணே. (447)

உண்ணவே யின்னமொரு சேதிகேளு உறுதிபெற வாதி யந்த முகந்துசொல்வேன், கண்ணவே குருவுட வுபதேசம் பெற்று நடுவாமே காட்சரத்தை யகந்துபோற்றி, தன்னிலையாய் விந்துகிலே தன்னிலேதான் சார்ந்துமன தொன்றுகித் தனதாய் மைந்தா, முன்னிலையைத் தான்பிடித்து நடுவணையில்நின்று மூர்த் தியுள்ள வகாரமதைத் தினந்தான் போற்றே. (448)

அகார - உகார - திட்சை.

போற்றியதோர் அகாரமது வென்னுசொல்வேன் பூரண மாகி கண்மணியை புகலக்கேளு பார்த்திடவே வகாரமடா விந்து விந்து விந்துவான விந்துவடா சாரமாகும், சாற்றியதோர் சார மது வப்புமுப்புஞ் சங்கையில்லா வப்பதுவுந் தண்ணீர்தண்ணீர், தோற்றியதோர் தண்ணீரே வெண்சாரையாகும் தெளிட்டாத சாரையடா §வமுரிதானே. (449)

தானென்ற யமுரிபஞ்சா க்ஷரத்தைமைந்தா தன்மையுடன் சாமாரி யேற்றினுக்கால், மனென்ற சரமாரி யாண்டிற்றினும் உத்தமனே சயிலமென்ற பேரோயாச்சு, கோனென்ற குருவருளால் யிரண்டாண்டிற்றன் கூர்மையுள்ள யுதகமென்ற பேரோயாச்சு, தேனென்ற சயிலமது யுதகந்தன்னைச் செம்மையுடன் மாறினதால் தேகஞ்சித்தே. (450)

சித்தான தேகமதற் குறுதியென்ன சிவசிவா சிட்டை யென்று வெளுப்பாய்த்தள்ளும், சத்தான சற்பமது வுரித்த போலுல் சந்திரன்போற் பிரகாசந் தானேதோன்றும், வித்தான வித்துவினாற் சித்தியான விசையான தேகமதற் கசைவோயில்லை முத்தான அகாரமந்த யந்திசந்தி முறையறிந்து கொண்டபின்ட பின்னங்கேளே. (451

§ அமுரியென்பது—சுத்த கேங்கை.

இன்னங்கேள் முன்னமே அகாரதீட்சை பின்புமுடனுன் டொன்றிற் செய்ததன்பு, சொன்னமொழி தவறாமற் செய்து கொண்டு சக்கார வடிமூலம் உகாரமாகும், றின்னமுடன் உகாரமதைச் செபித்துப்பார்க்கச் செப்புகிறேன் கண்மணியே கன்றாய்க்கேளு, உன்றனது உகாரமதை யுறுதியாக உத்தமனே மனதுறுதி யாகப்போற்றே. (452)

போற்றியே யுருச்செபிப்பா யத்திசத்தி பூரணமாய் மனதுறுதி யாகி[illegible], [illegible]தற்றியே செபிப்பதற[illegible] உகாரமிடர் திறனுமுடன் சொல்லுகிறே னன்றாய்மைந்தா, தோற்றியுதோர் உகாரமடா ரூபமாச்ச தருவமுள்ள உகாரமது வப்புமுப்பும், பார்த்திடவே வப்பென்று [illegible]ர்தான்காண்பார் பருவமுள்ள தருவிடமா புளியுமாச்சே. (453)

ஆச்சப்பா புளியுறைக்த சற்றீலவாங்கி அப்பனே [illegible]யென்று [illegible] பேச்சப்பா பேசாமல் [illegible]பெருமையுள்ள சுருப்புக் கட்டிப்போகும், யாச்சப்பா கட்டினதோர் வுப்பரியும் பக்குவமாய்ச் சுடமதிந்து பாய்ச்சபாய்ச்ச, மாச்சப்பா போகாமற் றிமுரோக்க மருவிநின்ற தேகமது வுறு[illegible]யாச்சே. (454)

உறுதியுடன் மனதுறுதி யாகியே முத்தமனே [illegible]லமதில் மனதைநாட்டி, உருமையென்ற காமடா சத்திதன்னை உண்மையுட னத்திசத்தி யூகித்தோங்கித்தன், [illegible] வறுமைதனைத் தானகற்றியுமிலமைத்து மார்க்கமுடன் சத்தி[illegible] வருத்திருக்கால், அருதியுள்ள தேகமதின் § சட்டைபோக்கிச் சுடரொளிபோல் தேகசித காயமாமே (455)

ஆமப்பா வச்சிரமிட்ட காயத்தானும் அனாதுக்கும் இருக்கும் அசையாதப்பா, தாமப்பா தன்றுடனே தன்னில்நின்றால் தன்மையுள்ள பூரணமாய் நின்றதையா, நாமப்பா சொல்லுகிறோம் பூரணமேதெய்வம் காட்டிநின்ற பூரணத்தை யயர்துபாரு, காமப்பாற் கனற்பா விரண்டுங்கூட்டிக் கலந்துநின்ற பூரணத்தின் கருவைக்கேளே. (456)

§ சட்டையேன்பது—தோல்.



கருவென்ன வென்றதினாற் சொல்லக்கேளு கண்மணியே யென்மகனே கருவைச்சொல்வேன், தருவென்ன வகாரமடா சிவந்தானுச்ச தனித்துநின்ற உகாரமது சத்தியாச்ச, உருவென்ன சத்திசிவ மிரண்டுந்தன்னை உண்மையுட னொருமனதா யுகந்து கொண்டு, திருவென்ன வுதயாதி தன்னிலேதான் தீர்க்கமுள்ள § அகாரமதைச் செபித்துப்பாரே. (457)

பாரப்பா வுதயாதி யகாரதீட்சை பணிந்தபின்பு மாலையிலே உகாரந்தன்னை, காரப்பா உகாரத்தைச் செபிப்பதாகுங் கருத்துறவே செபிப்பதனாற் காலன்மாண்டான், ஆரப்பா யறிவார்கள் சத்திசிவமிரண்டும் அறிந்துமன துறுதியினா லன்புபூண்டு, நேரப்பா நின்றதோ ரருளைப்போற்றி நேர்மையுடன் சத்திசிவம் ரெண்டுங்காணே. (458)

ரெண்டறிந்து வொன்றறிந்தால் ரெண்டுமொன்று நேர்மையுடன் காலமதில் நினைவாய்க்கண்டு, வொன்றறிந்து வொன்றுவிடத் தன்னைக்காரு வொருமையுடன் மனதுணர்ந்து கார்த்தால்மைந்தா, அண்டர்பிரான் தொண்டர்தனக் கடிமையாகி ஆதியந்தப் பதவியிலே அருளைச்சேர்வான், கண்டதென்ன காலைசிவ மாலைசத்தி கலைதவறா நின்றவனே கருத்துள்ளோனே. (459)

கருத்துறவே முதல்தீட்சை அகாரமாகும் காத்துமிக ஆண்டொன்று செபித்தபின்பு, திருத்தமுட னுகாரமது ரெண்டாந்தீட்சை திருவேற வுருவேறச் செய்தபின்பு, பொருத்தமதா யகாரமுடன் உகாரங்கூட்டி பூரணமாய் மதியமுர்தங் கொண்டால்மைந்தா, வருத்தமென்ற வருத்தமெல்லா மகன்றுபோகும் வாசிநின்ற தீபமதை வணங்குந்தானே. (460)

## ரவிமதிக்குறி—கற்சிப்பி கையாகம்.

வணங்கிநின்ற வாசியது சுடதிற்சென்று மகத்தான அடர்ந்துவு மூலத்தேகும், இணங்கியர்த மூலமதிற் கனல்தான்கொண்டு எழும்புமடா வண்டம்வரை யாவிதானுங், குணங்கமழு மாவியது வாசியாச்ச கூர்மையுள்ள வாசியதற் கொடுக்கக்கேளு, மணங்கமழு மாதியடா வாகாயந்தான் மகத்தான வாகாயம் தன்னிற்கேளே. (461)

§ அகாரம்யேன்பது—சிவன், அறிவு

கேளப்பா வாகாயத் தன்னிலேதான் கிருபையுள்ள மேக
மதாய்த் திரண்டுதையா, வாளப்பா புகையெழும்பி மேகமாகி
மார்க்கமுள்ள மேகமது சாகரத்திற்சென்று, நீளப்பா வாங்கி
மிக வுபரத்தூக்கி நின்றதடா ரவியினுட வன்னீர்தானும்,
காளப்பா வோங்கிநின்ற தலத்தினாலே கசடான வுவர்வாங்கிச்
சுத்தமாச்சே. (462)

சுத்தமுள்ள நல்லதண்ணீ ரென்னசெல்வேன் சுகமாக
வப்பூமி தன்னில்விழுந்து, பத்தமுள்ள வுயிர்ப்பயிருக் குதவியாகி
பார்தனிலே நன்மையதாய்ப் பணிக்குகின்று, சித்தமுள்ளே
தெளிவாகித் தெளிந்துநின்ற சிவசிவா வத்தெளிவை யென்ன
சொல்வேன், வித்தெனவும் விந்தெனவும் பேருண்டாகி மேதினி
யெல் லாம்படைத்து விளங்குந்தனே. (463)

தானென்ற விந்துநீர்த் தைலமாச்சு தன்மையுள்ள ரவி
சேர உவரமாச்சு, கோவென்ற உகாரமது தண்ணீருப்பு கூர்மை
யுள்ள வுப்பதுவும் ரவியின்பின்னே, மானென்ற மதிவிந்து ரவி
தானுச்சு மார்க்கமுள்ள ரவிமதியுங் காரமாச்சு, கூவென்ற
காரமுடன் சாரம்ரெண்டு முண்மையுடன் கண்டுகொண்டு
தெளிந்திடாயே. (464)

தெளிந்துநீ சத்திசிவந் தன்னைப்போற்றித் திறமாக மன
துறுதி யானபின்பு, அளிந்தமன தொருமையினால் யகாரநிட்டை
அவையடக்கஞ் சொல்லுகிறே மதிந்துகேளு, தெளிந்தமன
தானுக்கா லகலநில்லு நேர்மையுள்ள நினைவாக நின்றுகேளு
குளிர்ந்தமனங் குளிராத கல்லுகல்லு கூர்மையென்ற கல்லூன்றி
மவுனமாமே. (465)

ஆமப்பா மௌனமென்ற சிப்பித்தோடு அவையடக்க
மாகநீ கொண்டுவந்து, காமப்பா தெளிந்ததண்ணீர் தன்னிற்
காய்ச்சி நன்மையுடன் சுத்திசெய் தெடுத்துக்கொண்டு, தாமப்பா
யதற்குநிகர் சருகுகூட்டித் தன்மையுட னமுரியினு லரைத்து
மைந்தா, காமப்பாற் கருவியினு லரைத்துவில்லை § கடூரவி
அலர்த்திடுவாய்க் கடுகத்தானே. (466)

§ கடூரவியென்பது—உக்கிரமான, சூரியவெப்பம்.



தானென்ற வில்லைதனை யோட்டில்வைத்துத் தன்மை
யுடன் மேலோடு பதியமூடி, வினென்று நினையாமல் மனதாய்ச்
செய்து விபரமுடன் புடம்போட்டு யெடுத்துப்பாரு, நானென்ற
குருவருளால் மலர்ந்துநின்ற நலமான பற்பமதை யெடுத்துக்
கொண்டு, கோவென்ற யமுரியினாற் கொண்டால்மைந்தா குண
மாகும் யாக்கைவெகு திறந்தான்பாரே. (467)

பாரப்பா வண்டபற்ப யமுரிதன்னிற் பக்குவமாய் மண்ட
லமே கொண்டால்மைந்தா, சேரப்பா நின்றசடந் தன்னிலேதான்
நிட்சயமாய்ச் சட்டைதன்னும் நினைவாய்ப்பாரு, காரப்பா § ஆண்
டொன்றிற் கசடுபோக்குங் கன்மவினை தான்றொலையுங் கனகமாகும்
ஆரப்பா யறிவார்க ளண்டக்கூறு ஆதியென்ற வண்டமடா
மௌனமாமே. (468)

மௌனமென்ற வடிநடுவு முடிவுஞ்சொல்லி மார்க்கமுடன்
செய்பாக வகையுஞ்சொல்லி, கவனமுடன் காலவர்த்த மானஞ்
சொல்லி கருவேற புருவேறக் கருத்துஞ்சொல்லி, கெவுனமுடன்
கேசரத்தின் கிருபைசொல்லி கிருபையுட னீயிருக்கத் தலமுஞ்
சொல்லி தவனமில்லாச் சங்கைகளை யெடுத்துக்காட்டித் தன்மை
யுட னுண்மையெல்லாஞ் சாற்றினேனே. (469)

சாற்றியதோர் கும்பமுனி தலத்தாற்சொன்னேன் சங்கை
யுள்ள வாயிரத் திருநூறுக்குள், தேற்றியதோர் கற்பமுறை நன்
றாய்ச்சொன்னார் செய்பாகங் கைபாகஞ் செம்மையாகப், / பார்த்
திடனே பக்குவமாய்ச் சொன்னேனையா பக்குவத்தை யானறிந்து
பத்தியாகப் நாற்றிசையு முள்ளசித்தர் மெச்சிக்கொள்ள நலமாக
வாயிரமாய்ப் பாடினேனே (470)

பாடினே னிந்நூலின் பலத்தையெல்லாம் பத்தியுட
னூலெடுத்து நீயுங்கண்டாய், நாடினதோர் கருவெடுத்து நன்றா
யாடு நாட்டிலுள்ளோ ரறியாமல் நயந்துபார்த்தால், கூடின
தோர் குறிப்பெல்லாங் குணமாய்த்தோற்றுங் குறிப்பாக
வின்னமொரு விபரங்கேளு, ஆடினதோர் திருநடனத் தாதியான
வரகாந குருவருளா லறிந்துபாரே (471)

§ ஆண்டுயென்பது—வருடம்.

## நவக்கிரகம்—ரவிமதி.

பாரப்பா வின்னமொரு கருவைக்கேளு பரிவான நவக்கிரகந் தன்னிலேதான், சேரப்பா ரவியுடனே நிலவிரண்டும் சேர்மையுள்ள கண்களிரண்டும் நேத்திரமாச்சு, காரப்பா நேத்திரமென்ற விரண்டுகண்கள் கருவான ரவிமதியுமானவாறு, ஆரப்பா ரவிமதியு மறியப்போமோ அறிந்தவனே மெஞ்ஞானி யருள் தான்பாரே. (472)

அருள்கான மதனிலொரு விபரங்கேளு அப்பனே கண்ணதிற்கு கருவைவாங்கி, மருணமற் கல்வமதில் வைத்துக்கொண்டு மார்க்கமொடு கோசமுடன் பிசைந்துசேர்த்து, கருவான வைங்கோலத் தைலந்தாலே மழற்றிமிகத் தானரைத்து வழித்துமைத்தா, உருளாமல் மணற்றிமாய் நின்றுகொண்டு நமெனவே விழிதனிலே வைத்துப்போற்றே (473)

போற்றுவது தன்மைமதாய் வைத்துப்போற்றி பொருளான பூரணத்தைப் புசித்தேதான், சாற்றலி ரேசபூ ரகமும் பண்ணிக் கமலமலர்க் கும்பகத்தி லுறுத்தைவைத்து, காற்றினையு மெய்க்கவே நிலதம்போடு நாடுகள் தனில்வரும் நாதரக்கனெல்லாச், தோத்திரமா புனதுபதம் பணிவார்மைந்தா சமமாக வின்னமொரு கருவைக்கேளே. (474)

## மெய்க்குறி யஞ்சனம்.

கேளப்பா மங்களமும் புதனிரண்டு சேர்தவகை யதுசரிக்கும் மூக்கோமாரும், நாளப்பா மூக்குமேற் கண்ணதுமேழ, நலமான மஞ்சனிறக் கருவேதானாம், ஆளப்பா மக்கருவை புத்திகொண்டு அவையடக்க மாகி யதிக்குவாங்கி, கோளப்பா வாரமற் கல்வத்திட்டுக் கர்மையுட னேங்கோலத் தைலம்வாங்கே. ()

வார்த்துகன்றாய் மத்திக்கும் போதிலேயா வரிசையுடன் புழுகுசாந் சேர்த்துநீதான், போற்றியே பதனமதா யரைக்கும்போதிற் § பூரணத்தின் கிருபையினால் மையாய்ப்போகும், ஏற்றியதோர் மையெடுத்துக் கெமிழில்வைத்துக் சக்கமைக்காய் பாமரு நாளைப்போற்றி, பார்த்தியனே பொருமணதாய் நின்றுகொண்டு பக்குவமாய் ரேசபூ ரகமும்பண்ணே. (476)

§ பூரணத்தின் கிருபையென்பது—வாலையின் சகாயம்.



பண்ணப்பா கும்பகத்திற் பதிவாய்நின்று பக்குவமாய் மையெடுத்துக் கருவைத்தீத்து, கண்ணப்பா மேல்நோக்கிப் பார்க்கும்போது கருத்தாகத் தோற்றுமடா காட்சியெல்லாம், வின்னப்பா தானோக்கிப் பார்ந்தாயானால் மேலேழு லோகமெல்லாம் மெய்யாய்க்காணும் தண்ணப்பா தன்னொளியிற் சகலசித்தும் தன் மயமே யல்லாது தன்னைப்பாரே (477)

## காதுநஞ்சுக் கரு.

பாரப்பா வின்னமொரு கருவைக்கேளு பத்தியுள்ள குரு வெள்ளி கர்தகாது, காரப்பா காதுநஞ்சுக் கருவைச்சொல்வேன் களிபோலே திரண்டுநிற்குஞ் சிவப்பாய்க்காணும், ஆரப்பா யதிவார்கள் செவியில்நஞ்சு அந்தநஞ்சு தஞ்சுவகை யறிந்துவாங்கி, சேரப்பா லைங்கோலத் தைலஞ்சேர்த்துச் செம்மையுட னரைக்கையிலே புழுகுசேரே. (478)

சேர்த்துமிகத் தானரைத்து வழித்துவாங்கித் திறமாகச் செமிழ்தனிலே பதனம்பண்ணி, போற்றிமிகத் தான்வணங்கிக் குருவைப்போற்றி புத்தியினால் ரேசபூ ரகம்பண்ணி, பார்த்திபனே கும்பகத்திற் பதிவாய்நின்று பத்தியுடன் மையெடுத்துத் திலதம்போட்டு, கார்த்திகை நாலுதிக்கும் பார்த்தாயானால் கண்கெமிட்டும் போதில்பார் தாளத்தோற்றம். (479)

தோற்றியதோர் பாதாளத் தாலதானேடுச் துருவமுடன் தன்னில்வெகு § நிதிகள்காணும், தோற்றியதோ ரன்னிதியைப் பார்க்கவேண்டாம் திறமாக மைவழித்துச் செமிழில்வைத்து, ஆற்றியதோ ரூபசித்து மின்னங்கேளு, அரகரா வாயிரத்தி னருமைதானும், பூத்தமலர் வாசனைபோற் கிரகசித்து புகழுகின்றோம் புத்தியினாற் கேளுகேளே. (480)

## கிரகசித்து.

கேளப்பா சனியினுட கிரகமேது கேசாத்தி யுச்சியாம் வாக்குவாக்கு, நாளப்பா யவரவர்க்கு நாக்கிலேதான் நலமான சாலவதியு மிருந்தான்பாரு, தேமப்பா யவனிருந்த வீட்டைப்பாரு செம்மையுடா வெண்மையுள்ள விதழிலேதான், சூளப்பா யமுர்தாசர் தங்கிநிற்குஞ் சத்தியுட னந்தரசம் வழித்துவாங்கே ()

§ நிதியென்பது—புதையல்.

### நிலத லிங்கம்.

வாங்கியதோர் ரசத்தோடே தைலஞ்சேர்த்து வன்மையுள்ள புழுகிட்டு மத்தித்தேதான், பாங்குபெற ரவிதனிலே பொருகான் வைத்துப் பத்தியுடன் மறுநாள்தா னெடுத்துப்பாரு, சாங்கமாய் மைபோலே திரண்டுநிற்குஞ் சாதகமாய்ச் சிமிழ்தனிலே பதனம் பண்ணி, பூங்கமல மாதுசகச் சோதியென்று புத்தியுடன் நிலத மிட்டு வணங்கிநில்லே. (482)

வணங்கியே நிற்கையிலே மாதாசச்சோதி வாலைவய தாமு னாது மனதிடமேநிற்பாள், இணங்கியவன் பாதமதைத் தொழுது கொண்டா விருதயத்தில் சகலகருப் பொருள்களோன்றும், குணங்களொரு மனதாகிக் குவிக்குகின்றால் கூறுவாள் வேதமொடு சாத்திரங்களெல்லாம், மணக்கமழு மாதாசாச் சோதிநின்று வச னிப்பா ளவ்வசன மேலதாமே. (483)

ஆமப்பா :சச்சோதி திருக்கத்தாலே அடங்காத § வாரிதி போ லமுர்தமுறும், தாமப்பா தன்னருளா லமுர்தங்கொண்டால் நிலைவினையுந் தலைவியையுங் காட்டிவிப்பாள், நாமப்பா நவக்கிரகங் குறிப்பைகன்றாய் நலமாகப் பார்த்தவனே சிவன்முத்தன், காமப் பால் வேகத்தாற் கிரகத்தன்னைக் காராட்டாற் கருத்தறிந்த கழுவை மாடே (484)

மாடான பசுவுக்குப் பதிதான்பாச மார்க்கமுடன் பாச பதி பசுவுக்காகும், நாடான பசுபதியாம் பாசமூன்றும் நல் லோர்கள் தானறிந்து நாட்டம்பார்ப்பார், வாடாதமுப்பொருளு மூன்றேயுப்பு வாசமுள்ள முப்பூவை யார்தான்காண்பார், சேடான சிவசக்தி பூசையோர்கள் சுழிமுனையின் சுடரொளியிற் காண் பாண்பாரே. (485)

### இராகுவின் பதி.

பாரப்பா இராகுவின் பதியைக்கேளு பதிவான கிரகமடா லிங்கலிங்கம், ஆரப்பா வறிவார்கள் சுயம்புலிங்கம் அந்தரத்தில் நடுவான வாதிலிங்கம், நீரப்பா நிறைந்துவரும் அமுர்தலிங்கம் நீள் புவியிற் சாரசரங்க ளடைத்தலிங்கஞ் சாரப்பா லிங்கமென்ற அங் கந்தன்னைச் சதாகாலந் தொழுதுநின்று அறிவாய்கில்லே. (486)

§ வாரிதியென்பது—கடல்.



அறிவான தலமிதுதான் யார்தான்காண்பார் அப்பனே யத்தலத்தில் ராகுவாழ்வார், குறியான ராகுவின் னமுதர்வசங்கிட யத்தலத்தில் ராகுவாழ்வார், குறியான ராகுவின் னமுதர்வசங்கிக் குணமாகக் கொள்வதற்கு விபரங்கேளு, நெறியான தலமறிந்து வாசிபூட்டி நினைவாக ரேசகபூ ரகமுஞ்செய்தால், பறியான கும் பகத்தி லமுர்தம்நின்று பாயுமடா லிங்கமதின் சிரசிற்றானே. ()

சிரசான வமுர்தமதைக் கொண்டால்மைந்தா சிக்கெனவே யமுர்தரசம் ரவியிற்சேரும், உரமறிந்து ரவியினுட யமுர்தஞ் சேர்த்தால் உத்தமனே யுன்னுடம்பு குளிர்ச்சிகாணும், நிறமறிந்து பக்குளிர்ச்சி கண்டபோதே நீமகனே யட்சரத்தை நினைவாயோது, சாமறிந்து வோதினு லாகாயத்தான் சாய்கைநிழ லத்துவச்சிர தேகமாமே. (488)

### அமாவாசி.

ஆமப்பா சதுர்த்தசி விரதமாகி அப்பனே மறுநாள்தான் யம்மாவாசி, தாமப்பா யமாவாசி தன்னிலேதான் தருவான § யமுர்தமதைத் தணிந்துகொள்ளு, காமப்பா சொன்னபடி யம் மாவாசி நலமான நாள்தனிலே யமுர்தங்கொண்டால், காமப்பா தன்னருளாற் கவுனசித்துக் கைகண்ட சித்திதான் கருதிப்பாரே.

கருத்தறியாக் காமியற்குக் கருவங்கேது காலறியா மூடருக்குக் கண்ணங்கேது, உருத்தறிந்து வொப்பனையை யறியார் மூடர் உலகமதில் வாசமதா யுருண்டுபோவார், திருத்தமுட னின்னுலா யிரத்தைக்காணுர் சிவசிவா சிவவேட மறியாமாந்தர், வருத்தமுட னுலகமதிற் றிரிந்தலைந்து வணக்கமில்லா நிணக்க மதில் மாளுவானே. (490)

### கேதுகிரகம்.

வாளுன கேதுவின் கிரகந்தன்னை வரிசையுடன் சொல்லு கிறேன் மைந்தாகேளு, ஊனுன மூலமடா வபானந்தன்னி லோங்கின்ற வண்டமடா கிதமாச்சு, தேனுன கிதமடா கேதுவுட வித்து தெவிட்டாத கேதுவின் வித்தைவாங்கி, கோனுன ரவிபிசங் கூடச்சேர்த்துக் கூர்மையுடன் ரவிமுகத்தில் வைத்துப்பாரே. ()

§ அமுர்தமென்பது—மதிப்பால்.

பாக்கவே கேதுவுட வித்துதானும் பக்குவமாய் ரவிபீசங் கூடச்சேர்த்து, ஏர்க்கவே மெழுகாகு மைந்தாகேளு பின்புமுடன் அம்மெழுகைத் தினமுங்கொண்டால், மார்க்கமுள்ள தேகமதிற் காந்திமீறி மகத்தான போதையைனு மென்னசொல்வேன், தீர்க்கமுள்ள போதையிலே நின்றுதேர்ந்தால் திவ்வியமுள்ள கயிலாயத் தேகமாமே. (492)

தேகமென்ற வகமதனை யறிந்துகொண்டு தீர்க்கமுள்ள வறுசுவையிற் பாகங்கண்டு, பாகமென்ற வறுசுவையை யகற்றியும் பக்குவமாய்ச் சுவையறிந்து பணிந்தாயானால், தாகமென்ற பசிதாகந் தானேதானுய்த் தன்னுள்ளே யடங்குமடா விஞ்ஞைப்பாரு, ஆகமென்ற கவக்கிரகம் நன்றாய்த்தோன்றும் அரகார விரகமதி லமர்ந்துநில்லே. (493)

அமர்ந்ததொரு சவக்கிரகந் தனக்குமேலே ஆறியென்ற மனுக்கிரம் பார்தான்காண்பார், சமர்ந்தபிணம் போல்திரிவார் விரகங் காணுர் சுருதியுள்ள விரகமதைச் சொல்வேன்மைந்தா, சமர்ந்த மன மாய்கையையுநீ யகலத்தள்ளி சலமாக புத்தியைத்தா னூட் டங்கண்டு, சமர்ந்தமர்ந்த மனுக்கிரகந் தன்னிலேதான் சதாசிவ மனோன்மணியைத் தான்காண்பானே. (494)

காணப்பா § மனோன்மணியைக் கண்ணுறக்கண்டு கருணை பெற்ற யவள்பதத்தைப் பூசைபண்ணி, பேணப்பா மனுக்கிரகந் தன்னில்நின்ற பெருமையுள்ள நாதமதை வாக்கிமைந்தா, தோணப்பா வண்டாவண்டத்திடைதனிலேசேர்த்துச் சுருக்காக நசி முகத்தில் வைத்துப்பாரு, தோணப்பா தன்னிறம்போல் மெழு காய்ப்போகுந் தெவிட்டாத மெழுகைவைத்துப் பூசைபண்ணே. ()

பூசையென்ன தூபமுடன் தீபங்காட்டிப் புகழுடனே மனதுகந்து பூசிப்பாய், ஆசைவைத்து மெழுகுபண விடைதான் கொண்டால் அரகார வாக்கையதற் கழிவோயில்லை, நேசமுடன் சதாகாலங் கொண்டால்மைந்தா நீடுலகில் நீடூழி காலம்வாழ்வாய், வாசமுள்ள மனுக்கிரக மகிமைதன்னை வசனிக்க காவுமுண்டோ மனதாய்க்காரே. (496)

§ மனோன்மணியென்பது—புவனை.



காரப்பா வின்னூனா யிரத்தைமைந்தா கருத்தினுற் சகல கலை காணலாகும், ஆரப்பா யாயிரத்தி னமுர்தங்கொண்டால் அவ் வமுர்தங் கொண்டவனே யாதிவல்லது, பேரப்பா பெற்றவனும் புலமிலேதான் பெருமையுள்ள சித்தனென்று பேசுவார்கள், நேரப்பா சவக்கிரக மனுக்கிரகந்தன்னை நிட்சயமாய்க் காட்டிவிக்கு மின்னூல்பாரே. (497)

பார்க்கவே சவக்கிரகப் பதியுஞ்சொன்னேன் பரமான மனுக்கிரக நிலையுஞ்சொன்னேன், ஏர்க்கவே யதனுடைய நிலையுஞ் சொன்னேன் யேகாந்த மானகுரு வழியச்சொன்னேன், கார்க் கவே கைபாக முறையுஞ்சொன்னேன் கருணையா யதனில்விளை யாட்டுச்சொன்னேன், சேர்க்கையுட னிணமறியத் தன்னைக்காட்டித் திறமாக நீயிருக்க வகைசொன்னேனே. (498)

சொன்னவகை தனையறிந்து கருவைப்பாரு துருவமுள்ள மேருவைநீ தொண்டுபண்ணி, இன்னவகை சொல்லுகிறோம் நன் றாய்க்கேளு இன்பமுற்றுக் கேளாட்டாற் சவமேயென்பான், சின் னவய தானாலும் புத்தியுண்டு திறமாக வயதுமுற்றிக் கிழமே யானால், என்னவகை யாகுமடா மாணக்காகேள் எட்டிரண்டு மெத்தான்று பத்தைப்பாரே. (499)

பத்தான அகாரமடா வண்டமேறு பகருதற்கு நாவுண்டோ பாரின்மீதே, வித்தான பொருளாகும் வேதமாகும் விளையான வைக்துருவுக் காணியாகுஞ், சித்தான சித்துவிளை யாடுதற்குத் திறமான தலமாகு மௌனமாகும், முத்தாகச் சிப்பியடா முனையு மாகும் முதண்ட நிறைந்தமதி முத்திதானே. (500)

## அண்ட மெழுகு.

தானென்ற முத்தியுட தலைமைகண்டு தப்பாம லத்தலைமை தானுமென்று, கோனென்ற குருவருளால் ஞானியென்று குரு வான வண்டமடா ஞானியண்டம், ஊனென்ற § ஞானியண்டம் வாக்கில்ல உறுதியுள்ள மெழுகுவகை யுரைப்பேனையா, தேனென்ற வண்டமதின் சவ்வுப்போக்கித் தீங்கில்லாத் திராவகத் தாற் சுத்திபண்ணே. (501)

§ ஞானிஅண்டமென்பது—கோழிமுட்டை.

சுத்திபண்ணும் வகையேது சொல்லக்கேளு சுகமானவெடி யுப்பு திராவகத்தைவாங்கி, பத்திபுட வண்டமதைத் தோய்த்துத் தோய்த்துப் பதிவான ரவிமுகத்தில் கலகாட்டபோடு, அத்திபுட தீர்கன்வற்றிச் சுத்தியாச்சு வருமையுள்ள வண்டமது வெற்றியாச்சு, முத்தியுள்ள வுண்டமது வெற்றியானால் மூர்க்கமுள்ள மெழுகுவகைக் குறிதிகேளே. (502)

உறுதியுள்ள விரமது பலந்தானேர்த்து உண்மையுள்ள பல்லிரத் தன்னைவாங்கி, பரிதிபெண்ணு காதமதில் தன்னுலாட்டிப் பரமான வண்டமது கவசஞ்செய்து, அருளது § ஐஞ்செழுத்தை யுச்சரித்துக் கருணையுடன் ரவிமுகத்திற் காயப்போடு, உறுதியுள்ள வண்டமது கன்றாய்க்காய்ந்தாற் சுகமான யதன்மேலோர் கவசங் கேளே. (503)

கேளப்பா கவசமது சொல்லக்கேளு கேடில்லாப் பூரமட்டா காரங்காரம், ஆளப்பா காரமுள்ள பூரம்வாங்கி அக்கருவைத் தூளாட்டி யதன்மேற்பூசு, கோளப்பா வாரமற் பூசிக்கன்றாய்க் கொடிதான ரவிமுகத்தில் காயப்போடு, வேளப்பா வெரித்த செற்றிக் கன்னிஞளல விசையான வண்டமது விஞ்சையாச்சே. ()

## நிலப்பூரக் கவசம்.

விஞ்சையெனும் பொருளான வண்டந்தன்மேல் மேற்கவச மதன்மேலோர் கவசங்கேளு, அஞ்சையெனும் அஞ்சரப்பா ஞானி தான் காண்பார் சுவிதுவிதேறு மதன்பெருமை கன்றாய்க்கேளு, பஞ்சையென்ற பஞ்சையடா நிலப்பூரந்தான் பக்குவமா யதன் சென்னம் பரிதியாலே, ஐஞ்சாவைமே லாசைக்கு மேலதாக வருணிற மானநிலப் பூரந்தானே. (505)

தானான நிலப்பூரம் பலந்தானேர்த்து தன்மையுடன் சட்டுவகை சயநீர்தன்னால், கோனான குருவருளாற் கல்வத்தாட்டிக் கூர்மையுடன் கவசமது குணமாய்ச்செய்து, காரான காதன்பதம் கன்றாய்ப்போற்றி கலங்காமல் ரவிமுகத்திற் காயப்போடு, தேனான கமலமதி லமுர்தந்தானுஞ் செம்மையுடன் கசிந்துருகித் தேமதாமே. (506)

§ ஐந்தெழுத்தென்பது—பஞ்சாட்சரம்.



திறமாக யதன்மேலோர் கவசங்கேளு சிவசிவா பாண்டமென்ற புதுப்பாண்டத்தில், உறமான சல்லியைத்தான் கீற்றிக்கொண்டு உரிசையுள்ள வுப்புநீ ரொன்றாய்ச்சேர்த்து, கறமான பாண்டமதி லரைமட்டிட்டுக் கருணையுள்ள கவசமதை யதன்மேல் வைத்து, சிரமான கவசமதில் முன்பொடியைத்தூவி திறமாக மேல்மூடிக் கவசஞ்செய்யே. (507)

செய்ததொரு கவசமதை வலுவாய்ச்செய்து தீர்க்கமுடனின்னமொரு வகையைக்கேளு, கொய்ததொரு பூமியிலே குகைபோல்வெட்டிக் குகையான குகைதனிலே § யானைக்கஷ்டம் உய்துமுடன் குகையிலரை வாசிபோட்டு உண்மையுள்ள கவசமதை யதன்மேல்வைத்து, கைதவறு மற்கஷ்ட மதன்மேல்போட்டுக் கருத்துறவே மணல்போட்டு மூடிடாயே. (508)

மூடியே யதன்மேலே திரணைபோட்டு மூர்க்கமுடன் சிதம்பரச்சக் காத்தைக்கீறி, நாடியே நீயிருந்து தபசுபண்ணு நடுவான பூரணத்தை மனதிற்கொண்டு, வாடிமனந் தளராமற் கும்பகத்திலின்று வாசியுடன் ரேசகபூ ரகமும்பண்ணி, கூடியே குருபதத்தில் மனதைநாட்டிக் குணமாக நீயிருந்து தபசு பண்ணே. (509)

பண்ணப்பா தபசுபஞ்சாக் கினியில்நின்று பாலகனே மண்டலமோ ரெண்டுசென்றால், விண்ணப்பா தானேக்கி வைரவர் பூசை மேலான குருபூசை யஷ்டசித்தி, கண்ணப்பா யஷ்டகஜ யஷ்டநாகம் நாடிநின்ற துவாரபால கர்க்குப்பூசை, கண்ணப்பா கருவடையர் தவறுமற்செய்து கருணையுடன் சரணமென்று தெண்டஞ்செய்யே. (510)

தெண்டமது பதினறு கோணந்தன்னில் தீர்க்கமுடன் செய்துகொண்டு தூபதீபம், கொண்டுவடுத் தீபமதைக் குறிப்பாய்ப் பண்ணி குறியான சமாதிதனைத் திறந்துமைந்தா கண்டதொரு மண்டலத்தைப் பையவாங்கிக் கருவான கவசமதைக் கழற்றியேயுஞ், சண்டமா ருதமான வண்டந்தன்னைச் சாந்தமுட னெடுத்து வைத்துக்கொள்ளே. (511)

§ யானைக்கஷ்டமென்பது—யானைலத்தி.

வைத்ததொரு வண்டத்திற் கவசந்தன்னை வரிசையாய் நீயெடுத்து மைந்தாகேளு, முத்தியுள்ள விரமதின் கவசந்தானு முதண்ட வண்டவோ டதனிற்சென்று, கைத்ததொரு பூரணத் தோ டிட்கலந்து கருவான முத்திசிவ மொன்றுப்க்கூடி, மெய்த்த தொரு மெழுகதுபோற் றிரண்டுநேற்று மேலான வண்டர்பிரா னருளாற்பாரே. (512)

பாரப்பா திரண்டுநின்ற மெழுகெடுத்து பத்தியுடன் பாணி தனிற் பதனம்பண்ணி, சேரப்பா நின்றதொரு பூரணத்தை நேர்மையுடன் பூசைசெய்து பூசித்தாக்கால், ஆரப்பா அறிவார்கள் பூசைநேர்மை அன்பான பூசையைபா னருளக்கேளு, வீரப்பா செய்யாமல் சதாசிவத்தை விறடங்க ரேசபூ ரகமும்பண்ணே. ()

பண்ணுவது கும்பகமென் றருளென்றெண்ணிப் பணிந்து மிகப் பராபரனைத் தொழுதுபோற்றி, உண்ணுவதற் கமுர்தாச கற்ப மென்று உறுதியுடன் சடத்தினுட வுறுதிகண்டு, நண்ணுவது மெழுகிலொரு பணவிடைதானெடுத்து நாவதனில் வைக்கச மரு விப்பாயும், புண்ணியனே பக்தாசங் கொண்டாயானால் புதுமை வெகு புதுமைதனைச் சொல்லக்கேளே. (514)

சொல்லக்கே ளமுர்தாச கற்பந்தன்னைச் சுருதியுடன் மண் டலமே கொண்டாயானால், அல்லக்கே ளென்மகனே யாக்கைதன் னில் அழுத்தமதாய்ச் சட்டையொன்று வெழுந்துதன்னும், விள்ளக்கேள் மேலான சட்டைபோனால் விசையான வாதநீ ரற் றுப்போச்சு, சொல்லக்கேள் வாதநீர் சட்டைபோனால் திறமான பிரமகுலத் தேகமாச்சே. (515)

ஆச்சப்பா பக்தாசம் பழுரியோடே அருமையுடன் றுமெடுத்து மனதாட்கொண்டு, பேச்சப்பா மற்றதொரு மௌன னோக்கிப் பிசகாமல் மூன்றுமண் டலமேகொண்டால், காச்சப்பா வைம்பொறியின் றழுவினாலே கசடறவே மனதுருகி யாகநின்றால், போச்சப்பா § திரோதகையின் பாசம்பாசம் போக்கறிந்தா லதன் மேலோர் சட்டைபோமே. (516)

§ திரோதகையேன்பது—மாய்கை.





## லிங்கமெழுகு.

சட்டையென்ற தேகமதிற் சட்டைபோனால் சங்கையில்லா ரவிகாந்தி யென்னசொல்வேன், இட்டமுட னிதனிலொரு விபரங் கேளு மென்மக்காள் முன்மெழுகிற் கழஞ்சுவாங்கி, கட்டான லிங்கமதிற் கவசஞ்செய்து கருணையுள்ள தீபமதில் வாட்டினாக்கால், முட்டையுடன் மெழுகதுதான் லிங்கத்தேறி முழுதுமது மெழு காகும் லிங்கந்தானே. (517)

தானென்ற லிங்கமதின் மெழுகைவாங்கி சமரசமாய் மதி தனிலே நூற்றுக்கொன்று, கோனென்ற குருவருளாற் கொடுத் தப்பாரு குருவான தங்கமடா வென்னசொல்வேன், தேனென்ற வமுர்தாச கற்பத்தாலே செயமான தங்கமதைப் பணவிடை தான்வாங்கி, நானென்ற வானுவத்தால் வெள்ளிசெம்பில் நன்மை யுடன் பத்துக்கு வொன்றுதாக்கே. (518)

ஒன்றான தங்கமதைத் தாக்கினாக்கால் ஓகோகோ வென்ன சொல்வே னுத்தாள்ருபங் குன்றாத குழந்தையடா § வயதோவெட்டு குறையாத செல்வமடா வாதியாதி, கன்றாட வந்தாதி யனாதி யாகுங் கசடற்ற தங்கமடா அங்கமங்கம், பன்றான வங்கமடா வாதிகற்பம் பாலகனே நீயறிந்தால் பயமும்போச்சே. (519)

## அரிதாரம்

போச்சென்று விடுகாதே யின்னங்கேளு பொருளான வமுர்தாச மெழுகிற்றானும், பேச்சொன்றும் பேசாமல் மௌன மாகிப் பேணியே யம்மெழுகிற் கழஞ்சுவாங்கி, பூச்சென்ற வரி தாரக் கட்டிதன்னில் போதரவா யிடைக்கிடைதான் கவசம்பண்ணி, மூச்சென்ற மண்சீலை யைந்துசெய்து மூர்க்கமுள்ள ரவிதனிலே காயப்போடே. (520)

போடப்பா ரவிதனிலே நன்றாய்க்காய்ந்தால் பூரணமாஞ் செகசோதி பாதம்போற்றி, நாடப்பா நிதானமதாய்ப் புடத்தைப் போடு நன்மையுடன் புடமாறி யெடுத்துப்பார்த்தால், வீடப்பா விலத்ததொரு தாரந்தானும் விறடங்கிக் கட்டியது மலிபோ லாடும், ஆடப்பா அம்மணியை யெடுத்துக்கொண்டு அருளான தங்கமதற் கிடையேசேரே. (521)

§ வயதுயேன்பது—மாற்று.

சேரப்பா தங்கமது குகையிலிட்டுத் திறமாக வுருக்கையிலே தாரந்தாக்கு, சீரப்பா தானடங்கித் தாரந்தன்னைச் செம்மையுடன் வாங்குமடா தங்கந்தானும், நேரப்பா நின்றதங்க மென்னசொல்வேன் நேர்மையுட னதனிறத்தை யார்தான்காண்பார், பாரப்பா யிதனுடைய பேரைக்கேளு பிரபலமா மரிதாரமென்றும்பேரே. (522)

போரான அரிதாரத்தின் தன்மைகேளு பெரிதான செம்பிலே நாற்றுக்கொன்று, நேர்கக்கொடுத்துடனே யென்னசொல்வேன் நிசமான தங்கமது பத்தேகாணும், ஆரான வெள்ளியிலேயைந்நாற்றுக்கொன்று கூட்டினூர் வயததனைச் சொல்லப்போமோ, சீரான யரிதாரத் தன்மைசொல்லச் சிவசிவா ஈாவடங்காச் சித்துதானே (523)

## பாஷாணக்கட்டு.

சித்தான சித்தியொன்று சொல்லக்கேளு சிவசிவா கைலாயமென்னசொல்வேன், சுத்தமுன்ன வெள்ளியடா மதிதானென்ன சுருதியுள்ள மதிகோடி யிதற்கொவ்வாது, பத்தான வெள்ளையடா பரப்பிரமரூபம் பார்க்கரிது பார்க்கரிது கண்ணேசுகம், வித்தான வித்துதா னூர்தான்காண்பார் வேரான வித்துமதி வெள்ளிதானே.

வெள்ளிமதிக் கதிரொளியை யார்தான்காண்பார் வேரான கதிர்மதிதான் வீரம்வெள்ளை, உள்ளியென்ற தைலமதா மிரண்டுஞ் சேர்த்து உரிமையுடன் கல்வமதி லாட்டிமைந்தா தெள்ளிமையாய் வழித்துருட்டி வட்டுப்பண்ணி § செங்கதிரோன் தன்முகத்திலுலரவைத்து, வள்ளியெனுங் கிழங்கதனை ரெண்டாய்க்கீறி வைத்திடுநீ யுலந்தவட்டை வைத்துமூடே. (525)

மூடிநன்றாய்க் கிழங்கதனை மண்ணுஞ்செய்து முக்கியமாய் நிறையறிந்து புடத்தைப்போடு, வாடிநின்று மலையாதே வீரவெள்ளை மகிழ்ந்திரண்டு முறவாகக் கட்டிப்போகும், நாடிநின்ற சற்குருவைத் தொழுதுபோற்றி நலமான வைரவர்க்குப் பூசைபண்ணி, கூடிநின்ற புடமதனை யெடுத்துப்பார்த்தால், குருவான வெள்ளையடா வீரந்தானே. (526)

§ செங்கதிரோனென்பது—சூரியன்.



வீரமென்ற வெள்ளைதனைப் பிறர்தான்காணார் விபரமுடன் சொல்லுகிறே னன்றாய்க்கேளு, காரமென்ன தங்கமதில் காலுக்கொன்று களங்கமுற்று வுருக்கிடுவாய் கண்விட்டாடும், சாரமென்ற சாரமடா தங்கப்போக்கு சற்குருவாய் நின்றதொரு தங்கந்தன்னை, பாரமென்று வெண்ணியதை வெள்ளிசெம்பில் பத்துக்கு வொன்றுவிடப் பழுக்கும்பாரே. (527)

பழுக்குமென்று சொன்னபொருளென்னவென்றாற் பரமான வண்டமடா § செயவீரந்தான், செழிக்குமன மம்பரத்தின் செயல்தானாகுந் திருவான வாலையடா செம்மைசெம்மை, களிக்குமனங் களிக்காமற் கருத்தைக்காரு கமலமலர் பூமாதைக் கருத்திற்சேரு, சுழிக்குமனஞ் சொக்காமற் சுருதிபாரு சுருதிமுடிந்தமடா சோதிதானே. (528)

## வெடியுப்புச் சுண்ணம்.

தானென்ற வெடியுப்புச் சுண்ணஞ்சொல்வேன் தன்மையுடனேகேளு மாணக்கா£, தேனென்ற வெடியுப்பு பலமோரெண்டு திறமான கல்லுப்புப் பலமும்ரெண்டு, ஊனென்ற சீனமது பலமிரண்டு உத்தமனே மூன்றுமென்றாய்க் கல்வத்திட்டு, நானென்ற செயநீரா லரைத்துவில்லை நன்றாகக் காயவைத்துப் புடத்தைப்போடே. (529)

## வெடியுப்புச் செயநீர்.

போட்டதொரு புடமாறி யெடுத்துப்பாரு புண்ணியனே சுண்ணம்பாய்க் கட்டிநிற்கும், வாட்டமென்ன சுண்ணம்பைக் கண்டபோதே மகத்தான சாரஞ்சேர் நாலுக்கொன்று ஓட்டமென்ற நீரப்பா செயநீராகு முத்தமனே யன்னீரில் வீரம்பூரம், நாட்டமுடன் செயநீரில் சேர்த்தாயானால் நன்மையுள்ள செயநீரு முறுதியாச்சே (530

உறுதியுள்ள செயநீரில் சரக்கெல்லாந்தா னுகமடிந்து போகுமடா நீரின்வேகஞ் சுருதியுடனினமறிந்து வேதைபார்த்தால் சொர்க்கமென்ற சொர்க்கமடா சோதிதோன்றும், பரிதிமதி ரெண்டினுட பலமேகாணும் பாலகனே பயனறிந்து பலனைக்கண்டால், கருதுமன மொன்றாகுங் கவலைநீங்குங் காரணமும் பூரணமுங் கைக்குள்ளாமே. (531)

§ செயவீரமென்பது—சவ்வீரம்.

## அண்டத் தைலம்.

ஆமப்பா தைலமொன்று சொல்லக்கேளு அருளான வண்டமது பலம்பத்தாகும், ஓமப்பா சருகதுவும் பலம்பத்தாகு முண்மையுள்ள பூநீரு பலமொன்றாகும், நாமப்ப வெடியுப்பு பலமொன்றாகும் நன்றான சீனமது பலமொன்றாகும், பூமப்பா விக்துப்பு பலமொன்றாகு முண்மையுள்ள சாரமது பலமொன்றாமே. ()

பலமான பொரிகாரம் பலமொன்றப்பா பண்பான வளையலுப்பு பலமொன்றப்பா, குலமான கல்லுப்பு பலமொன்றப்பா கூர்மையுள்ள சூடனைப் பலமேபோடு, வலமான கெந்தியது பலமொன்றப்பா வகையான சாக்குவகை பத்தங்கூட்டி, பிலமாக விடித்ததனைப் பொடியாய்ப்பண்ணி பேரண்ட சருகதுவுங் கூடச்சேரே. (533)

## வீரமெழுகு.

கூட்டியெல்லா மொன்றாக்கி யண்டத்திட்டுக் குலமான நீர்விட்டுப் பிசறிநன்றாய், நாட்டியே மேற்சட்டி கவித்துமூடி நன்றாக மண்செய்து தமர்தான்போட்டு, தேட்டமுடன் தைலமதை யிறக்கிக்கொண்டு சிவசிவா பாணிதனி லடக்கம்பண்ணி, வாட்டமில்லா வீரமதிற் சுருக்குத்தாக்க மைந்தனே யவ்வீர மெழுகாய்ப்போமே. (534)

மெழுகான வீரமொடு தாருகாரம் மேன்மையுள்ள பூரமுடன் கெந்திகூட்டி, கழுகாம லந்தமொரு விடையாய்க்கூட்டி நன்மையுள்ள கல்வமதில் லாட்டிக்கொண்டு, உழுகான வாய்நீர லரைத்துக்கொண்டு, வன்மையுடன் வில்லைதட்டிக் காயப்போடு, அழுக்காகக் காய்ந்தபின்பு சீலைசெய்து சுத்தியுடன் காடையென்ற புடத்தைப்போடே. (535)

போட்டபுட மாறவிட் டெடுத்துப்பாரு பொற்குருவாஞ் சற்குருவாம் போற்றிக்காரு, நாட்டமுடன் குருவெடுத்து வைத்துக்கொண்டு நன்மையுள்ள தங்கமது § களஞ்சியொன்று, தேட்டமுடன் முன்குருவிற் பணவிடைதானெடுத்து திருவான தங்கத்தில் வாய்நீராற்பூசி, வாட்டமில்லா வோட்டில்வைத்து மண்சீலை செய்து மக்களே புடம்போடக் குருவாம்பாரே. (536)

§ களஞ்சியென்பது—ஒன்றேகால் வராகனிடை.



பாரப்பா பொற்குருவில் பணவிடைதானெடுத்து பாய்ச்சடா காரியம் பத்துக்கொன்று, நீரப்பா தான்வற்றிக் காரியந்தான் நிமிஷத்திற் பழுக்குமடா யென்னசொல்வேன், காரப்பா சற்குருவின் பாதந்தன்னைக் கருணைபெறப் பூசித்துக் கருணைகூர்ந்து, தேரப்பா மனதையிகத் தேர்ந்துகொண்டு திறமாகப் பூரணத்தைத் தினமுநோக்கே. (537)

நோக்குவது பூரணத்தை நோக்கவேண்டும் கொடியான திருவடியைக் காக்கவேண்டும், தாக்குவது கும்பகத்தில் வாசி பூட்டித் தனலான வக்கினியாற் றன்னைத்தாண்டி, நீக்குமலர் வாசனையாற் சகஸ்திரபீடம் நேரான பிரமபதத் தருளைநோக்கி, வாக்குமன தறிவுடைய மனதினாலே மானதமாம் பூசைதனை மனதிற்காணே. (538)

காணவென்றால் ராமனுட வாக்கியத்தில் கருணையுள்ள வாயிரத்தைக் காணவேண்டும், பூணவென்றால் மனதுருகி யாவேன் மைந்தா பொற்குருவாஞ் சற்குருவைப் பூணவேண்டும், நாணமென்றால் காணுகிற தாருக்கென்றால் நன்மையில்லா துஷ்டரிடம் நாணவேண்டாம், ஆணுவங்கள் மிகப்பேசி யழிந்திடாம லண்டசரா சரங்களைத்தான் வசமாயெண்ணே. (539)

எண்ணுவது வைந்தெழுத்தை யெண்ணியெண்ணி § யெட்டிரண்டு மறியாத விடும்பர்தானும், அன்னமது சுவைதனையே காணமாட்டான் அதனுடைய சாரமதை யறியான்மட்டி, பெண்ணுடைய பெருமைதனைப் பேணிப்பார்த்து பேய்கூத்தாய்த் திரிவார்கள் கோடாகோடி, தன்னுணைத் தானறிந்து வமுர்தங்கொண்டாற் றலைவனையுந் தன்னையுந்தான் காணலாமே (540)

காணவொரு கருவைப்பு சொல்லக்கேளு கைலாய புலத்தியர்தன் கடாட்சத்தாலே, தோணுகிற வுருப்பேதங் கோடாகோடி சொற்பேதம் பொருட்பேதம் கோடாகோடி, பூணுகிற பொற்குறிபோற் சித்தர்கோடி பூவுலகில் யானறிந்து புனிதமாக, வானுலகிற் சென்றுகை லாசம்புக்கி மகிழ்ந்திருக்கே னந்தியுட மாயிற்றானே (541)

§ எட்டிரண்டென்பது—அகாரஉகாரம்.

நந்தியுட மாயில்லொரு காளிருக்கு நான்பணிக்கே அவர் பதத்தைத் தெண்டம்பண்ணி, யுந்தியுயிர் சபைநிலை யகாரபீட, மோங்கார மானதோ ருகாரபீடஞ், சிந்தைதனிற் றெளிவான மூலந்தன்னைச் செப்புகிறே னவர்பதத்தைத் தெண்டம்பண்ணி, நந்தைதா யானதோ ரேகமூலஞ் நயமான மூலமது மகாரமாமே. ()

## சத்திசிவம்.

மகாரமென்ற மௌனமதை யார்தான்காண்பார் மக்களே யுங்களுக்காய்ப் பிரித்துச்சொல்வேன், அகாரமென்ற வட்சரமே சிவமாமூல மப்பனே சிவந்தனக்குச் சத்திகேளு, உகாரமென்ற வட்சரமே சத்தியாகு முறதியுட னிருவருமே யொன்றும்போதா அகாரமா மெட்டிரண்டும் பத்துமாச்ச வாதியந்த மொன்றுன வறிவைக்கேளே. (543)

கேளப்பா வறிவான அகாரபீடம் கிருபையுட ஞெங்காரக் கம்பகாசி, மேலப்பா வளர்க்கவா காயம்புக்கி மேன்மையுள்ள, வட்டமதாய் விக்குவாச்ச, வாளப்பா சிக்கென்றும் காரமென்ற மகத்தான மௌனமென்றும் போகமென்றும், ஆளப்பா போக மென்ற வஸ்துதன்னை யாரதியப் போருர்க ளப்புப்பாமே. (544)

உப்பான வுப்பதுதான் § பூமிநாத முரிமையுடன் மண் பிறப்பு மதனொதம், அப்பான வமுர்தமுன்னும் பசனொதம் அடங்காத சிந்தையுற்ற வருமைநாதஞ், செப்பாத நாதமடா பச்சை நாதஞ் செகத்தோரை மயக்குகின்ற செகநாதந்தான், கொப்பான குருவிருந்த குருநாதந்தான் குழந்தையென்ற மதனொபச்சை மன் தான்பாரே. (545)

பாரப்பா செனித்தமுதற் பத்துநாள்மட்டும் பாலகனே யமைத்தவிந்து வெழுத்துமாறல், சீரப்பா பிருதிவியில் பிருது வியைச்சேரப்பா செனித்தவிந்து வெழுத்தெனவே நினைத்துநிற்பார், காரப்பா வப்புநியைக் காருகாரு காத்துமிகக் கருவெடுத்துக் கருத் தாய்நீயும், ஊரப்பிர வந்துவிடு மூலகத்தோர்க வொருவ நதி யாமல்நீ பதனம்பண்ணே. (546)

§ பூமிநாதமென்பது—பூநீர்.



பதனமுள்ள கருவைமிகக் கண்டமாக்கிப் பாலகனே யிதற்குரெட்டி யுப்பைவாங்கி, விதனமதைத் தானகற்றி ரவிபிசர் தான் விருப்பமுடன் பலம்பத்து பொடிதான்செய்து, வதன முள்ள குப்பிக்கு ளடக்கஞ்செய்து வாகுபெற மண்சீலை வலுவாய்ப் பூட்டி, மதனமுள்ள மௌனமதைத் தொழுதுபோற்றி மகத் தான வப்புமுப்பு மொன்ருய்ச்சேரே. (547)

சேர்த்துமிகச் சட்டிகொண்டு நன்றாய்மூடித் திறமாகச் சீலைசுத்தி மண்தான்பூசி பார்த்திபனே குழிவெட்டிப் பாண்டம் வைத்து பத்ரியுடன் மண்பரப்பித் திரணைபோட்டு, கார்த்திருந்து வாருநா ளெடுத்துப்பாரு கனலேறிக் கற்பூர வாசம்வீசும், போற் றிமிகத் தானெடுத்து வைத்துக்கொண்டு பூரணமே யாதியந்தப் பொருள்தானென்னே. (548)

## சவர்க்காரம்.

தானென்ற சவர்க்கார வுப்புதன்னைச் சங்கையுடன் கல்ல மதி லாட்டிமைந்தா, கோனென்ற குருவருளால் நன்றாயாட்டிக் குருபரனைத் தியானித்துப் பாண்டத்திட்டு, தேனென்ற மொழி மாதைத் தியானம்பண்ணிச் சிவசிவா முன்போலே சமாதிவைத்து, நானென்ற வாலுவத்தை நன்றாய்ப்போக்கி நன்மைபெற மண் டலந்தான் காருகாரே. (549)

காரப்பா மண்டலந்தான் சென்றபின்பு கருவான கரு வெடுத்து முன்போலாட்டி, சேரப்பா வாயகண்ட § தாழிதன் னில் செம்மையுடன் ருன்சேர்த்துத் திருவைநோக்கி, காரப்பா மனதறிவா லடுப்பிலேற்றிக் கனலேறத் தீயெரிப்பாய் மெதுவாய் மைந்தா, தேறப்பா மனந்தேறி மெதுவாய்மைந்தா, தீயெரிக்கும் போதிலது பொங்குந்தானே. (550)

பொங்காமற் றீயெரித்துப் பதத்தைப்பாரு புஷ்டியெல்லாம் தான்கரைந்து நீராய்நிற்கும், எங்காமல் தீயெடுத்துப் பாண்டத் தாற்றி யென்மகனே வேடுகட்டி ரவியில்வைத்து, தாங்காமற் கார்த் திருந்து வெட்டுநாள்தான் துயர்தீரக் காய்ந்தபின்பு மைந்தாகேளு, பாங்கான வுவர்ப்பூவுஞ் சீனக்காரம் பத்தியுடன் வகைக்கைந்து பலமும்வாங்கே. (551)

§ தாழியென்பது—பானை.

வாங்கிநன்றாய்ப் பொடிசெய்து வைத்துக்கொண்டு வன்
மான கனியுப்பிற் சேர்த்துக்கிண்டி, தீங்கில்லா ரவிமுகத்தில் மூன்
றுநாள்தான் திறமாகத் தானெடுத்து வைத்துமைந்தா, தாங்கா
மல் வீரமுடன் பூரம்ரெண்டுந் தப்பாமல் வகைக்கிரு பலமும்
வாங்கி, ஆங்கறிகொண் டேபிடித்துப் பாகிற்சேர்த்து அப்பனே
கிண்டிரவி முகத்தில்வையே. (552)

ஞாவியல்டம்.

வைத்தபின்பு மறுநாள்தா னோயாகேளு மகத்தான சவர்க்
காரங் காரமேறு, வைத்துவிட்டுத் திரியாதே ஞாவியல்ட மின்
பமுட னறுபதுதான் வாங்கியே யுமைத்துவிட்டு விருகருவு மொன்
றிற்சேரு மார்க்கமுடன் முரிசைக்கு பலமும்வாங்கி, மைத்துவிட்
டுப் பொடியாக்கிக் கருவிற்சேர்த்து நன்றாக மத்தித்து வுப்பி
லூற்றே (553)

சுண்ணப்பெருமை.

வற்றிநன்றாய் மத்தித்துக் கிண்டுகிண்டு வரிசையுடன் ரவி
யில்வைத்து நன்றாய்க்கிண்டு, பார்த்திடவே தினந்தோறும் ரவி
யில்வைத்து பாலகனே நீர்வற்ற மட்டுங்கிண்டி, காக்கிருந்து
கிண்டினதா லுப்புக்காரங் கடுங்கார மேரியல்லோ சுண்ணம்வீசம்,
பூத்தமலர் வாசனைபோற் சுண்ணமாகும் பூரணமாய்ச் சுண்ண
மெல்லாம் வெளுத்துப்போமே. (554)

வெளுத்தமலர்ச் சுண்ணமதை யென்னசொல்வேன் வேதாந்த
மனோன்மணித்தாய் விளம்பும்வார்த்தை, அழுத்தமுள்ள சுண்ண
மடா § வம்பரத்தின்சுண்ண மருள்பெருகும் பூரணத்தி னதிகாசுண்
ணம், வழுத்துதற் கரிதான வழலைசுண்ண மங்களமா யென்று
நிறைந் திருக்குஞ்சுண்ணம், பழுத்தவை லாயவிரி யானமேரு
பருவதம்போ லெங்குநிறை சுண்ணமாமே. (555)

சுண்ணமதின் பெருமைதனைச் சொல்லக்கேளு சூட்சமாய்ச்
சற்குருவைத் தொழுதுபோற்றி, வன்னமென்ற சுண்ணமது
வாடுங்கூத்து வரிசையுடன் சொல்லுகிறே மகிழ்ந்துகேளு, என்
னவென்று றுபத்து நான்குபேரு மின்பமுடன் வழலைதனைக்
கண்டதாலே, சுண்ணமதா யவர்தேகங் கட்டிப்போச்சு நன்று
பெருஞ் சொற்கபத மேவலாச்சே. (556)

§ அம்பரமென்பது—ஆகாயம்.



ஆச்சப்பா சொர்க்கபத மென்னவென் றருள்பெருகுந் தேவ
ரிஷி முனிவரோடு, பேச்சப்பா பேசாத மௌனத்தேகிப் பெருமை
யுட னிருந்தார்க ளனேகங்கோடி, நீச்சப்பா பிரளயம்வந் தற்றபோது
நீணிலத்திற் கெதியில்லை யென்று சொல்லி, மூச்சப்பா முடித்த
விடத் தெய்தினார்கள் முடிந்தவிடத் தெய்திசொற்கங் கண்டிலாரே. ()

சொற்கபதங் கண்டவர்கள் கோடிக்கொன் றுருவமுள்ள
மேருவதை யவனைகாண்பான், வற்கமுள்ள சிவயோகி வற்கமா
கும் வகையுடனே யட்டமா சித்துமாடும், நற்கமல மாதுபரி
பூரணமாய்நிற்பாள் நன்மையுட னாயிரத்தி லுப்புச்சுண்ணந், தற்
கபத மில்லாத வழலைச்சுண்ணந் தற்பரத்தி னருள்பெருகுஞ் சுண்
ணந்தானே. (558)

சாரக்கட்டு.

சுண்ணமது வாடுகிற தொழிலைக்கேளு துணையான மனோன்
மணிதன் றவத்தினாலே, எண்ணமுள்ள சுண்ணமது கழஞ்சுபத்து
வெடுத்துநீ கல்வத்தி லிட்டுக்கொண்டு, வண்ணமுள்ள § கருவாலே
யாட்டிமைந்தா வரிசையுடன் சாரத்துக் கங்கிபூட்டி, நன்னய
மாய்ச் சட்டிதனில் மண்மீதில்வைத்து நன்றாக மேல்மண்ணைப்
பரத்திவையே. (559)

வையப்பா சட்டிதனை யடுப்பில்வைத்து வரிசையுடன்
தீயெரிக்க யனலுமீறி, பொய்யப்பா போகாமல் சாரந்தானும்
புனிதமுடன் கட்டிநன்றா யிறுகிநிற்கும், கையப்பா கல்வமதிற்
கவசத்தோடே நன்றாகத் தானரைப்பா யமுர்தம்விட்டு, மெய்
யப்பா சொல்லுகிறேங் கெந்திபலம்வாங்கி மேன்மையுடன் கவச
மது வலுவாய்ச்செய்யே. (560)

வலுவாகச் செய்ததொரு கவசந்தன்னை மார்க்கமுடன் மூன்
போல்மண் மரபில்வைத்து, நலுகாமல் தீயெரிப்பாய் மைந்தாநீயும்
நன்மைபெறத் தீயாறி யெடுத்துப்பாரு, ஒழுகாமல் கெந்தியது
நீராய்நின்று வுண்மையுடன் கவசத்தோ டொத்துப்போகும்,
அழுகாமற் கவசமது கல்வத்திட்டு அப்பனே வாய்நீரா லரைத்
திடாயே. (561)

§ கருவென்பது—வெண்கரு.

## நாகக்கட்டு.

அரைத்ததொரு கவசமதை நன்றாய்பூட்டி, அப்பனே மெழுகுபோ லாட்டிமைந்தா, புரைத்ததொரு நாகத்தைக் கையி லையா புண்ணியனே யதற்கு § ரெட்டி கவசம்பண்ணி, விரைத் துமிகக் காயநன்றாய் ரவியிற்போடு விறடங்க நன்றாகக் காய்ந்த பின்பு, நிரைத்துடனே மண்சீலை வலுவாய்ச்செய்து நீர்வற்ற நன்றாகக் காயப்போடே. (562)

காய்ந்ததொரு கவசத்தை யெடுத்துமைந்தா கணபதிக்கும் வடுகனுக்கும் பூசைசெய்து, பாய்ந்தோடிப் போகாமற் செஜபுடத் திற் பத்தியுடன் வைத்துநன்றாய்ப் பூசைபண்ணி, சாய்ந்துமனங் கோணாமல் நிலையில்நின்று தன்மையுடன் குருவருளை யாடுநாகம், மாய்ந்துநின் றுடுகிற நாகந்தன்னை மக்களே புடமாறி யெடுத் துப்பாரே. (563)

பாரப்பா புடமாறி யெடுத்துநல்ல பக்குவமாய்க் கவச மதை யுடைத்துப்பாரு, வீரப்பா தானடங்கி நாகந்தானும் விபர முடன் கட்டியது மணியாய்நிற்கும் ஆரப்பா வறிவார்கள் நாக மணிதன்னை யாயிரமாஞ் சிரசுடைய வாதிசேடன், சேரப்பா நின்றல்லோ பூமிதாங்கி நின்றதினாற் பூலோக மானவரே. (564)

லோகமென்று லோகமல்ல நாகலோகம் தன்னிமையாய்ப் பெருத்தீவாய் நின்றதப்பா, ஆகமென்ற கருவறிந்தோ னவனே வாதி யம்பார்த்தின் குறிப்பறிந்தோ னவனேஞானி, பாகமென்ற றுசியறிந்தோ னவனேயோகி பலகலையுந் தெரிந்துகற்ற மவனே சித்தன், தேகமென்ற நாகமதை யடக்குமந்த சிவஞான கவச மதைப் பதனம்பண்ணே. (565)

பதனமப்பா கவசமதைப் பதனம்பண்ணிப் பாலகனே கவசமதிற் சாரஞ்சேர்த்து விதனமப்பா தானகலக் கல்வத்தாட்டி மேலான நாகத்துக்குக் கவ்வூட்டி, அதனமப்பா வெண்ணி ரெண்டு புடத்திற்போடு அப்பனே யன்றாகக் கட்டிப்போகும், மதனமுட னிப்படியே நாறுதொரத்தக்கட்டு மகத்தான கவச மதை வைத்துப்போற்றே. (566)

§ ரெட்டிகவசமென்பது—இரண்டுமேண்சீலை.



## நாற்றுருகை.

போற்றுவது வயிரத்தைப் போற்றவேண்டும் பூரணமா மைந்நாறு பலதிரட்டு, மார்க்கமெத்த வுள்ளவிரு நாறுயோக மகத்தான விஞ்ஞெதவகை நாறுஞ்சொன்னேன், பார்த்திபனே யெண்பதிலே வைத்தியஞ்சொன்னேன் பரிபாஷை யறிவதற்குப் பதினெட்டும்பார், தோற்றமுடன் சோசியத்தைப் பத்திற் சொன்னேன் சுருக்கமுள்ள வைம்பதுவும் பாருபாரே. (567)

பார்க்கவென்றால் ராமனுட வாக்கியர்தேடி பாடுபட்டுக் கோர்வைநூல் நன்றாய்ப்பாரு, சேர்க்கையுடன் பத்துமுத லாயிரத் தோடையா செம்மையுட னொருகோர்வை யாகச்சேர்த்து, மார்க் கமுடன் பார்ப்பவருக் கெல்லாஞ்சித்தி மாநிலத்தி லவர்கள்சிவ யோகியாகும், தீர்க்கமுள்ள § சிவயோகி யாகிப்பின்னுஞ் சிவசிவா மதியமூர்த தேகமாமே. (568)

ஆமப்பா கட்டினதோர் நாகந்தன்னை அன்பாக யிடைக் கிடைதான் பரியைக்கூட்டி, தாமப்பா சொல்லுகிறே யிரண்டு மொன்றாய்த் தடையறவே யொன்றாகி மணியாய்நிற்கும், வாமப் பால் மதியமூர்தம் பூசைபண்ணி மார்க்கமுடன் குகைதனிலே யுருக்கிப்பாரு, நாமப்பா கண்டபடி வெள்ளிபோலே நன்றாகக் கட்டுமடா களங்கமாச்சே. (569)

களங்கமென்ற நாகமணி யெடுத்துக்கொண்டு கணக்காக வெள்ளிசெம்பை நன்றாய்ச்சேர்த்து, உளங்கனியப் பத்துக்கு வொன்றுதாக்கு வுத்தமனே யுருக்கிப்பார் மாற்றெட்டாகத், துல ங்குமடா வதையெடுந்தத் தகடுதட்டித் துப்புறவாய்ப் புடம்போ டத் தங்கமாகும், கலங்கமழும் நாதாந்த சோதிபாதம் நாதாந்தம் பெற்றவற்கே நன்னும்பாரே. (570)

## நாகக் செந்தூரம்.

பாரப்பா வெள்ளியிலே பத்துக்கொன்று பாய்ச்சினால் யத் தலைக்கு மேலேகாணும், ஆரப்பா வறிவார்கள் நாகக்கட்டு அப் பனே யாதியந்த மறிந்தோன்செய்வான், நேரப்பா பரிசேர்ந்த நா கந்தன்னை நீமகனே கல்வத்திற் பொடித்துக்கொண்டு, சேரப்பா அப்பொன்று ரசமுமொன்று செம்மையுள்ள லிங்கமொன்று கெந்தியொன்றே (571)

§ சிவயோகியென்பது—கற்பசாதனை யுள்ளவர்.

ஒன்றாகத் தான்பொடித்துக் § குமரிச்சாற்றால் உத்தமனே அரைத்துச் சாமமாட்டி, கன்றப்பா வயற்சட்டி தன்னில்வைத்து கழுகாமல் மேற்சட்டி கொண்டுமூடி, குன்றாமல் மண்சீலை வலுவாய்ச்செய்து குழிப்பாகப் பக்குவமாய்ப் புடத்தைப்போடு, அண்டர்களும் பதம்போற்றி யெடுத்துப்பாரு அப்பனே சிவந்தசெந் தூரமாமே. ()

ஆமப்பா செந்தூரம் பதனம்பண்ணி அப்பனே பணவிடை தான் பாலிலுண்ணு, ஏமப்பா சொல்லுகிறோம் மண்டலமே கொண்டால் காதாக்கத் தேகமதிற் சட்டைபோகும், தாமப்பா விருகண்ணுள் அலக்கயாகுந் தவறாமல் வாசியது நிலையில்நிற்கும் சாமப்பா நரைதிரையுந் தானேபோகுஞ் சகலகலைக்ஞானமெல்லாந் தங்குந்தானே. (573)

தானென்ற செந்தூரந் தன்னைவாங்கித் தன்மையுடன் வெள்ளியுத் தகடுதட்டி, விளென்ற தகடுபலம் பத்துக்கேதான் மேலான செந்தூரங் கழஞ்சைபத்து, தேனென்ற வழுர்தமதாற் குழப்பிக்கொண்டு செம்மையுடன் வெள்ளியத் தகட்டிற்பூசி, காணென்ற வாலுவத்தை நீக்கிமைந்தா கலமாக வோட்டில் வைத்துப் புடத்தைப் போடே. (574)

போடப்பா கஜபுடமாய்ப் போட்டுமைந்தா பூரணமாயாறினபின் னெடுத்துப்பாரு, ஈடப்பா வெள்ளிய முருகிக்கட்டி தன்மையுடன் றானிருக்கும் பொன்போல்மைந்தா, கூடப்பா தான் பிலக்கத் தகடுதட்டிக் குருபரனைத் தானெண்ணிப் புடத்திற்போடு, ஆடப்பா வொருபுடத்தி லிறங்கித்தங்கம் அப்பனே பதினாறு கழிகமாச்சே. (575)

ஆச்சப்பா காரியத் தகட்டில்முன்போ லப்பனே செந்தூரமணிந்துகொண்டு, மூச்சப்பா போகாம லோட்டில்வைத்து முத்தி பெறச் சற்குருவைத் தொழுதுபோற்றி, பாச்சப்பா கஜபுடத்தில், வைத்துமைந்தா பதமாகப் புடமாறி யெடுத்துப்பாரு, பேச்சப்பா காரிய முருகிக்கட்டிப் பெலமான தங்கமதா யிருக்குந்தாரே.

§ குமரியென்பது—கற்றாழை.



காரப்பா காரியத் தங்கந்தன்னைக் கருணைபெறத் தகடடித்துப் புடத்தைப்போடு, வீரப்பா தானுருகி யிறங்குந்தங்கம் மேலான தங்கமதை யென்னசொல்வேன், ஆரப்பா வறிவார்கள் தங்கமாற்று அருமையுள்ள மாற்றது தானைம்பத்தொன்று, போப்பா பெற்றதொரு தங்கந்தன்னைப் பெருமையுடன் றானெடுத்து வைத்துக்கொள்ளே. (577)

## திருவுருத் தைலம்.

கொள்ளுதற்கு வின்னமொரு கருவைக்கேளு குருவானதிருவுருவாம் வாமப்பூடு, கள்ளுறவாய் நிறைந்தாண்டு கொண்டபூடு நலமான பூடதனை யெடுத்துவந்து, தெள்ளிமையாய்க் கசடதனை நீக்கிமைந்தா சிறுகதனைக் கண்டமதாய்ப் பொடித்துக்கொண்டு உள்ளுறலாய் ரவிதனிலே காயப்போட்டு உண்மையுடன் தானெடுத்துப் பதனம்பண்ணே. (578)

பண்ணியதோர் கருவுக்கு நிசாய்நீயும் பர்ய்ச்சடா சருகுடனே வண்டஞ்சேர்த்து, உண்ணியதோர் சூடனது காலுக்கொன்று உத்தமனே யொன்றாக்கிப் பாண்டத்திட்டு, தண்ணிமையாய்க் குழித்தைல மிறக்கிமைந்தா சாதகமாய்க் குப்பிதனி லடைத்துக்கொண்டு, விண்ணிறைந்த பயிரோக்கித் தியானஞ்செய்து மேலான குருபதத்தை மேவிப்பூணே. (579)

## சிப்பி பற்பம்.

பூணுவதற் கின்னமொரு கருவைக்கேளு புகழான வருள்பெருகுஞ் சிப்பிவாங்கி, தோணுவதற் கிதற்குநிகர் § தாரஞ்சேர்த்து சுத்தமுள்ள சருகதுவும் பாதிகூட்டி, பாணியெனுந் தண்ணீரா லரைத்துமைந்தா பருவமுடன் றானுருட்டி வட்டுப்பண்ணி, பேணியே ரவிதனிலே யுலர்த்திக்கொண்டு பெருமையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்யே. (580)

செய்ததொரு கவசமதை நிதானங்கண்டு திருவருளை நோக்கியொரு புடத்தைப்போடு, உய்தமுடன் புடமாறி யெடுத்துப்பாரு வுத்தமனே நீறியது நீறாய்நிற்கும், தொய்தமுள்ள பற்பமதைப் பதனம்பண்ணித் துணையான சற்குருவைத் தொழுதுபோற்றி, சைதன்யமானதொரு தைலந்தன்னில் தருவானபற்பமது பணவிடை தான்கொள்ளே. (581)

§ தாரமென்பது—அரிதாரம்.

சொன்னாரந்த விதமென்ன வென்றுகேட்டால் கொடிதான வண்ணையொடு புளியுந்தன்னி, தன்னுடனே மிளிறைச்சி சாறுந்தன்னி சொற்பத மேவுதற்கு வழியைக்கேளு, கன்னமைக் கடகத்திக் கருணைகேக்கி கனியான சிவமதனைப் பூசைபண்ணு, உன்னுறவா பத்திசக்தி பூசைசெய்தா லுற்றதொரு தேகமது லக்ஷேபரமே. (582

## சத்திசிவ பூசை.

அக்கியது தேகமது மென்றோரு வாயிதோர மாய்கையது வகன்றுபோகும், சிக்குமடா சிவசித்து தன்னாலந்த திருவான சத்தியைநீ பூசித்தாக்கால், தக்குமடா காயாதி கற்பங்கொண்டால் சதாசிவன்போல் தேகவச்சிர காயமாகும், வைக்குள்வெகு சித்துவிளையாடலாகும் கருணைபெறச் சத்திசிவ பூசைபண்ணே. (583)

சத்திசிவ பூசையைத்தான் செய்யவேண்டித் தாரணியில் மானிடர்கள் மாளையேளு, உற்றதொரு சிவமதுதான் தன்னில் தன்னில் குரிமையுட னன்னிர்கொண் டரிக்கோர்தாமும், அத்தியுட தேகமதில் வாய்வுமீது மறையகற்ற மாட்டாம லேபோனவர் புத்தியுட னன்னிரைத் தள்ளிப்போட்டுப் போக்கரிய மடையர்கள்தான் போற்றுவாரே. (584)

வாறான சத்திதனை யறியாமற்றான் மாதர்கள்தன் மாதவிடை சத்தியென்று, வீரான மானிடர்கள் பெண்ணைக்கூடி மெய்யாக மாதர்தம் கொள்வாரப்பா, கூறான மாதவிடை கொண்டபேர்கள் கொடிதான தேகமது லலோலமீறி, நீரத விருமலொடு பீனசரஞ் சிக்கியே தேகமது § மழிந்துபோமே. (585)

அழியாது வண்டாச மூண்டோர்தேக மனதுக்கு நீருக்கு மசையாதப்பா, வழியான மூலமடா புளியுமாகும் மகத்தான வழுரியடா வுப்புமாகும், தெளிவான புளியுடனே யுப்புக்கொண்டாற் றேகவச்சிர காயமடா சிவன்தான்சாட்சி, பழியாம லிப்பொருளைக் கண்டுகொண்டாற் பத்தியுள்ள கற்பமதற் குறுதியாமே. (586)

§ அழிந்துபோமென்பது—மாண்டுபோதல்.



உருகியுள்ள புளியுப்பு சத்திசிவமாச்சு வோகேகே யிவ்விரண்டுமுட லுயிருமாச்சு, பருதிமதி யிவைதானே மைந்தா மைந்தா பதிவான சுடர்துதா னெங்கேயென்றால், கருதுகிறேன் குருவருளாற் கேளுகேளு கருவான கொடிமுடிதா னீர்தானுச்சு, திருவான § கொடிமுடியா யண்டர்தன்னிற் சிறந்திருந்த சுடரதுதான் பூரணமுமாமே. (587)

## பரிதிமதி சுடர்கற்பம்.

பூரணந்தா னுவதுவும் பிரத்தியாகாரம் யுத்தியுட னுண்டோன்றி லமைப்போனுனால், காரணமாக் குருவெடுத்து வைத்துக்கொண்டு கமலமென்ற பீங்கானில் களிமையைக்கொட்டி, மாரணமாய்ச் செய்வதற்குச் சரியாய்ப்பூர மாட்டிநன்றாய்ப் பிசைந்துரவி முகத்தில் வைப்பாய், தாரணையாய்த் தினந்தோறும் ரவியில் வைத்தாற் றன்மையுள்ள ரவியதனால் சுஞ்சுபோச்சே. (588)

போச்சடா சுஞ்சுநீ ரவிதன்னாலே புத்தியுட னதற்குநீர் பூரங் கூட்டி, பாச்சடா நாலிலொன்று சாமந்தானும் பதிவாகக் கல்வத்தில் நன்றாயாட்டி, காச்சடா ரவிமுகத்தில் வைத்துப்பாரு கருவான சுட்டதுதான் மெழுகாய்ப்போகும், பேச்சடா பேசுதற்கு நாவுமுண்டோ பேரான பரிதிமதி சுடரைப்பாரே. (589)

பாரப்பா தன்னகத்தி லிரண்டுதன்னைப் பரிவான வெளிதனிலே யொன்றைப்பாரு, ஆரப்பா வறிவார்கள் ‡வீட்டில்ரெண்டு வமைத்தகரு வெளியிலொன்று வழுத்திப்பார்க்க, வீரப்பா செய்யாது வீட்டில்ரெண்டு வெளியிலொன்று கூட்டிடவே குருவாய்ப் போகும், பேரப்பா முப்பொருளு மிதுவேயாகும் பெலமான புத்திகொண்டு வறிவில் நில்லே. (590)

அறிவான சரியைவழி சிவத்தின்கூறு அடங்காத சத்தியடா கிரியையாச்சு, குறியான யோகவழி யென்னவென்றால் குணமான சத்திசிவ பூசைமார்க்கம், நெறியான ஞானவழி யென்னவென்றால் நேரான கமலமலர் பூரணமேயாகும், துரியமுடன் பூரணமா மௌனந்தன்னைத் தொண்டுசெய்து கொண்டவனே சுகிர்தவானே. (591)

§ கோடிமுடியென்பது—கைலாயம்.

## வித்தின் மகிமை.

வானான வர்கச வமூர்த்தன்னில் வழிதனைபா யனுவ னவு கொண்டாயானால், வினை தேகமது வதுத்துப்போச்ச மெய்யான வயிர்த்து விலகிப்போச்ச, கோனான வாசியது நில்த்துதைபா குண்டலியி னத்திபொலி கர்மையாலே, தேனான வமூர்தமடா தேகமாச்ச தேவாதி தேவனெனப் பேருமாச்சே. ()

ஆச்சப்பா வின்னமொரு முறைமைதேனு வசைத்தாடு மண்டமடா பீசம்பீசம், நீச்சப்பா பீசமென்ற சக்கரமாம்வித்து நிசமான வித்தவாம் விதைதான் மைந்தா, மூச்சப்பா நின்றிலங்கு மூனையாம்வித்து முதண்டமானதொரு வித்துதன்னை, பேச்சப்பா வென்னசொல்வேன் வித்தின் சேர்மை பெருமையுடனெடுக்கும்வகை சொல்லுவேனே. (593)

சொல்லுவேன் கருவமைப்பு வெங்காதன்னில் சொக்கியந்த விதைகன்ரெண்டு மேலேயேறி, கல்லுறவாப் மனிவிட்டுத் சென்றிற்கும் காடியந்த விதையெடுத்து மைந்தாகேளு, தென்னிமையா யிடதுவலக் கண்டெடுத்துத் திறமாக மஞ்சளுடனுப்புங் கூட்டி, கல்லான கல்வமதி லாட்டிமைந்தா கருவான விதைதனுக்குன் கவசம்பண்ணே. (594)

## வித்துக்குக் கவசம்.

பண்ணியந்தக் கவசமதை புடம்போட்டு பாகனே தன்னீரில் வித்துகொண்டு, உன்னியதோர் நித்தநிதம் பத்துமுறை செய்தா லுரிமையுள்ள விதையதுவுங் கட்டிப்போகும், தன்னிமையாய்க் கவசமதை யெடுத்துப்போட்டுத் தாக்கின்ற மகிதனிலே காயப்போடு, புண்ணியனே நன்றாகக் காய்ந்ததானால் புதுக் § கலசப் பாலிலதை யூறப்போடே. (595)

போட்டவிதை யூறினன்றாய்த் கண்டிற்றானால் புத்தியுடனதையெடுத்து வைத்துக்கொண்டு, நாட்டிமையாய்க் கமலசெய்யில் வறுத்துமைந்தா தனதாக வலதுவிதை பொடித்துகொண்டு, யூட்டியந்த கல்லென்னை யிடதுவிதைதன்னைப் பொருக்ததனை வறுத்துயிகப் பொடித்தானன்றாய், சாட்டியந்தப் பொடியதனை வைத்துக்கொண்டு நன்றாக விரும்பொடியுஞ் செமிதில்லையே. (596)

§ கலசப்பால்யென்பது—மாதர்பால்.



வைத்ததொரு வலதுவிதைப் பொடியதன்னை மைந்தனே பணவிடைதான் தேனிற்கொள்ளு, உய்த்ததொரு மண்டலமே கொண்டுதேறி, உறுதியுடன் பூரணத்தி லுகந்துநில்லு, பெற்றதோரிடதுவிதைப் பொடியதன்னைப் பேணியே மண்டலமே மூன்போற்கொள்ளு, பத்தியுடன் மண்டலமே கொண்டுதேறிப் பாலகனு மூன்னுடைய தேகந்தானே. (597)

## மூன் விதைகொள்ள அனுப்பானம்.

உன்னுடைய தேகமதைக் கண்டால்மைந்தா ஒருவேளைக் கோர்திறமா யுறுதி தோன்றும், பின்னமுரு மூன்னமுரு மென்னசொல்வேன் போன தேகமது வலுத்துப்போச்சு, கன்னமாய் விதையருந்தப் பிறவிபோச்சு காதாந்த வாசியது வுரைத்துதையா, தன்னிமையாய் வெகுகோடி யூழிகாலம் தளராது தேகவச்சிரகாயமாமே. (598)

ஆமப்பா விருபொடியு மொன்றாய்க்கூட்டி அருளான குருபரனைத் தியானஞ்செய்து, தாமப்பா தன்வரிலையில் மனதைநாட்டிச் சாதகமாய்ப் பொடியதனை மூலைப்பால்தன்னில், ஓமப்பா பணவிடைகால் கொண்டுதேறி வுறுதியுடன் மண்டலமே கொண்டுதீர்த்தால், நாமப்பா சொல்லுகிறோ மிறுகுந் தேகம் நாடிநரம் பத்தனையும் வலுத்துப்போச்சே. (599)

போச்சென்று விடுகாதே தினமுங்கொண்டு புத்தியுடன் சத்திசிவ பூசைசெய்தால், நீச்சென்ற நரைதிரையு மகன்றுபோச்சு நிலையாத வாசியது நிலைத்துப்போச்சு, பேச்சென்ற பூரணமும் பெருகலாச்சு போன மண்டலமுந் தோணலாச்சு, ஆச்சென்ற வடிப்படையும் வலுத்துப்போச்சு வசையாத தேகமென்ற பேருமாச்சே.

போச்சு § ஞாரதிஷ்டி நடத்தையெல்லாம் பெருமையுடன் சொல்லுதற்குப் பூரணமேசொல்லும், வேராச்சு வித்திதுட மகிமைதன்னால் விளையாட வெகுகால மிருக்கலாகும், நீராச்சு பிறவியெல்லா மற்றுப்போச்சு நேரான பூரணமுஞ் சொலிக்கலாச்சு, ஆராச்சு வஷ்டசித்து மடங்கிப்போச்சு அரகரா யின்னமொரு கருவைக்கேளே. (601)

§ ஞாரதிஷ்டியென்பது—ஞானதிஷ்டி.

## வெள்ளாட்டீரல் கற்பம்.

கருவான வெள்ளாட்டு வீரல்வாங்கிக் கடுகுமஞ்ச ளுப்புடன்று யரைத்துப்பூசி, உருவான தண்ணீரால் வித்தெடுத்து உண்மையுடன் பொடியாக வுலர்த்திமைந்தா, தருவாக வுலர்த்தினதை யெடுத்துக்கொண்டு சாதகமாய்ச் செய்தனிலே வறுத்துநீயும், குருவான பதிநோக்கி யுதையகால்தான் கொண்டுவிடு பொடியென்று குணமாய்த்தானே. (602)

குணமான விப்பொடியை மண்டலமேகொண்டால் குழைக்கின்ற நரம்புகள்தா னிறுகிநிற்கும், கனமான தேகமடா வச்சிர காயங் காயமதிற் றாயாதி கற்பஞ்சென்றால், இனமான தத்துவங்களொடுக்குமைந்தா விருக்கலா மெந்நா ளாகிலுந்தான், மனமான கெவுனமென்ற கெவுனத்தங்கு மாதாந்தச் சேர்வையுடன் வண்மைகேளே. (603)

கேளடா தன்னுடைய தாரந்தன்னில் கெணிதமுடன் மாதாந்த வரிசைவாங்கு, வாளடா வால்மிளகு பூரம்ரெண்டும் வண்மையுடன் காசிடைதான் பொடித்துப்போடு, நீளடா கலக்கிநன்றாய் வைத்துச்சற்றே கோமயத்திற் றன்பொசித்தால் மைந்தாகேளு, வேளடா வெறித்தசெற்றிக் கண்ணுதானு மெய்யாகச் சிவந்தானி போலாம்பாரே. (604)

பார்க்கரெண்டு கண்களுமே சிவந்தாலல்ல பரிதிமதி கடோரினைய யென்னசொல்வேன், தீர்க்கமுட னின்னமொரு விபரங் கேளு இருவான மாதாந்தத் திறத்தைமைந்தா, மார்க்கமுடன் பீங்கானில் வாங்கிக்கொண்டு மகத்தான தண்ணீருங் கூடச்சேர்த்து, தாக்கிநன்றாய் விரலைவிட்டுக் குழப்பிமைந்தா தாகமது தீரநீ பொசித்திடாயே, (605)

பொசித்திடவே கண்சிவப்பு வாங்கிப்போகும் பொன்னொளிபோற் கண்களிரண்டுந் தெளிவாமைந்தா, கசித்ததொரு கண்ணெரிவு மோடிப்போகும் கபாலவிடி பிணிசமுங் காணாதோடும், நசித்தமன வுறுதியினா லறிவுதங்கும் சுதாந்த தேகமதிற் காந்திமீறும், விசித்திரமின்மே § லாக்கினையி லமுர்தஞ்சிந்தும் மேன்மையுள்ளதேகமது விசிதமாமே. (606)

§ ஆக்கினையென்பது—லலாடஸ்தானம்.



ஆமப்பா வின்னமொரு விபரஞ்சொல்வே னாகாா வவையடக்க மாகநில்லு, தாமப்பா தன்னருளால் சாதாந்தத்தில் தருவான முப்பூவில் காசிடைதான்போட்டு, ஓமப்பா வென்றுசொல்லிச் சுழற்றிமைந்தா வுரிமையுடன் மனதுறுதி யாகக்கொண்டால், காமப்பா கருணையினா லனலேமீறி கைலாய போதைவெகு போதையாமே. (607)

போதையிலே மனதுருகி யறிவில்நின்றாற் பூரணமாய்ச் சகலகலைக் கியானந்தோற்றும், பாதையிலே வாசியது நடக்கும்போதில் பக்குவமாய்த் தீபமதிற் புக்கும்பாரு, பேதையிலே பெறும்பைதள்ளி மங்கைமேலே பெருமைவிட்டு வுரிமையிலே பேணிநில்லு வாதையென்ற வருத்தமெல்லா மகன்றுபோகு மார்க்கமுட னின்னமொரு வகையைக்கேளே. (608)

வகையான மாதாந்த வருவி தன்னில் மார்க்கமுடன் பூரணத்தில் மைந்தாமைந்தா, நகையாகப் பணவிடைதா னதனிற் சேர்த்துத் துருவமுடன் றன்கலக்கிக் கொண்டாலையா, தகையான தகையொடுக்கு மனலோமீறி சதா § போதை மார்க்கமதை யென்னசொல்வேன், பகையான சத்துருக்க ளொன்றுமில்லை பார்த்திபனே நீயுமொரு முனியாவாயே. (609)

முனியாகி மூதண்டச் சித்துமாகி மூவுலகில் நீயுமொரு தேவனாகி, பிணியான இல்லறமும் பிலத்துப்போகும் போண்டச் சத்திபெறக் கெவுனமாகும், கனியாலே கருணெல்லிக் கருணையாலே கருவான மாதாந்தங் கருணையாகு, மணியான மனோன்மணியாஞ் சத்திபூசை வகையறியான் கொண்டறினால் மாளுவானே. (610)

மாளுவான் தேகமதிற் செந்தீப்பட்டு மைந்தனே நீறியவன் மாண்டுபோவான், ஆளுவான் சத்திசிவ பூசையாலே யானந்தமானந்த மடங்குமையா, வாழுவான் வாசியது வருநோக்கு மகத்தான தீபவொளி மயங்காதையா, தாழ்வதில்லை யிரண்டுமொன்று யதனில்நின்று சதாசிவன்போல் நீயிருந்து தன்னைப்பாரே. (611)

§ போதையென்பது—மயக்கம்.

பாரப்பா விடிந்தமனே தன்னில்மைந்தா பக்குவமா யதற்கு மொரு முட்டுக்கால்தான், கோப்பா கொடுத்துவிட்டா லசையா தில்லம் சேர்மையுள்ள பூரணமே தேகமாகும், ஆரப்பா வறிவார்கள் வழிதுறையின்மார்க்கம் அகாரா வாயிரத்தைப் பதனம்பண்ணு, பேர்பெற் பெற்றதொரு வாயிரத்தைநீயும் பேருலகி லறிவுடையோர்க் கறிந்துபேசே. (612)

பேச்சறிந்து பேசுவதே யுண்மையாகும் பேருலகில் மானிட்ரோ சாத்திரங்கள்பார்த்து வாய்ச்சமர்த்தாய்ப் பேசிடுவா னறியான்போல மனநிலைக்க மாட்டாத மாடுமாடு, கூச்சமற்றுக் குறியோடே பேசமாட்டான் கூறுவான் முன்பின்னாய்க் குலைநாய் போலே, மாச்சல்கொண் டலைவாலா யடுக்கவேண்டா மகத்தான காயாதி கற்பந்தின்னே (613)

## செந்தூரக் கற்பம்.

கற்பமதற் கின்னமொரு முறையைக்கேளு கைலாய புலத்தியர்தங் கருணையாலே, சிற்பமென்ற செந்தூரமடா மைந்தாகேளு செனித்தவுடன் மறித்ததனைத் தேடிப்பார்த்து, உற்பனமாய்க் கொண்டுவந்து கோசைபோக்கி யெடுக்கமுடன் றுன நீர்த்து யுலரப்போட்டு, விற்பனமா யப்படியே மஞ்சள்கூட்டி விபரமுடன் றுணைத்துப் பிசறிப்போடே. (614)

போடப்பா பிசறினன்றாய்க் காயப்போட்டு புண்ணியனே தானிடித்து மாவதாக்கி, நாடப்பா பாண்டமதிற் காடிவிட்டு நன்றாகத் தான்பிசைந்து பிறக்கப்போடு, தேடப்பா விப்படியே பத்துமுறைசெய்து சிவசிவா ரவிதனிலே யுலர்த்திமைந்தா, § விடப்பா லிடப்பதற்கு நன்றாய்க்கட்டி விபரமுடன் வடிகட்டிப் பதனம் பண்ணே. (615)

பண்ணினதோர் சூரணத்துக் கரைதாலுப்பு பண்பானமிளகுடனே சீரகமுங்கூட்டி, தண்ணிமையாய்ப் பொடிபண்ணிச் சூரணத்திற்சேர்த்து தயவாக சேகித்து வொன்றாய்க்கட்டி, புண்ணியனே பிங்கான்றன் மேலேவைத்து புத்தியுடன் சற்குருவைத் தியானம்பண்ணி, வண்ணியென்ற கடுக்காய்ச்சூரணத்திலைமைந்தா மார்க்கமுடன் காசிடைதா னிருபோதுண்ணே. (616)

§ விடுயென்பது—திரேகம்.



உண்ணயிலே மலசலங்கள் கழிந்துபோகு மூழ்நதியுள்ள தேகமதா யிருக்குமப்பா, விண்ணிறைந்த காட்சியடா கடுக்காய்மூல மேலானமூலமதை விரும்பிக்கொண்டால், புண்ணியமாம் தேகமதற் கழிவோயில்லை புத்தியுள்ள கற்பமது பிரமகற்பம், தண்ணிமையாய்ப் பெருமீனுக் கிரைதான்குஞ்சு தானறிந்து வுலகமதுதயங்கும்பாரே (617)

பாரப்பா சாஸ்திரத்தை யெடுத்துப்பார்த்து புத்தியுடன் கருக்குருவை யறிந்துகொண்டு, வீரப்பா செய்யாமல் மனமடங்கி நல்ல விருப்பமுடன் சூரணத்திற் பணவிடைதானெடுத்து, காரப்பா வுதயாதி யமுர்தமீதைக்கொண்டு கருவான சூரணத்தை மனதறிவாற்கொண்டு, பேரப்பா பெற்றதொரு தேகமதற்குறுதி பலமான வுறுதியடா பேணிமிகக்கொள்ளே. (618)

கொள்ளுவதற் கின்னமொரு வுறுதிகேளு குருவான சூரணத்திற் பணவிடைதானெடுத்து, தெள்ளிமையாய் வமுரிதன்னிற் கலக்கிக்கொண்டாற் சிவசிவா தேகமதற் குறுதியுண்டாம், கள்ளுறவாய் மண்டலம்நால் பொசித்தாயாகில் காடிநின்ற நரைதிரையுமுதிர்ந்துபோகும், தள்ளிநின்ற விந்துவுங் கட்டிப்போகும் சகமாகும் தேகமது சுத்தமாமே. (619)

## சவர்க்காரம்.

சுத்தமுள்ள சவர்க்காரஞ் சொல்லக்கேளு சுகமான வாதியந்த மண்டபிண்டம், வித்தான பிண்டமதை யெடுத்துமைந்தா விசையான கோரையைநீ யகற்றிப்போட்டு, பத்தாசை கொள்வதற்கு பொறுக்கியெந்தப் பதிவாகக் கல்லுரலி லிடித்துமைந்தா, வற்றாத § காடிதன்னில் தோண்டிப்போட்டு மார்க்கமுடனடுப்பேற்றி யெரித்திடாயே. (620)

எரித்துநன்றாய்க் கிண்டிவரில் மைந்தாகேளு இதமான புஷ்டியெல்லாங் கரைந்துபோகும், குறித்ததோர் கஸ்தியெல்லாம் பொறுக்கிநன்றாய்க், கூர்மையுடன் தவிடதுபோ லிடித்துக்கொண்டு தரித்ததொரு முன்மாவிற் சேர்த்துமைந்தா தன்மையுடன் மறுபடியுங் காடிவிட்டு, திருத்தமுடன் அடுப்பதனிற் கிண்டிக்கிண்டிச் சிவந்துயுதக் குழம்பான பாகிற்கேளே. (621)

§ காடியென்பது—ஆறுமாதம் புளித்தகாடி.

கேளடா வெடியுப்புச் சினக்காரங் கிருபையுள்ள நவச்சாரஞ் சூடனுப்பு, காணடா விந்துப்பு வைத்துமொன்றாய் நன்மையுடன் வகைவகைக்குப் பலம்பத்தாகச்: சூளடா வைத்துப்புமொன்றாய்ச்சேர்த்துத் துருவமுடன் மாவாக்கிப் பாகிற்சேர்த்து, வேளடா வாராமல் நன்றாய்க்கிண்டி குணமான பதங்கண்டு யிறக்கிடாயே. (622)

இறக்கியந்தச் சூட்டுடனே விளாங்காய்போல இதமாகவுருட்டிவிடு விறுகிப்போகும், நிறக்குமிந்தச் சவர்க்கார வுண்டைமைந்தா சிவசிவா வென்னசொல்வேன் வழலைப்போக்கு, அரக்குமணி மாளிகையாஞ் சவர்க்காரந்தான் ஆதரித்து செய்வார்களையா வையார், சாக்கில்வெகு சாக்கிதான் சவர்க்காரந்தான் தன்மையுட னின்னமொரு வகையைக்கேளே. (623)

கேளடா பேரியிலே வளர்ந்தபிண்டம் கெணிதமுட னேந்திக்க ளானபின்பு, காளடா பகிரதிக்கு வெல்லந்தோடே நடுவான ரவிபிசங் கூடச்சேர்த்து, தாளடா வவன்தனக்கு விந்தால்மைந்தா தன்மையுடன் விதனமன்றி வருகும்பாரு, பாளடா யமுரிதனி லெடுத்துப்போட்டு பக்குவமா யடுப்பேற்றி யெரித்திடாயே. (624)

எரித்தபத மென்னவென்று லழுத்திப்பாரு விதமான மெதுவாக விருந்தானால், தரித்ததோ ரூல்தனிலே யிடித்துமைந்தா தன்மையுள்ள காடிதனில் கலக்கிக்கொண்டு, குறித்ததோர் பாண்டமதை யடுப்பிலேற்றிக் குழம்பாகும் பருவமட்டுங் காய்ச்சிநன்றாய், நெறித்தபதம் வருமளவும் நன்றாய்க்காய்ச்சி நீமகனே பருவமதில் நன்றாய்க்காய்ச்சே. (625)

காய்ச்சிநன்றா யிருக்குமந்தப் பாகுதன்னில் கருவான வுப்புவகை சொல்லக்கேளு, பாய்ச்சிடுவாய் கறியுப்பு வளையலுப்பு பாங்கான கல்லுப்புப் § படிகஞ்சூடன், மாய்ச்சலுடன் செய்யாமல் வகைக்குநீதான் மார்க்கமுட னேந்துபலம் வாங்கிக்கொண்டு, தாட்சியென்றும் வாராமற் பொடித்துமைந்தத் தழலான பாகுதனிற் போட்டுக்கிண்டே. (626)

§ படிகம்யென்பது — சீனக்காரம்.



கிண்டியந்தப் பதந்தனிலே யிறக்கிக்கொண்டு கிருபையுடனுருட்டிடுவாய் விளாங்காய்போலக், கண்டிதமா யுருட்டிவிடு விறுகிப்போகும் கருவான சவர்க்காரங் காரங்காரக், துண்டிதமாய்க் கண்டிக்குஞ் சாக்கைமைந்தா துடியான சவர்க்காரம் வழுவைப்பாம்பு, எண்டிசையுங் காக்குமடா வழலைக்கார மேகாந்தமென்குருவும் பாடினாரே. (627)

பாடினா ரவிரந் திருநாறுக்குள் பண்பான சவர்க்காரம் வழலைப்போக்கு, ஆடினார் வெகுபோக்கு சவர்க்காரத்தை ஆதியந்தப் பொருளதிலே யடங்கிப்போச்சு, காடினார் போதமிரி தன்விலேதா னாரந்தச் சின்மயனா ரறிந்துகொண்டு, கூடினா ரட்டமா சித்துதன்னைக் குவிந்துமன தொன்றாக்கிக் குருவைக்காரே ()

## தென்னங்காய்ச் சவர்க்காரம்.

காக்கவே யின்னமொரு காரங்கேளு கருவான § தென்னங்கா யெடுத்துவந்து, மூர்க்கமுடன் றுனுடைத்து வழுக்கைதோண்டி வரிசையுள்ள சிப்பிதனைப் பொடித்துச்சேர்த்து, தீர்க்கமுள்ள வமுரிதனிற் கலக்கிமைந்தா சிவசிவா யடுப்பேற்றி யெரிப்பாயப்பா, பார்க்குமன தறிவாலே யெறிக்கும்போதில் பக்குவமாய் நீர்வற்றிக் குழம்பாம்பாரே. (629)

குழம்பான பருவமதிற் சூடன்காரந் துரிசான லிங்கமொடு வீரம்வெள்ளை, தளம்பாமற் சாக்காறு பலமேவாங்கித் தன்மையுடன் தான்பொடித்து வைத்துக்கொண்டு, வளம்பெறவே தாவியதை நன்றாய்க்கிண்டி மார்க்கமுட னுருட்டிவிடு விளாங்காய்போல, நலம்பெறவே சூடாறி யிறுகிப்போகும் நாதாந்தத் சவர்க்கார வுண்டையாமே. (630)

## துருசு சவர்க்காரம்.

ஆமப்பா யிக்கார மதிககார மாரறிவா ரிந்தமுறை யொருவர்காணார், தாமப்பா தன்னருளா லறிந்துகொண்டு தயவாகவின்னமொரு காரங்கேளு, நாமப்பா சொல்லுகிறோம் துருசுசவர்க்காரம் நன்றாகப் பன்றியுட கொழுப்பைவாங்கி, ஓமப்பா மனதறிவா லயக்கின்னத்தி லொடுக்கியடுப் பேற்றியனலெரித்திடாயே. (631)

§ தென்னங்காய்யென்பது—தேங்காய்.

எரித்திடவே செப்பதுவு முருகித்திற்கு மின்பமுட னெய்வி விட் மருந்தகேளு, சூதித்ததொரு தருசதுவும் பலமேவாங்கி குருவான லிங்கமொடு வீரம்வெள்ளை, விரித்ததொரு நாகாசக் தாரங்கார மேலான வெழுசாங்கும் காலேகட்டி; செரித்ததொரு நரிசதுவை யொன்றாச்சேர்த்து சேர்மையுடன் பொடித்ததனை செய்யிற்றாலே. (632)

தாவிகன்றாய்க் கிண்டியதை யிறக்கிக்கொண்டு சூடாறு முன்பாக வுருட்டிமைந்தா, ஆவியென்ற சூடதவு மாறிற்றானு லசையாத கல்லுபோ லிறுகிநிற்கும், காவியென்ற தருகசவர்க் காரமாச்சு நல்லசவர்க் காரமது பதனப்பண்ணி, காவியென்ற காரமதில் முறையோகோடி கருவறிந்து செய்வோர்க்குக் கடாட்சந்தானே. (633)

## லிங்கச் சவர்க்காரம்.

தானென்ற தருகசவர்க் காரஞ்சொன்னேன் தன்மையுடன் லிங்கசவர்க் காரங்கேளு, வானென்ற லிங்கமடா பலந்தானொன்று வொருமையுள்ள வீரமுடன் பூரம்வெள்ளை, கோனென்ற தாரமொடு காரமைந்து குணமாகக் காற்பலமா யெடுத்துக்கொண்டு, தேனென்ற லிங்கமுட னொன்றாய்க்கூட்டிச் செம்மையுட னுன் பொடித்து வைத்துக்கொள்ளே. (634)

கொள்ளடா § கத்தபத்தின் கொழுப்பைவாங்கி கூர்மை யுடனெய்யுருக்கி வைத்துக்கொண்டு, சொல்லடா வப்பொடியைத் தாவித்தாவி செலுத்திமிகக் கிண்டியதை யிறக்கிமைந்தா, நல்ல தொரு சூடுடனே யுருட்டிப்போடு நலமாக பாரினியின் வீறிப் போகுந், சொல்லடா லிங்கசவர்க் காரமென்று சுகமாக யிதனில் வெகு வேதையாமே. (635)

## வீர சவர்க்காரம்.

வேதையென்ற லிங்கசவர்க் காரஞ்சொன்னேன் வியாமுள்ள வீரசவர்க் காரங்கேளு, கோதையென்ற வீரமடா பலந்தானொன்று குருலிங்க தாரமொடு காரசாரம், நீதமென்ற வெள்ளையுடன் காலேபூட்டி நிசமாக வீரமுடன் பொடித்துக்கொண்டு, பாதமென்ற முடியான பூரணத்தைவாங்கி பருவமுடன் கொழுப் பெடுத்து செய்யாய்க்காய்ச்சே. (636)

§ கத்தபம்என்பது—கழுதை.



காய்ச்சியக்க செய்தனிலே பொடியைத்தூவி கருத்தறவே கிண்டியதை யிறக்கிமைந்தா, பாய்ச்சியது வெடுத்தானன்று யுருட்டிப்போடு பருவமுடன் சூடாறி யிறுகிநிற்கும், தாய்ச்சியில்லாக் காரமது வீரசவர்க்காரந் தன்மையுள்ள காரமதை யாரறியப்போறார், தீய்ச்சியக்கக் காரமதில் வெகுபோக்குண்டு நிலையறிந்து கலையறிந்து சேர்த்துபாரே. (637)

## கௌரி சவர்க்காரம்.

பாரப்பா கௌரிசவர்க் காரஞ்சொல்வேன் பரிவான கௌரியது பலந்தானொன்று, கோப்பா வீரமொடு தாரங்காரம் நிலையான நிலையுடனே லிங்கமைந்தும், சேரப்பா வகைக்குக்காற் பலமேசொல்வேன் செம்மையுள்ள கௌரியுடன் பொடித்துக்கொண்டு, ஆரப்பா வறிவார்கள் ஞானியண்டம் அன்பான வண்டமதில் தைலம்வாங்கே. (638)

வாங்கியக்கத் தைலத்திற் பொடியைத்தூவி மார்க்கமுடன் கிண்டியதை யுருட்டிமைந்தா, தாங்கியதை வைத்துப்பார் யிறுகிப் போகுந் தன்மையுள்ள காரமது கௌரிசவர்க்காரந், தீங்கில்லாக் காரமதை யாரறிந்துசெய்வார் திருவான பூரணத்திற் சேர்த்தோன் செய்வான், காங்கையுள்ள கௌரிசவர்க் காரமதில்மைந்தா கன வேதை சூட்சவேதை கண்டுபாரே. (639)

## கெந்தி சவர்க்காரம்.

பாரடா கெந்திசவர்க் காரஞ்சொல்வேன் பத்தியுடன் கெந்தியுடன் பலமோவாங்கி, சேரடா தரிசடனே தாரங்காரந் திறமான லிங்கமொடு வெள்ளையைந்தும், நேரடா வகைக்குக்காற் பலமேவாங்கி நேர்மையுள்ள கெந்தியுடன் பொடித்துக்கொண்டு, ஆரடா யறிவார்கள் வெள்ளாட்டுண்மை அதன்கொழுப்பை வாங்கிமிக செய்யாய்க்காய்ச்சே. (640)

செய்யாகக் காய்ச்சினதிற் பொடியைத்தூவி செருக்கினன்றாய்க் கிண்டியதை யுருட்டிமைந்தா, கையாற வுருட்டினதை யெடுத்துப்பாரு கனலாறி யிறுகியது கல்லுபோலாம், மெய்யாக வுருட்டினதோர் காரந்தானும் மேன்மையுள்ள கெந்திசவர்க் காரமாகும், துய்யனவே யிதன்வேதை கோடாகோடி § துறையறிந்து பருவம்பாரே. (641)

§ துறையென்பது—வகைவிபரம்.

பாரான பிருதிவியை யறிந்துகொண்டு பக்குவமாய் வாயி
ரத்தைப் பார்த்துமைந்தா, கோரான வாசியிற்சென் றேறியந்த
நிலைத்ததொரு நிபமதை நினைவாற்கண்டு, பேரான குருபதத்தைத்
தொண்டுபண்ணி பெருமையுள்ள மௌனமதிற் பேணிநில்லு,
கூரான சிவயோகக் குறிகண்ணூட்டு குறியறிந்து நெறியறிந்து
குருவைக்காரே. (642)

காரப்பா கருக்குருவாய்ச் சொன்னதிந்தக் கருவான வாயி
ரத்தைக் கசடரோடு, சாரப்பா விருந்ததனைப் பேசவேண்டாந்
தன்மையுள்ள பொருளதனைக் கூறவேண்டாம், கேரப்பா நின்ற
பொருள் விள்ளவேண்டாம் கிட்டுற மானமன முடையோர்கோடி,
நேரப்பா யவர்கன்குண மறிந்ததன்று சிவயோக மானகற்பந்
தின்றதேறே. (643)

தேறுதற்கு வழிமுறையை நன்றாய்ச்சொன்னேன் தெளி
வான சவர்க்கார முறையைச்சொன்னேன், கூறுதற்கு மந்திரத்
தின் குறியுஞ்சொன்னேன் குறியான வாலையுட பூசைசொன்
னேன், ஏறுதற்கு சித்தருட வழியுஞ்சொன்னேன் இதமான
காயாதி கற்பஞ்சொன்னேன். பேறுபெற்ற நன்மைதன்மை யிபாஞ்
சொன்னேன் வேதாந்த சாரமதின் வெளிசொன்னேமே. (644)

## கூரபாண்டத் தைலம்.

சொன்னமொழி தலங்கவொரு யிபாங்கேளு சுத்தமுள்ள
தைலமதின் றடைகடன்னை, வின்னமில்லாப் பாண்டமடா சா
பாண்டந்தான் மென்மையுடன் றன்வறுத்துப் பாண்டத்திட்டு,
நன்னயமாய்ச் சந்தியுட வெடியுங்கூட்டி நலமான காரமுடன்
ருடஞ்சேர்த்து, வன்னலிமையாய் வகைக்கைந்து பலமேவாம்வி
சொறுக்கினன்றாய்ப் பொடித்ததனைப் பாண்டந்தாக்கே. (645)

தாக்கினன்றாய்க் காடியதைப் பாண்டந்தன்னில் தன்மை
யுடன் நீரைவிட்டு யடுப்பிலேற்றி, பாக்கியமென் றேமகனே யன
லைத்தாக்கு பக்குவாய்நீர்வற்றப் பதமாய்க்கண்டு, கோக்கியதைக்
கெண்டிவரில் நீர்கள்வற்றி றுண்மையுள்ள தைலமது மேலேநிற்கும்,
தாக்கியநீதார் தைலமதை வடித்துக்கொண்டு துப்பறவாய் § மேரு
தனி லடைத்திடாயே. (646)

§ மேருவேன்பது—சீசா.



அடைத்ததொரு தைலமதைப் பணவிடைதானெடுத்து அரு
ளான குருபதத்தைத் தியானம்பண்ணி, இட்டதுடனே கொண்டு
விடு மண்டலந்தானப்பா தீர்க்கமுடன் வாசியது திறந்துபோகும்,
§ கடத்திலோர் சட்டைநன்று யுரிந்துபோகும் கன்மவினை தானே
டிக் கழன்றுபோகும், மடத்தனமாய்த் திரியாமற் குருவைக்
காத்து மார்க்கமுடன் சத்திசிவ பூசைபண்ணே. (647)

பண்ணப்பா சத்திசிவ பூசையாலே பலபலவாங் கற்ப
மெல்லா முறுதியாகும், எண்ணப்பா வென்றுசிவ சத்திபூசை
இகழ்ந்துவிட்டாற் கற்பமதால் தேகம்போகும், மண்ணப்பா வெஞ்
றுசடம் போனாலும் மானிலத்தி லவன்றவக வீணேயாச்சு,
பொன்னப்பா பொன்னதுபோல் சடத்தைப்பேணிற் பூவுலகில்
நீயுமொரு சித்தனாமே. (648)

சித்தனாய்ப் பிறந்திருந்தும் புத்திதன்னில் செம்மையுட
னறியாட்டா லென்னசொல்வேன், சுத்தமுள்ள தேகமடா தேவ
ரூப சுருபமுள்ள தேகமதை யறியாமற்றான், பத்தாலை கொண்டு
புல ருசியைத்தின்று பாழ்ககிற் போவார்க்குப் பலனுண்டாமோ,
சத்தமாய் நின்றசிவ சத்திதன்னைச் சாதகமாய்ப் பூசையதுவுங்
டானஞ்செய்யே. (649)

## வஞ்சிப்பால் பிட்டு.

செய்யவே யின்னமொரு தைலங்கேளு சிவசிவா குழித்
தைலஞ் செய்யவன்னே, தோய்யவே வஞ்சியென்ற கொடியிற்
றுவஞ், சுத்தமுட னிரண்டுமூன் றுண்டுபார்த்து, பையவே
தானறுத்துப் பாலைவாங்கிப் பக்குவமா யடுப்பேற்றி யவிக்கும்
போது, மையவே யுப்புடனே முளைகாய்கட்டி நன்றாகப்
பொடித்ததைப் பாலிற்சேரே. (650)

சேர்த்தானன்றாய்க் கிண்டிவரிற் பிட்டுப்போலாந் திறமான
பிட்டதனை வைத்துக்கொண்டு, பார்த்திபனே காசிடைதான்
கொண்டாயானால் பருத்துநின்ற நரைதிரைகள் பாழாய்ப்போகும்,
ஏற்றிநின்ற வாசியது விந்துந்தேக மெந்நாளாகிலுந்தா னழியா
தப்பா, சாற்றியதோர் வஞ்சியென்ற கொடியைமைந்தா தான்
கரைத்து ரவிதனிலே காயப்போடே. (651)

§ கடம்யேன்பது—தேகம்.

## வஞ்சிக்கொடிக் குழித்தைலம்.

போட்டதொரு கொடிக்குகைச் சுருக்குசேர்த்துப் புத்தியுட னுமிலொன்று § பூரஞ்சேர்த்து, தாட்டிமையாய்ப் பாண்டமதி லடக்கம்பண்ணிச் சட்டிகொண்டு மூடிமண் சார்துசெய்து சாட்டியதோர் சட்டியின்மேல் தமரும்போட்டு நன்மையுடன் குழிவெட்டிக் கலசம்வைத்து, பூட்டியதோர் கலசமதில் தமர்நிறுத்திப் புத்தியுடன் மணலிட்டுப் புடத்தைப்போடே. (652)

போட்டபுட மாறினபின் பதனமாகப் புத்தியுட னெடுப்பாய்க் கலசந்தன்னை, தாட்டிகமாய்க் கலசமதில் தைலந் தானுந் தன்மையுடன் றுளிநவ்வி யிருக்குமைந்தா, தேட்டிமையாய்த் தைலமதை மோரில்விட்டு நிவிவர்; பதனமதாய் வைத்துக்கொண்டு, கூட்டியதோர் தைலத்திற் பணவிடைதானெடுத்துக் குருவான பழிநோக்கிப் பொசித்துகேல்லே. (653)

நில்லடா வக்கினி பதனிலேதான் கிளைவுகொண்டு வாசியதில் நிறுத்திப்பாரு, கல்லடா வஞ்சேகம் கசியாதப்பா கருவான வாசியது கழருதப்பா, அல்லடா தேகமதிற் சட்டைபோகும் ஆண்டுமொரு கோடிவரை யிருக்குமப்பா, செல்லடா மதியமூர்த்த மொன்றாமேனி செம்மையுட னண்டமைக்கிற் கருகிவரக்கே. ()

## மதியமூர்த்த மெழுகு.

கருவான கருவதனில் முப்பூச்சேர்த்துக் கையாறாய் பிசைந்துவிடு பலமைந்தப்பா திருவான கற்பூரம் பலமைந்தை செம்மையுடன் றன்பொடித்துக் கூடச்சேர்த்து, உருவான பூரணத்தை ரவிதப்போடு உண்மையுள்ள ரவிபதனாற் காய்ந்தால், தருவான மெழுகதுபோ லிருக்குமப்பா சங்கையுள்ள மதியமூர்த்தி விந்துபாரே. (655)

பேரான மதியமூர்த்தந் தன்னைவாங்கி பெருமையுடன் பாணிதனி லடக்கம்பண்ணி, ஊரான ரவிலூசைக் கண்டுதேதி உறுதியுடன் ரேசகபூரகமும்பண்ணி, கோரான கும்பகத்தில் வாசிபூட்டி நின்றிலங்கும் தீபமதை நோக்கிக்கொண்டு, கூரான மதியமூர்த்தந் தன்னிலேதான் குவிந்தெடுத்தாற் பணவிடையும் குணமாய்த்தானே. ()

§ பூரம்யென்பது—பச்சைக்கற்பூரம்.



தானான மதியமூர்த்தந் தன்னைவாங்கி சமரசமாய் மண்டலமே கொண்டாயானால், வீணான தேகவச்சிர காயமாகி மேன்மைபெற்ற மூர்த்தாச தேகமாகும், கோனான மூர்த்தசாங் கொண்டோர்தம்மை குவலயத்திற் காண்பதரி தாகுமையா, வானான வாகாய மதிதன்னாலே மகத்தான சித்தருட மார்க்கங்கேளே. ()

## ஞானக் கூறு.

மார்க்கமென்ன சொல்லுகிறேன் மைந்தாமைந்தா மகத்தான வுலகிலில்லத் தோடிருந்து, தீர்க்கமுட னாசையைத் தள்ளிப் போட்டுச் செம்மையுடன் வறுமையோடிருப்பானையா, ஆர்க்கும்வெகு நோய்கள்வந்து வவரைக்கண்டால் அப்போதே விலகிவிடு மமுர்தக்கூறு, வாக்குமனந் தவறாத மகத்தாஞ்சித்தன் வணக்கமுட னுலகதனில் திரிவான்பாரே. (658)

திரிந்திடுவான் சிறுவனைப்போல் பேதையாகத் திரிந்தானுஞ் சதாயோக நிஷ்டையாவான், அரிந்திடுவான் லோகமதி லவரவர்கள்மனதை அறிந்துமவன் மனதோடே பேசிக்கொள்வான், விரிந்துமனந் தனைநிறுத்தி மௌனவான் மெய்யான குருபதத்தில் மேவிநிற்பான், சொரிந்துநீ ரனலுக்குங் கனலுக்குந்தான் சோர்வணடி பராபரத்திற் சொக்குவானே (659)

சொக்கிமன வாசியிலே லாதாரந் தொடர்ந்தேறி மேல்வரையா மேலாதாரம், § புக்கியந்த சிலம்பொலியைக் கண்டுதேறி பூரணமாம் கீழ்வரையிற் புத்தியாலே, நிற்குநிலை தனையறிந்து திரும்புவான்பார் நேரான கொங்கணவ ராடுங்கூத்து, திக்குவிசை யஞ்செலுத்தி வந்ததாலே சிங்கமவன் கொங்கணவன் திறந்தான்பாரே. (660)

## அமுரி கற்பம்.

பாரப்பா கொங்கணவர் பற்பந்தன்னைப் பக்குவமாய்க் கொண்டநிலை லாராதாரம், நேரப்பா நிலையறிந்து சென்றுதாவி நேரான வாறுவரை கடந்தப்பாலே, மேரப்பா தனில்வாசி கொண்டு புக்கி மேலான தீபமதில் மேவிச்சென்று, சீரப்பா சிந்தைமன தோன்றதாகிச் சிவகற்ப காலம்வரை செலுத்தினரே. (661)

§ புக்கியென்பது—சென்று.

செலுத்துதற் கின்னமொரு முறையைச்சொல்வேன் செப்பு முறை தன்னமறந்தா லேதுசெய்வோம், பழுத்தவிந்தேகமது வாளுமென்ன பக்குவத்தைச் சொல்லுகிறேன், பணிக்குகேளு, கொழுந்தமி விரைச்சிபெய்யிலை புளிதாம்பூலம் குருவருளால் தன்னிவிடு மண்டலத்தானப்பா, அழுத்தமனை துறுயினால் தன்னிப் போட்டு அப்பனே தன்னமுரி யிறக்குவாயே. (662)

இறக்குவாய் பிங்காளி சிறந்திக்கொண்டு இன்பமுள்ள ரசபீசம் கூடச்சேர்த்து, சிறக்கவதை மூடிவைத்து மகாகட மாந் செம்மையுட ஞானமாய்ச் செலுத்திமைந்தா, மறக்கமெதி யில்லாமல் நினைமுயக்கொண்டு மார்க்கமுட வழிதெடுத்து வளையில் நில்லு, உறக்கமதைச் சாதகமா யகற்றியே உண்மையுடன் சதா காலங் கொண்டிகில்லே, (663)

கொண்டதினால் வாய்வகலுங் குட்டோறுது குடிலமென்ற கோப்பவெல்லாங் குணமாய்த்தீரும், அண்டபிரா வருளதுவு மகத்தில்தங்கும் ஆயிதோகாயுட மாய்கைநீங்குஞ், § சண்டனவன் குன்னிலடி மாண்டுபோவான் சமாசமாய்த் தன்னமூர்தங் கொண்டதாலே, மண்டலமா மண்டமதில் வாசிதங்கும் வாசியென்ற மூலமதின் வரிசைகேளே. (664)

## சத்திசிவ மெழுகு கற்பம்.

வரிசையென்ன சொல்லுகிறேன் மைந்தாகேளு வண்மையுள்ள வழுதிதலிற் புளியைச்சேர்த்து, பரிசடனே நான்கரைத்து விறுத்துநல்ல பக்குவமாய் ரசமுகத்தி லுலரப்போடு, புரிசமுடன் குனலர்ந்தா லதமேற்பின்னும் புத்தியுடன் முன்போல கரைத்திறுத்து, உரிசையுட னிப்படியே பத்துமுறைசெய்தால் உண்மையுடன் சத்திசிவ மெழுகாய்ப்போமே. (665)

மெழுகாகி நின்றசிவ சத்திதன்னை மெய்யாக மாலையிலே பணவிடைதான்கொள்ளு, கெழுமேனு சதாகாலங் கொண்டுதேது நேர்மையுள்ள இசைவாய்வு நீழுபில் நிற்கும், ஒழுகான மூலமுந் லாராதார முறையுடன் குண்டிலைக்கு முன்மையுண்மை, அழுகான தேகமதிற் சட்டைதள்ளுஞ் சோதியென்ற ரசிபோலே காத்தியாமே. (666)

§ சண்டன்யென்பது—யமன்.



சாத்தியென்ற மூலமதில் வாசிநின்று கருவான தீபமதிற் புக்கும்பாரு, சாத்தியென்ற வாய்வதிலே தீபம்புக்குந் தன்மையுடன் குனிறங்கி மூலஞ்சேர, பாத்திபமாய்த் தீபமது மூலஞ் சேர்த்தால் பதியான பதியதுவும் பதியாய்க்காணுஞ், சேர்த்ததொரு பசுபாசந் தீர்ந்துபோகுஞ் சிவசிவா பிரமாதிதேகமாமே. ()

ஆமப்பா வுடலுயிரு நிலைத்ததானால் அருளான யருள் பெறுகப் பூரணத்தைக்கொள்ளு, தாமப்பா பூரணமும் பிரத்தியாகாரந் தருவான காமட்டா வாதியந்தங் காமப்பாற் கசிந்தொழுகிக் கருவாய்நிற்குங் கருவான மூலமடா வண்டமாச்சு, நாமப்பா வண்டமென்ற ஞானியண்டம் நலமான வண்டமதின் வளமைகேளே, ()

## இளநீர் வழுக்கை மெழுகு.

வளமையென்றி வண்டமடா சிற்றோண்ட மார்க்கமென்ற வண்டமதை யார்தான்காண்பார், இளமையென்ற பருவமதா யிருக்குமண்ட மேகாந்த வண்டமென்ற யிளநீர்வாங்கி, தலைமை பெறத் தானுடைத்து வழுக்கைதோண்டித் தன்மையுள்ள பிங்கான்றன் குலத்திட்டு, குலம்பெறவே காடியென்ற யமுரிவிட்டுக் கூர்மையுடன் கரைத்துநன்று பிறுத்துப்போடே. (669)

இறுத்தான்றாய் ரசிதனிலே காயப்போடு ஈரம்வற்றிச் சுண்டினபின் யின்னங்கேளு, கருத்துறவே யின்னமதிற் கரைத்து வாரு குருவாக யிப்படியே பத்துமுறைசெய்து, திருத்தமுடன் பத்துமுறை செய்தபின்பு சிவசிவா ரசிதனிலே காயப்போடு, § கிருத்துவமா யிருக்காம லுரித்தாய்ப்பாரு இருபையுடன் சிவந்த மெழு காகும்பாரே. (670)

பாரான மெழுகெடுத்து மைந்தாநீயும் பதிவான ரசபீசஞ் சரியாய்ச்சேர்த்து, கூராகச் சேர்த்ததனைக் கல்வத்திட்டுக் குருவான பொருளோர் மனதிலெண்ணி, கோரமின்றகுரு தன்னைப் போற்றி தினவாக மத்தித்து மைந்தாமைந்தா, போனபிங்கான்றன் பேரில்வைத்துப் பிலமாகத் தான்மூடி வைத்துக்கொள்ளே. ()

§ கிருத்துவமென்பது—செருக்கு.

## மேற்ரேட்டின் பற்பம்.

கொன்றநிற விதமென்ன வென்றுபாமிற் குணமாக மேற்ரேட்டைச் சுத்திசெய்து, கல்லுறவரு பிடைக்கிடைதான் மாலாம்பிசம் நன்மையுடன் றன்சேர்த்துப் § பழச்சார்விட்டு, கல்லுறவாய்த் தானரைத்து வட்டுப்பண்ணிக் கடிதான ரவிதனிலே புலரவைத்து, புல்லுறவாய் மண்சீலை வலுவாய்ச்செய்து புடமதுவு கிதானமதாய்ப் பொருத்தச்செய்யே. (672)

பொருந்திநின்ற புடமதனை யெடுத்துப்பாரு புட்பமலர் போலவுந்தான் நீறிநிற்கும் வருத்தியந்தப் பற்பமதை வைத்துக்கொண்டு மார்க்கமுடன் பணவிடைதா னிருபோதுண்ணு, திருத்தியந்தப் படிதானே மண்டலமேகொண்டு திறமாகச் சுத்திசெய பூசைபண்ணு, தெரிந்துகொண்ணு பூரணத்தை யெடுத்துவைமந்தா திறமாகக் கடுகளவு வெடுத்திடாயே. (673)

எடுத்ததோர் பூரணத்தைத் தியானஞ்செய்து இன்பமுடன் ரேசகபூ ரகமும்பண்ணி, சுடுத்தமாய்க் கும்பகத்தில் வாசிபூட்டி கடுவான பூரணத்தைப் பூசைபண்ணு, தொடுத்ததொரு பூரணத்தின் பூசையாலே சுகமாகத் தேகமது தனராதையா, முடித்ததொரு பூரணத்தின் மகிமையாலே மூவுலகுந் தெரிசனையாய் முத்தியாமே. (674)

முத்திகொண்டு மண்டலமே கொண்டாயானால் மீறிநின்ற தேகமதிற் சட்டைபோகும், பத்தியுடனுண்டதுமேற் கொண்டு நின்றால் பதிவான பூரணமாந் தேகமாகும், சித்தியுள்ள வாசியது வகலாதையா நிலமதில் தானொடுங்கித் திறமாய்நிற்கும், புத்தியுடன் சதாகாலங் கொண்டுதேறிப் பூவுலகில் பிரமரிஷி யாவாய்பாரே. (675)

பாரப்பா வாயுதொடுத் தந்தஞ்சேரிற் பரமனை லாயமென்ற தேகமாகும், கேளப்பா கைலாய தேகமானால் சேர்ந்துகொண்ட கற்பமெல்லாஞ் சித்தியாகும், பேரப்பா பெற்றதொரு கற்பதேகம் பெருமையுள்ள தேகமதை யென்னசொல்வேன், காரப்பா ருருவருவாக் கண்டுதேறிக் கருவான கற்பமெல்லாக் கண்டுதேறே (676)

§ பழச்சாரென்பது—எழுமிச்சம்பழச்சார்.



## வசிய விபூதி.

தேறுதற்கு பூரணமே தெய்வர்தெய்வஞ் சிவாலயத்தில் தெய்வமெல்லா § மாசவாகும், கூறுதற் கின்னமொரு புத்திசொல்வேன் குஞ்சரம்போல் நின்றபொரு டன்னைவாங்கி, ஏறுதற்கு வெருவடக்கிக் கண்டுபோட்டு வேகாந்த மாகப் புடத்தைப்போடு, நீறுதற்கு மேலுபக்தக் கண்டுபோட்டு நிட்சயமாய் நீறினபின் னெடுத்துப்பாரே. (677)

பாரப்பா நன்றாக நீறுவிட்டால் பதிவான வெருவுட்டனே கருவுங்கூட்டி, கேளப்பா தண்ணீரால் பிசைந்துருட்டி நீங்களே ரவிதனிலே காயப்போடு, வீரப்பா தானொடுக்கிக் காய்ந்ததானால் மேன்மைபெற்ற முன்போலே புடத்தைப்போடு, காரப்பா புடமாறியெடுத்துப்பார்க்கக் கருவான பூதிநன்றாய் நீறிப்போமே. ()

நீறிப்போய் நின்றதொரு பூதிதன்னை நீயெடுத்து வடிகட்டி வைத்துக்கொண்டு, பேறுபெற்ற பூதிதன்னை யெடுத்து மைந்தா பெருமையுள்ள மௌனமதைத் தியானம்பண்ணி, வீறுபெற்ற தேகமதில் தளமாய்ப்பூசி விஞ்சையென்ற பொருளதனை மேவிக்கொண்டு, சேருபெற்ற சின்மயத்தி வினைவாய்நின்றால் நின்சமுகம் வசியமென்ற சமுகமாமே. (679)

## வல்லாரை லேகியம்.

ஆமப்பா வல்லரை லேகியஞ்சொல்வேன் ஆறுநிகளான சுத்தந் தன்னைவாங்கி, காமப்பா கொண்டதொரு காடி வாங்கிக் கருவான கருவிட்டு பவித்துவமந்தா, ஓமப்பா கருவெடுத்துக் கல்வந்தாட்டி உண்மையுடன் காடிதனைக் கலக்கிகொண்டு, தாமப்பா நன்றாகக் காய்ச்சிக்கிண்டித் தன்மையுடன் குழம்பான பருவம்பாரே. (680)

பருவமுடன் பார்த்துநன்றாய்ப் பாகிற்சேர்க்கப் பதிவான சரக்குவகை சொல்லக்கேளு, கருவான வால்மிளகு பூரங்கூட்டிக் கனமாகப் பொடித்ததனைப் பாகிற்சேரு, உருவான கருவுடனே சேர்த்துகிண்டி பண்மையுடன் றனெடுத்து வைத்துக்கொண்டு, திருவான பதிநோக்கிக் குன்றிபுண்ணந் தேகவச்சிர காயமதா யிருக்கும்பாரே; (681)

§ மாசுயென்பது—குற்றம்.

பாரப்பா மண்டலமே கொண்டாயானால் பதிவான தேகமதிற் சட்டைபோகும், கோப்பா நின்றதொரு வாசிதானும் நினைவாகத் தன்னகத்தி லடக்கும்பாரு, தோப்பா பாண்டுவனை கொண்டுதேர்ந்தாற் செம்மையுள்ள தேகமதாய்ச் சிவந்துகாணுங் கூப்பா சதாகாலங் கொண்டுதேர்ந்தால் § கோடான கோடிவரை யிருக்கலாமே. (682)

கடுக்காய் லேகியம்.

இருக்கவே கடுக்காய்லேகி யத்தைக்கேளு பிருளகன்ற வெளியில்வந்த மப்பேயானால், இருக்கறவே கொண்டுவந்து சகி போக்கி சிறுதனைப் பொடியாக்கிக் கண்டித்தேதான், உருக்கமுடன் வெடியுப்பு குடன்கூட்டி புண்மையுடன் பொடித்ததனைப் பிசறிவைத்து, பெருக்கமுடன் மூடிஎன்றும் மூன்றுநாளில் பெருமையுடன் ரவிதனிலே புடப்போடே. (683)

உலர்ந்ததொரு பொடிதனை யிடித்துமைந்தா உண்மையுள்ள சாடிதனில் பிசைந்துகொண்டு, கலந்ததொரு ரவிதனிலே காயப்போடு கருவெடுத்து முன்போல பிடித்துக்கொண்டு, விகிர்ந்ததொரு சாடிதனில் விளிவைத்தா லிபாமுடன் பத்துமுறை செய்தாயானால், கலந்தரு சற்குணத்தின் மருந்துசொல்வேன் நன்மையுள்ள சாரமுடன் பூரம்வாங்கே. (684)

வாங்கப்பா காரமொடு மூன்றுங்கேளு வணக்கமுடன் வகைக்குநாற் பலமேவாங்கி, பாங்காகப் பொடித்துக்கு ரணத்திற் சேர்த்துப் பதிவாக பிடித்துஎன்றும் வடித்துக்கொண்டு, சாங்கமாய்ப் பிங்கான்றன் மேலிற்சேர்த்துத் தன்மையுடன் குருபதத்தைத் தியானம்பண்ணி, வங்காம லத்திசற்றி பணவிடைதான் கொண்டால் வகர்ந்த தேகமதிற் சட்டைபோமே. (685)

சட்டையென்ற தேகமதிற் சட்டைதானுஞ் சதிரான விருண்ணிச் சருகுபோலே, இட்டமுடன் குளரியும் வெளுப்பாய் மைந்தா பிரவிமதி சடாதுபோ விருக்கர்தேகம், முட்டையென்ற மூலமதிற் கெட்டியாகு முனையான சழிமுனையுந் துலக்கும்பாரு சட்டமுடன் தேகமது தயங்காதையா சதாகாலக் கோடிவரை யிருத்தும்பாரே. (686)

§ கோடான கோடியென்பது—யுகாந்தகாலம்,



இருக்குகின்ற வாசியது வகலாதையா இன்பமுள்ள வாசியது விருதயத்தில், இருக்குமுடன் விளங்கு மசபைதன்னை சிவசிவா வந்தசபை நிறுத்திப்பாரு, விருத்துமுள்ள சக்கரமு மசையாதையா வேதாந்த சூத்திரத்திரத்தின் விபரத்தாலே, கருத்துறவே கருவான கடுக்காய்தன்னாற் கால்னவன் மாண்டிடுவான் கருவாய்ப்பாரே (687)

பாரான கடுக்காய்தான் தின்முக்கொண்டாற் பதினாறு வயதுசென்ற மதன்போலாவாய், வாரான சிறந்தொண்ட னடத்தைதன்னை வகுளிப்பா நூலகமதிற் கேட்டுக்கொள்ளு, கூரான சஞ்சீவி மலையிற்றானுங் குறுஞ்சித்தர் கூடத்தைதன்னைக் கூறும் காவியம் போரான கஞ்சமலை சித்தர்செய்த பெருமையாம் பூரணநூற்பேணிப்பாரே. (688)

நூல் வகை.

பாரடா காவியநூல் தன்னைப்பாரு பரிபூரணந்தன்னையேப் பதிப்பாரு, விரடா கொண்டதொரு சித்தர்மார்க்கம் விபரமுடன் கற்பமுறை நன்றாய்ச்சொல்லும், கோரடா விருநூற்கு பின்னூல்மிச்ச கிசமான வாயிரம்போ லொருநூற்பேசார், காரமுட னாயிரத்தைக் கருவையெண்ணிக் கைமுறையின் பாகமதைக் கருத்தாய்ப்பாரே (689)

கருத்தறிந்து கருவறிந்து கருவைக்கொண்டாற் காரணமும் பூரணமுங் கலங்காதையா, உருத்துடனே புருபாகங் குருவின்பாக முரிமையுடன் செய்பாக முறைமையெல்லாந், திறத்துடனே பாடினதோ ரின்னூல்மைந்தா திருவான வாயிரத்தைச் செகத்தோர்கண்டால், உறத்துடனே மலையேறி யொடுங்கிநிற்பார் குருமுடிந்த கைலாயமிட்டுக்கொள்ளாதே. (690)

அசட்டு வாதி.

கொள்ளாத மனத்தோர்க்குக் கண்ணங்கேது குருவறியா மார்தருக்கு மனமங்கேது, தள்ளாத கேரியர்க்குத் § தனமங்கேது தன்மைமதி யில்லார்க்கு வறிவங்கேது, கல்லாத மூடருக்குக் கருத்தங்கேது காமவிடாய் கொண்டவர்க்கு வாமமேது, அன்று வது வாசிதனை நிறுத்துவோர்கள் அருவமென்ற வுலகதனிற் றலங்குவாரே. (691)

§ தனமென்பது—திரவியம்.

## வெள்ளாட்டின் பூயால்.

துலங்குகின்ற முறைமைபொன்று சொல்லக்கேளு துள்ளு
கின்ற வெள்ளாட்டின் கொழுப்பினோடே, கலங்கமற பிரவுடன்
மூன்றுமூன்றும் கண்டிடைக்கு கெந்திரசம் கூடச்சேர்த்து, விளக்க
மன்று பிடித்தவொரு பாண்டத்திட்டு விபரமுட னெரிகொளுந்
தம் விட்டுக்கிண்டி, மலக்காமல் மேற்சட்டி கொண்டுமூடி வரி
சையுடன் மண்சீலை வலுவாய்ச்செய்யே. (692)

செய்ததொரு சட்டிகடுத் தமருபோட்டுச் செம்மையுடன்
குழிவெட்டிப் பாண்டம்வைத்து, தொய்துமணற் கொட்டிகடுத்
தமர்மேல்வைத்து துப்புரவாய்த் தான்மெழுகி வைத்துக்கொண்டு,
கொய்தவந்த மலராலே யர்ச்சனைகள்செய்து கூர்மையுடன் வலஞ்
சுற்றிக் குருவைப்போற்றி, மெய்தவறாப் பூரணமே காளவல்லி
வேதாந்த மனோன்மணியே யென்றுசாற்றே. (693)

## புஷ்பம்.

சாற்றிவந்து நிற்கையிலே மனோன்மணியாள் தானுஞ் சமைந்து
நின்று தமர்வாசற் குள்ளேபுக்கி, யத்துடன் பூரணத்திற் பதி
வாய்நின்று பதிவாக வசிகொண்டு வாழும்போதில், சித்தியுள்ள
மனோன்மணியாள் கடாட்சத்தாலே செம்மையுள்ள கடமதிலே
நிலபூவுண்டாம், முத்தியுடன் பூவினோத்து வாழுகாளில் மூர்க்க
முள்ள பிறிஞருகாள் தமரைப்பாரே. (694)

தமர்பார்த்து வெளிபொளியிற் பார்க்கும்போது சங்கை
யில்லாப் § பூமலர்கள் தானேநின்று, நிமிரவழி தெரியாமல் தமர்
மேற் கொள்ளும் நேர்மையுட னந்தவழி கொண்டபோது,
குமுதமென்ற பாண்டமதைத் திறந்துகொண்டு கூர்மையுட னம்
மலரை யெடுத்துமைந்தா, நிமிரநன்று காசியுட குப்பிக்கேற்றித்
திறமாகச் சீல்வீட்டு மண்ணுஞ்செய்யே. (695)

மண்செய்து நவிதனிலே காயவைத்து மார்க்கமுடன் நன்
றாகக் காய்ந்ததானால், கண்குவிந்த பாண்டமதில் நெற்குன் வைத்
துக் கருவான குப்பிவைத்து மேலேமூடி, குணங்கொளொரு மண
ராகத் தீயைமூட்டிக் குழைந்தசெல்லு வவித்தபதந் தன்னைப்
பார்த்து, இணங்கநன்று யிறக்கியதை மேனைப்பார்க்க வசந்த
மலரதுவுங் குழைந்தபோமே. (696)

§ மலரென்பது—புஷ்பம்.



குழைந்துநின்ற மேருவதில் விரம்பூரான் கூடநன்றாய்ப்
பொடித்திட்டுக் குச்சியாலே, வளைத்துமிக மத்தித்து ரவியிற்போடு
மகத்தான பூவதுவுங் கரைந்ததல்ல, கலந்துநின்ற மேகசலம்
போலேமைந்தா கருவான பூவமுர்த மென்னசொல்வேன், உலைந்து
நின்ற தேகமதிற் பணவிடைதான்கொண்டா லுறுதியுள்ள தேக
மதாய் நிற்குந்தானே (697)

தானென்ற பூவமுர்தத் தன்மைதன்னைத் தாரணியி லாரு
மறிந்து செய்வாரப்பா, கோனென்ற குருவருளா லருளேதங்கிக்
குவிந்ததொரு சாஸ்திரமா யிரத்தைப்பாரு, தேனென்ற மதியமுர்
தம் பூவமுர்தமிரண்டுஞ் செம்மையுட னதன்விப்பார் தெளிவாய்த்
தோற்றும், மானென்ற மதியமுர்தந் தன்னுலந்து மகத்தான
பூவமுர்த வரிசையாமே. (698)

வரிசையுட னறிந்தொரு தர்தமாக வழிதுறையாய்க் கற்ப
மதை மார்க்கமாக உரிசையுடன் கொண்டதினா லந்தவாசி
யோடாது § கடமதிலே யொடுங்குமைந்தா, பரிசுடைய மனோன்
மணியும் வார்த்தைசொல்வாள் பக்குவமா யஷ்டசித்தும் பதி
வாய்த்தோற்றும், தெரிசனமாய்ச் சொன்னதிந்தப் பொருள்கடன்னைச்
சின்மயத்தி னருளாலே தெரிசித்தாயே (699)

தெரிசித்தாய் மூலமுத லாராதாரந் திருவான நடுமூல
மேனாதாரம், பரிசித்தாய் நின்றதொரு மூலாதாரம் பருவமா
யதிலிருந்து பதியைப்பாரு, குருசித்த மானபரி பூரணமுங்காணுங்
கொள்ளுநீ வாசியதிற் குறியுங்காணும், அசிசத்த மானபர மாதமா
வாலே யதிதமுள்ள காதவிந்தை யறியலாமே. (700)

ஆமப்பா வாதியென்ற வதிவால்மைந்தா அந்தரங்க மான
தொரு வமுர்தந்தன்னை, தாமப்பா பிங்கானில் வாங்கிக்கொண்டு
தன்மையுடன் சாக்குகளிற் சுருக்குதாக்க, ஓமப்பா வெச்சாக்குங்
கட்டிப்போகு முரிமையுட னதில்வேதை கோடாகோடி,
காமப்பால் கானற்பால் கொண்டார்தாமுங் கருவான கருவறிந்து
துளைகாண்பாரே. (701)

§ கடமென்பது—சரீரம்.

## அறுவகைச் செயநீர்.

கரைகாண வின்னமொரு கருவைக்கேளு கருவான வறு
வகைநீர் கருவைத்தானுங், துரையாகச் சொல்லுகிறேன் மைந்தா
மைந்தா சமமான பொட்டிலுடன் படிகக்கட்டித், திரையாத
காரமுடன் சாரம்பூரந் திருவான கண்டருட னுறங்கட்டி,
நிறையாகத் தானெடுத்து வழுரிகிட்டு சேரமுடன் கல்வமதி
லாட்டுவாயே. (702)

ஆட்டியின்றாய் வழித்திட்டே மைந்தாகேளு அடவான
பிங்கான்றன் ருழிதன்னில், போட்டுநன்றாய்ப் பனியில்வைக்க
வென்னசொல்வேன் பூரணமாய் நீரதுவும் போகும்பாரு, நாட்
டிகமாய்ப் போகின்ற செயநீர்தன்னைச் சாதமா யெச்சாக்கும்
கட்டும்பாரு, தேட்டமுட னின்னீரில் வேதைகோடி தெவிட்டாத
வேதைமுகஞ் செப்புவேனே. (703)

## அரிதார பஸ்பம்.

செப்புகிறே னரிதார மியந்தன்னைச் சிவசிவா திருவருளாற்
றிறமாய்க்கேளு, உப்பான வெடியுப்புக் காசெட்டை யுண்மையுள்ள
தாரமது மூன்றுமொன்றாய்த் தப்பாமற் சீசிலையா யெடுத்துக்
கொண்டு தருவான வாய்நீரா லரைத்துருட்டி, மெய்ப்பான குகை
யில்வைத்துச் சில்லுமூடி மேலான மண்சீலை வலுவாய்ச்செய்யே. ()

செய்ததொரு குகைபதனைப் புடத்திற்போடு சிவசிவா
மூன்றுமொன்றாய் புருகிநிற்கும், கைதவறு தேயுருகி நின்றபியம்
கருவான தாரமென்ற பியமாகும், உத்தமென்ற பியமதனைத்
தூக்கொண்டு வுண்மையென்ற நாகமதை யுருக்கிநன்றாய்த்,
தொய்தமென்ற தாரமதிற் பியந்தன்னைச் சமமாக விடைக்கிடை
தான் தாக்குவாயே. (705)

## நாகருரு.

தாக்கிநன்று புருக்கிடவே நாகந்தானுந் தட்டழிந்து
கட்டுமட்டா வெள்ளிபோலே, நோக்கியந்த நாகமதை வைத்துக்
கொண்டு தண்மையுட னதற்குநேற் § பரியைக்கட்டி, பாக்கிய
மென்/ நேரினைத்து வுருக்கிப்பாரு பருதிமதிச் சடாதுவுங் குரு
வாய்ப்போகும், தாக்கிடுவாய்க் குருவான களங்கந்தன்னைச் சுக
மான வெள்ளிசெம்பிற் ருக்கநன்றே. (706)

§ பரியென்பது—தங்கம்.



நன்றாகத் தாக்குவது வென்னவென்றால் நாலுவெள்ளி
யாறுசெம்பு பத்துங்கூட்டி, யின்றுடி யுருகுமதிற் களங்குதன்னை
நேராக வொன்றிய வயநேட்டாகும், குன்றாத பொன்னதனைத்
தகடுதட்டிக் கூர்மையுடன் புடத்தில்வைக்க வயதுபத்தாம் மன்று
தனில் நின்றுவினை யாடும்பெண்ணை மார்க்கமுடன் கண்டதனை
மகிழ்ந்திடாதே. (707)

மகிழ்ந்திடாக் குடவனிலே பத்துக்கொன்று மார்க்கமுடன்
கொடுத்துருக்க வயதாறாகும், இகழ்ந்திட்ட செம்பதிலே யெட்டுக்
கொன்று வேற்கையுடன் கொடுத்துருக்க வெட்டேகாலாம், நிகழ்ந்
திட்ட வெள்ளியிலே பத்துமாற்று நேர்மையுடன் புடத்தில்வைக்
கப் பதினாறாகும், உகந்திட்ட தாரமதின் களங்குதன்னு லுண்மை
யாஞ்செந்தூர முகந்துகேளே. (708)

## அரிதாரக் களங்குச் செந்தூரம்.

கேளப்பா வரிதார களங்குதன்னிற் கிருஷ்யுள்ள கெந்தி
யதில் ரோய்க்கட்டி, மேலப்பா காவிலொன்று வீரஞ்சேர்த்து
யிபாமுள்ள வறுவகையி னீரலாட்டி, கோளப்பா வாராமல் கன்
ருயாட்டிக் குண்டலம்போல் வட்டதனைப் பிழிந்துமைந்தா,
நீளப்பா தான்சவா ரவியில்வைத்து நேர்மையுட னோட்டில்வைத்து
மண்ணுஞ்செய்யே. (709)

செய்ததொரு கவசமதை நிதானங்கண்டு செம்மையுடன் புடத்
தில்வைத்துச் சிவனைநோக்க, கொய்ததொரு செந்தூரம் என்ன
சொல்வேன் குணமாகப் புடமாறி யெடுத்துப்பாரு, உய்தமுள்ள
§ வருணனிற மிதற்கொவ்வாது வுத்தமமே செந்தூரம் பதனபண்
ணித், தொய்தமுள்ளச் சடந்தனக்குப் பணவிடைசெந்தூரத்
தோன்றவொரு மண்டலந்தான் கொண்டுதேறே. (710)

தேறுவதாற் றேகவச்சிர காயமாகுஞ் செம்மையதாய்ச் சட்
டையொன்று திரைந்துபோகுங், கூறுகின்ற குண்டலியில் வாசிநின்று
குறுகாம லவ்விட்டிற் குடிகொண்டாடும், விறுபெற்ற செந்தூர
விசையினாலே மேலான வேதைமுகங் கோடாகோடி, சிறு
நின்ற காகாச மகிமைதன்னைச் செப்புகிறேன் கருக்குருவைச்
செப்புறேனே. (711)

§ அருணனென்பது—சூரியன்.

## நாகரச பற்பம்.

செப்புகிறே னாகரசஞ் சுத்திசெய்து செம்மையுட னொன்றாகத் தொக்கம்பண்ணித் துப்பரவாய் கெர்ப்பிதனைச் சுத்திசெய்துச் சுருக்காக நசாகக் கிணையே:சேர்த்து, தப்பாம லறுவகைகீர் தன்னாலாட்டிச் சாதகமாய் வழித்துருட்டி ரவியிற்போடு, மெய்ப்பாகக் காய்ந்தவில்லை யோட்டில்வைத்து மேலாக மண்சீலை வலுவாய்ச்செய்யே. (712)

வலுவாகச் செய்தொரு கவசக்தன்னை வலுமைகண்டு புடத்தில்வைக்கக் கட்டிப்போகும், எழுமையுடன் கட்டினதோர் பற்பமாகி யிருக்குமடா நன்றாக வெடுத்துக்கொண்டு, செழுமையுள்ள தங்கமதிற் பற்பம்பூசித் திர்க்கமுடன் புடத்தில்வைக்க நீறிப்போகும், குறைமையுள்ள நீறதனை வைத்துக்கொண்டு கூசமற் பணவிடைதா பொசித்திடாயே. (713)

பொசித்துவிடு மண்டலத்திற் றேகஞ்சித்தி பூரணமாய்ச் சதாகாலங் கொண்டுநின்றாற், பசித்துநின்ற பகைமையென்ன சொல்வேன்றேகம் பாலனடா வயதாகும் பாருபாரு, கசித்தமன தூதியிலே வாசிநின்று கருணைபெறப் பூரணமாய்க் கருத்தோடொத்து விசித்திமே லாக்கினையு மூலாதார மேவிநின்றவினையாடும் வாசிதானே. (714)

## பரிச்சுண்ணம்.

வாசியென்ற பரிச்சுண்ணந் தன்னைவாங்கி மார்க்கமுடன் பணவிடைதா னெடுத்துக்கொண்டு; நேசமுடன் § கஞ்சமலர் தகடுதட்டி நிச்சயமாய் வாய்நீரால் குழைத்துப்பூசி, பாசமுட னோட்டில்வைத்துப் புடத்தைப்போட்டாற் பக்குவமாய்த் தான்பழுத்துப் பிறந்திருக்கு, தேசமெக்குந் திரிந்தநீரும் பதினாறுமே, திருவான லட்சுமியைக் காண்கிலேனே; (715)

காண்கிலாச் கென்னபலன் வந்தாலென்ன கருவான சிவயோகந் திருந்தாலென்ன, பாங்குபெற வட்டசித்து மாடிலென்னப் பக்குவமாய்க் காயவரை யிருந்தாலென்ன, பூக்கமல மாதுதிரு வொளிகாணுட்டாற் புத்தியென்ன சித்தியென்ன புகழ்தானென்ன, சாக்கமாய்த் தீபமில்லா மனையோடொக்குஞ் சக்தியில்லாத மலடாகும்பாரே. (716)

§ கஞ்சமலரென்பது—தாம்பூரம்.



பாரப்பா வாதிமுத லக்கதொட்டுப் பச்சையுடன் இகத்திலிக்கர் தாரக்காரம், வீரப்பா கொண்டதொரு வெடியுப்புங்கூட்டி மென்மைபெற வோரிடையா யெடுத்துக்கொண்டு, சேரப்பா வந்திடைக்கு வலியான்கூட்டி கினைவாகப் பழச்சாற்றா லாட்டிக்கொண்டு, சாரப்பா வாட்டியதை வழித்துருட்டிச் சுக்கையுடன் புடம்போடு சிவயோகப்படியே (717)

சிவயோகப் படியறிந்து புடத்தைப்போடு சேர்த்துநின்று முருகியது கட்டிப்போகுஞ் சிவயோக மிதுவாகு மெய்க்காமைத்தாசிறப்புடனே குகையில்வைத்து வுருக்கிப்பார்க்க, அவயோக மில்லாமற் சிவயோகமாகி யம்பரத்தின் குருவருளா லுருகிப்போகும், கவமான வகையுடனே யுருகிநின்ற நாதமணிப் பெருமைதனை கவிலொண்ணாதே. (718)

## நாதமணி.

ஒன்றான நின்றமணி தன்னைவாங்கி யுரிமையுடனதற்கு நிகர் பரியைச்சேர்த்துக், கண்ணான குகைதனிலே யுருக்கிப்பாரு கருவான குருவிரண்டு மொன்றாய்க்கூடி, தன்மையா யுருகியது களங்குதாகுந் தாரணியிற் களங்குவகை யனந்தமுண்டு, பொன்னான பொன்விளையுங் களங்குதன்னைப் புத்திகொண்டு செம்பதனை யாற்றுக்கொண்டே. (719)

ஒன்றான களங்குதனை யொன்றதாக்க வுண்மையுள்ள பசமைதனை யென்னசொல்வேன், பன்றான பரப்பிரம வாலையென்று பக்குவமாய்த் தானுருக்கி வைத்துக்கொண்டு, நன்றான மலராலே யர்ச்சனைசெய்து நன்மையுடன் றூபதீபங் கள்செய்து, மன்றான மனதில்லாட மாடுநின்ற மகத்தான சோதித்தா யென்றுபோற்றே. (720)

போற்றியே கைதொழுது தங்கத்தாயை பூரணமாய் நின்றபரி பூரணியேயென்று, வாழ்த்தியே வணக்கமுடன் பணிந்துநின்று வரிசையுடன் ரேசகபூ ரகமும்பண்ணிப், பார்த்திபனே கும்பகத்தித் பதிவாய்நின்று பாரான கேசரியே § பாக்கியசாலி, சேர்த்தியக்கன் வாரம லென்னைக்காத்து தொண்டுசெய்த தொண்டனெனத் துணைகொள்வாயே. (721)

§ பாக்கியசாலியென்பது—அதிர்ஷ்டசாலி.

## கௌரிமலரிக் களங்கு.

தானபாக மின்னமொரு சேதிகேளு § சோதியென்ற கௌரி யுட மகிமைதன்னை, விவரமன்றிச் சொல்லுகிறேன் மைந்தா கேளு பேன்மையுள்ள கைலாய கிரியைத்தானும், இனிபால சத்தியிலோர் கௌரிதானு மிருந்தநலஞ் செப்பமலை யென்ன சொல்வேன், மனையான கடுமனையில் நின்றுகொண்டு மகத்தான வல்லபங்கள் மகிழ்ந்திட்டாரே (722)

மகிழ்ந்திட்ட கௌரியுட வல்லபங்கேள் வாய்திறந்து சொல்லுதற்கு நாவுமுண்டோ, நெகிழ்ந்திட்ட கௌரியெனு மணி யாய்வாங்கி நேர்மையுள்ள வல்லபமா நாதந்தன்னில், கதிட்ட மாகவேதான் சுருக்குத்தாக்க சேதியென்ற வல்லபத்தாற் சத்தி யாச்ச அருந்திட்ட மானதொரு கொளசித்தாய்த்தா னன்பான வல்லபத்தா லருள்கண்டாளே. (723)

அருளான வல்லபங்கள் சொல்லக்கேளு வாதியென்ற ரச முடனே நாகலிங்கம், உருவான சாரமுடன் காரம்பச்சை புனு மையென்ற வீரசாக்கு மொன்றாய்க்கூட்டி, கருவான வாய்நீரா லரைத்துருட்டிக், கனமான குகைதனிலே வைத்துமூடி, குரு வான பதிநோக்கிக் கவசஞ்செய்து கூர்மையுடன் குணமேந்திப் புடத்தைப்போடே (724)

போடப்பா புடமதுவு மிதானங்கண்டு பொருந்தவன்றாய்ப் போற்றியிதப் புடத்தைப்போடு, நாடப்பா வப்புடத்திற் சென்று நீயும் நன்மையுள்ள குகைதனை யெடுத்துப்பாரு, விடப்பா பெலத்தொரு கௌரிதானும் வியமுள்ள வல்லபத்தா லுருகி நிற்கும், தேடப்பா தேடவென்றும் வுரிசத்து திராமான சத்தி நிகர் தங்கஞ்சேரே. (725)

## கௌரிகளங்குச் செந்தூரம்.

தங்கமதைக் குகையில்வைத்து வுருக்கிக்கொண்டு தாயான கௌரியதிற் சாருமைந்தா, அங்கமுள்ள தங்கமதின் வல்லபத்தா லருளான கௌரியது வொன்றாய்க்கூடி, மங்களமா யுருகிநின்ற தெளிவையிந்த வையத்தி லாரறிந்து வணங்கப்போறார், சங்கை யுட னுருகினதோர் மணியைவாங்கிச் சதாசிவனார் பதிநோக்கி வைத்துப்போற்றே. (726)

§ சோதியென்பது—பிரகாசம்.



போற்றியந்த மணியெடுத்து மைந்தாகேளு பூரணமாய் மதிதனிலே தூற்றக்கொண்டு, பார்த்திபனே குகைதனிலே யுருக் கிப்பாரு பங்கயத்தின் தெரிசனத்தை யென்னசொல்வேன், சாற் றியதோர் வயதனவும் பதினாறுகித் தன்மையுடன் வாலைய தான பெண்தான், § நேத்திரத்தின் பேரொளியாய் நின்றமாது நிரஞ்ச னமா யெங்குநிறைந் திருந்தாள்பாரே. (727)

பாரப்பா கௌரியுட களங்குதன்னைப் பக்குவமாய்க் கல் வத்திற் பொடித்துக்கொண்டு, சேரப்பா சுத்திசெய்த கெந்தி கட்டி சேர்மையுள்ள தாரமுடன் லிங்கஞ்சேர்த்து, காரப்பா விரண்டுமொன்றாய்க் கூட்டிநல்ல கருவான வறுவலைநீர் தன்னா லாட்டிச் சேரப்பா வழித்துருட்டி வட்டுப்பண்ணித் திருவான ரவியொளியிற் காயப்போடே. (728)

போடப்பா நீர்வற்றி நன்றாய்க்காய்ந்தால் புத்தோட்டில் வைத்ததன்மே லோடுமூடி, விடப்பா பிலப்பதற்குச் சந்துபேணி யிபாமுட வீதானமதை விரும்பிப்பார்த்து, நாடப்பா புடம்போ டக் குருவைப்போற்றி நன்மையுள்ள வெருவடுக்கிப் புடத்தைப் போடு, கூடப்பா மனோன்மணியைத் தொழுதுநின்று குளிர்ந்த புடமாறினபின் னெடுத்துக்கொள்ளே. (729)

கொள்ளந்தக் கலசமதை யெடுத்துப்பாரு கூர்மையுள்ள செந்தூர மென்னசொல்வேன், சொல்லந்த மானதொரு செந்தூ ரந்தன்னை துப்பறவாய் நின்றவெள்ளி செம்பில்வைத்து; நில்லந்த நிலைதனிலே குருவைப்போற்றி நிச்சயமாய்ப் பணவிடை செந் தூரங்கொள்ளு, உள்ளந்த மானதொரு தேகந்தானும் ஓம்-ந-ம-சி வா-ய-மதாய் நிற்குந்தானே. (730)

## லிங்கக்களங்குச் செந்தூரம்.

தானென்ற தயவாய்த்தான் குணத்தைக்கேளு சங்கை யுடன் சொல்லுகிறே னங்கமாக, கோனென்ற குருவருளா லிங்கம்வாங்கிக் குளிர்கமல ரமுர்தமதிற் குணமாய்ச்சேர்த்து, வானென்ற ரவிதனிலே சுண்டிற்றானால் மகத்தான வக்கசடு நீங்கிப் போகும், வினென்ற கசடுதா நீங்கின்ற மேலான லிங்கமதை யெடுத்துக்கொள்ளே. (731)

§ நேத்திரமென்பது—கண்.

எடுத்ததைக் கட்டிதனை மைந்தாகேளு வேகாத மாதாணீர் தன்னிற்சேர்த்து அடுத்து § ரவிகின்னமதிற் சேர்த்துமைந்தா வருணான தீபமதில் வைத்துக்காரு, தொடுத்ததொரு தீபமதாய் ஜாதன்று அலக்கினதோர் லிங்கமதிற் சவருமபாரு, கெடுத்தவன்ருய்ச் சவிளதோர் லிங்கத்தாலும் கன்னடங்கிக் கட்டினது கின்னத்தானே. (732)

கின்னமுடன் கட்டினதற் கையாகேளு திருவான பச்சையுடன் தெவிபூட்டி, கன்னமாய் முப்பூவுங் கூடச்சேர்த்து ககதம்விட் டாட்டியது கவசம்பூசி, தன்மையாய்ச் சீலைதனிலே காயப்போட்டு தளராமல் மண்சீலை வலுவாய்ச்செய்து, வன்னியென்ற லிங்கமதைப் புடத்தில்வைத்தால் வரிசையுட னுருகியது மணியுமாமே. (733)

மணியான லிங்கமணி தன்னைவாங்கி மார்க்கமுட னதற்கினி மைந்தாகேளு கனியான கனிபொருந்தும் தங்கந்தன்னைக் கனியகன்று புருக்கியதில் மணியைச்சேரு, தனியாத தங்கமுடன் லிங்கஞ்சேர்த்து தன்மையுட னுருகியது தன்மையாகும், மணியான லிங்கமது மணிந்தகின்று பதியுள்ள கங்கமது முத்தியாச்சே. (734)

ஆச்சப்பா முத்தியுள்ள கங்குதன்னை யாதியுத்த வெள்ளி செம்பு தாற்றுக்கொன்று, பாச்சப்பா லிங்கங்கூ லொன்றுசேர்க்கப் பதிவான சேதியைக் கேன்னசொல்வேன், மீச்சப்பா வெகுசீக்க லிங்கத்தாம்பர மேன்மையாகும் தங்கத்தா மங்காதுள், மூச்சப்பா மடங்கிநின்ற கங்குதன்னை முறையாகச் செந்தூர முடிவைக்கேளே. (735)

## செந்தூரம்.

முடிவென்ன வென்றுக்கால் மைந்தாகேளு முறையாகக் கங்குநிகர் கெந்திகூட்டி சரியாத லிங்கமுடன் சாரஞ்சேர்த்துச் சமாசமா யொன்றாகப் பொடித்துமைந்தா, கமுமுட னரைவைநீர் தன்றுகூட்டித் துப்பறை வழித்துருட்டி வட்டுப்பண்ணி, மகிமையுள்ள சவிதனிலே புடமப்போடு மார்க்கமுட னாவர்த்த பின்பு வரிசைகேளே. (736)

§ ரவிக்கின்னமென்பது—செம்புக்கின்னம்.



வரிசையுள்ள வோட்டில்வைத்து மண்தான்செய்து மார்க்கமுட னிதானமதாய்ப் புடத்தைப்போட்டு, கரிசனமாய் நீயிருந்து குருவைப்போற்றி § காங்கைகன்று யாதினபின் னெடுத்துப்பாரு, உரிமையுள்ள செந்தூர மென்னசொல்வே னுரிமையுடன் சிமிழ்தனிலே பதனம்பண்ணி, தெரிசனமாய்ப் பணவிடைதா னுள்ளேகொண்டாற் றேகவச்சிர காயமதாய்த் திறக்கும்பாரே. (737)

## சவ்வீர மணிக்களங்குச் செந்தூரம்.

பாரப்பா சவ்வீர முறையைக்கேளு பக்குவமாய்ச் சொல்கிறேன் பழுக்குமார்க்கம், ஆரப்பா வறிவார்கள் வீரந்தன்னை யந்திர வீரமதை யடக்கக்கேளு, சேரப்பா கின்றமா தாந்தாந்தன்னில் நிச்சயமாய்ப் பூவிற்பனை விடைதான்சேர்த்து, கீரப்பா முறிந்ததுவுந் தண்ணீராகும் திறமான தண்ணீரில் வீரம்போடே. ( )

போட்டதனை யனலில்வைத்துச் சுண்டிற்றானும் பொன்னிறம்போல் வீரமது கட்டிப்போகும், நாட்டமுடன் கட்டினதை யெடுத்துமைந்தா நன்மையுள்ள பச்சையுடன் தாரங்கூட்டி, தேட்டமுடன் காரமது மூன்றுமொன்றாய்ச் செம்மையுடன் வாய்நீராலரைத்துக்கொண்டு வாட்டமில்லா வீரமதற் கங்கிபூட்டி வரிசையுடன் காயவைத்து மண்தான்செய்யே. (739)

செய்ததொரு கவசமதை புலரவைத்துச் செம்மையுட னிதானமதாய்ப் புடத்தைப்போடு, சைதன்னிய மானகுரு தன்னைப்போற்றிச் சங்கையுடன் றணலாறி யெடுத்துப்பாரு, கொய்ததொரு கவசமதில் வீராசன் கொடிதான வக்கினியிற் குணமாய்நின்று, மெய்தவருஞ் சங்கையுட னுருகிநின்று மேலான ரூபாமணி யாகும்பாரே. (740)

பாரப்பா பாராளும் வீராசன் பதிவான மணியதனை யெடுத்துக்கொண்டு சேரப்பா வதற்குநிகர் தங்கங்கூட்டி சின்மயத்தின் குருவருளா லுருக்கிப்பாரு, வீரப்பா கொண்டபரி வீரம்ரெண்டு மெய்யாக வுருகியொரு மணியாய்ப்போகும், ஆரப்பா வறிவார்கள் வீரப்போக்கு வமர்த்தரச வீரமணிக் களங்கைவாங்கே

§ காங்கையென்பது—சூடு.

வாங்கியக்கக் கலக்கதனை வைத்துக்கொண்டு மதிபான வெள்ளிசெம்பில் நாற்றுக்கொன்று, பாக்குபெறத் தான்கொடுத்து புருக்கிப்பாரு பாருசோதி யானதொரு தங்கமாகும், பூங்கமல மாதுதிரு வுதயமாலுற் புத்தியுட னம்மாதைப் பூசைபண்ணா நிக்கதுஞ் சுபமான புத்தியுண்டாக் திருவான கலக்கமதின் திறத்தைக்கேளே. (742)

## செந்தூரம்.

திறமான கலக்கதனை யெடுத்துக்கொண்டு செம்மையுள்ள கெந்தகமும் லிங்கங்காரம், உறமான § கிடைக்கிடைதான் வைத்து நல்ல வுறுதியுள்ள வறுவலைநீர் தன்னாலத்த, திறமான கல்வமதில் கன்றாய்ச்சேர நிறுத்தியென்று வரைத்தருட்டி வட்டுப் பண்ணி, மறவாக நிழலில்வைத்து வுலர்த்தியல்ல மார்க்கமுட னோட்டில்வைத்து மண்தான்செய்யே. (743)

செய்ததொரு கவசமதை நன்றாய்வாட்டிச் செம்மையுட னிதானமதாய்ப் புடத்தைப்போட்டு மெய்தவறு மனோன்மணியைத் தொழுதுநின்று மேன்மையுள்ள புடமதுவும் குளிர்ந்தபின்பு மைந்தா, உய்தமுள்ள கவசமதைத் திறந்துபார்த்தா லுண்மையுள்ள செந்தூர மென்னசொல்வேன், சைதன்னிய மானசெந் தூர மென்று தன்மையுள்ள சிப்பிதனி லடக்கம்பண்ணே. (744)

அடக்கமுள்ள செந்தூரம் பணவிடைதான்மைந்தா பசு வினமு மக்கினிக்கு கொண்டாயானால், முடக்கமுள்ள தேகமெல்லாம் பொருந்திநின்ற நலமிகுந்த வனன்றுபோகும், தடைக்கவச மானதிசை விலகல்லத் தசீதா நந்தமென்ற வுண்மை காட்டும், விடக்கெடுத்த காய்ப்போலே மருவிநின்றால் மேல் வாம்பு கீழ்வாம்பு தெரியாதென்னே. (745)

## அரியெழுத்து மகிமை.

தெரியாமல் மதிமயக்கி நாலைப்பார்த்து செம்மையில்லா வழிதுறைகள் செய்துகொண்டு, குறிபோன நெறியதனை யறியாமற் றூன் குருடாய் வாய்மதங்கள் மெத்தப்பேசி, அறியான வட்சரத்தி லடுக்காமற்று னறவையில் மாண்டிறந்தார் கோடாகோடி சரியான பதினெட்டுவெழுத்துக்குத்தான் தாயான முதலெழுத்தை யழுத்திப்பாரே. (746)

§ இடைக்கிடையென்பது—தரிக்குச்சரி.



அழுத்திமுனை பாராம லுத்தமான்ப ராதியந்த காத விந்தை யறிந்தோமென்று, வழித்தியவ ஞாயிர்நிலையில் வணங்கா மற்றுன் மார்க்கமுள்ள தபோதனர்போற் பூசைசெய்வான் தெளித் தமனக் தனிநிறுத்தி வாசிபூட்டி நேர்மையுடன் சிவயோகத் திருந்துகொண்டு, சுழித்தியென்ற வவத்தைகளைத் தாத்திமைந்த மெஞ்ஞானத் தீபமதிற் றுலங்கிநில்லே. (747)

## பாஷாணக்கட்டுப் பற்பம்.

துலங்கிநின்ற பாஷாணத் தொழிலைக்கேளு சோதியென்ற மனோன்மணியாள் சொன்னவார்த்தை, விளங்குகின்ற § வெள்ளை யடா மாயாரூபம் விரும்பியந்த வெள்ளையிலோர் கட்டிவாங்கி, கலங் காமற் பாண்டமதிற் பழச்சார்விட்டுக் கருவான வெள்ளைதனைக் கட்டித்தூக்கி, அலங்காம லடுப்பில்வைத்துத் தீமூட்டி அப் பனே சார்வற்றிக் கட்டும்பாரே. (748)

கட்டிநின்ற பாஷாணந் தன்னைவாங்கிக் கணக்காக வதற் கிடைதான் முப்புச்சேர்த்து, திட்டமுட னதற்கிடைதான் ரசத் தையார்த்துத் திருவான வறுவலைநீர் தன்னாலாட்டி, கெட்டடங்க வரைத்ததனை வழித்துருட்டி நேர்மையுடன் ரவிதனிலே காய வைத்து, சட்டமுடன் காய்ந்தவில்லை யோடுசேர்த்துச் சந்து வாய்ச் சீலைசெய்து வைத்துக்கொள்ளே. (749)

வைத்ததொரு கவசமதை மைந்தாகேளு மார்க்கமுடனிதா னமாய்ப் புடத்தைப்போட்டு, சத்தமுடன் சற்குருவைத் தியா னஞ்செய்து குளிரான்று யாறினபின் கவசந்தன்னை, பத்தியுடன் றனெடுத்துப் பரிவாய்ப்பாரு பரமகுரு வானதொரு பற்பமாகும், புத்தியுடன் பற்பமதைப் பதனம்பண்ணிப் பூரணியே காரணியே யென்றுபோற்றே. (750)

போற்றிநின்ற பற்பமதிற் பணவிடைதானெடுத்துப் பொரு ளான பரித்தகடு கழஞ்சுவாங்கிப், பார்த்திபனே பற்பமதை வாய் நீராலே பரிவாகத் தான்குழைத்துத் தகட்டிற்பூசி சேர்த்தியா யோட்டில்வைத்துப் புடத்தைப்போடு நிசமான பரியதுவும் நீறிப் போகும், சாற்றியதோர் நீரெடுத்து வைத்துக்கொண்டு தன்மை யுட னல்லவெள்ளித் தகட்டிற்பூசே. (751)

§ வெள்ளையென்பது—வெள்ப்பாஷாணம்.

பூமியேதோர் நடைதனைப் புடத்திற்போடு பொருளான
வெள்ளியது தங்கமாகும், சேருமுள்ள தங்கமதை வைத்தப்பூரி
சேர்வையென்ற வியோக முத்தியாகும், பாசமுள்ள பொரு
ளதன்மே லாசைகொண்டாற் பாஷாண மாய்வைத்து மூடிக்
கொன்றும், வாசமுள்ள பொருளதனைக் கண்டபாலும் மன
தறப்பாய் நீயிருந்து மனதைக்காரே. (752)

## ஞானம்.

காரப்பா மனமான வாசிதன்னைக் கருணையுள்ள வாசியி
னால் போகம்பாரு, சேரப்பா நின்றபூ ரணத்தைப்பாரு நின்
றிலங்குந் தீபமதை நினைவாய்ப்பாரு, வீரப்பா மேலண்டதொரு
வழிபாரு மெய்யான காயாதி கற்பம்பாரு, தூரப்பா வடிமுடியு
மொன்றாய்ப்பாரு சுத்தாம்பர வாயிரத்தைக் கமைப்பாரே. ()

பார்க்கையிலே பதுசமயம் கன்றுப்போதாம் பாமரு
பதிதனிலே தீபம்தோன்றும், தீக்கருடன் § மதிதானுந் தேய்ந்த
பொன்னச் செங்கதிரோன் தன்னிடத்திற் சேர்வைபாரும், மார்க்க
முடன் மதிதேய்ந்து கதிரைக்கண்டால் மதிமதைந்த சோதிநிலை
யதியாமுடம், வாக்குமனதொன்றுகக் கவனிப்பார்த்தால் மதி
வழங்குந் தன்மைதனை வருக்கலாமே. (754)

ஆமப்பா விப்படியே சுழிமுனைக்கான அடங்காத மெயோக
மதாரமுண்மை, காமப்பால் கனற்பா லங்றோதிக்க கருணை
யுள்ள சித்தர்தமக் கடுத்தவாறு, காமப்பா வென்றந்தத் தன்னைக்
கொண்டு நாட்டமா வாசியென்ற கம்பந்தன்னை, வாமப்பால்
கொண்டுகரை யேறிக்கொண்டால் வரிசையுள்ள வாசியிற்சென்
றேறலாமே. (755)

ஏறலா மெந்தவகை யாதனையந்த வேதாந்தப் பெரு
வெளியி லேறிக்கொண்டு, கூறலாஞ் சகலகலை யொளத்தன்னைக்
கூர்மையுட னக்கலையைக் கூர்ந்துபார்த்து, மாறலா மதிகலைக்கு
ளவியிலேற வாசியென்ற புரவிதனை மார்க்கமாய்ப் பாரொலாஞ் சுற்
றிவர வேறிக்கொண்டு பதிவான விடத்தனிலே பாய்ச்சலாமே. ()

§ மதியென்பது—சந்திரன்.



பாய்ச்சலாம் பூமிதனிலே வாசிபூட்டிப் பணிந்துநின்று
ரேசகபூ ரகமும்பண்ணி, நீச்சலந்த மலையாத கும்பகத்திலின்று
வேரோட்டந் தானறிந்து நிலையைக்கண்டு, பேச்சற்ற மான
தொரு சத்தந்தன்னிற் போமண்ட மானதொரு தன்னைப்போற்றிக்
காய்ச்சலந்தக் கனலாலே சுட்டுப்போடு கருவிதா னறியத்தக்
கிரடைத்தானே. (757)

தானென்ற கசடகற்று சுத்தமாகுந் தாணிதனி லுயிர்ப்
பயிர்கள் தயங்காதையா, ஊனென்ற வுடம்பெடுத்தாற் சாகக்
கல்வி உண்மையுடன் கற்பதற்கு வுன்னைப்பாரு, தேனென்ற
வமுர்தகலை யீறிலேறி நீயென்ற நெறுப்பாறு மயிர்ப்பாலத்தில்,
விநென்ற வாசையை கற்றியேறி வேகாது மயிர்ப்பாலம்
வெற்றியாமே. (758)

வெற்றியென்ற மயிர்ப்பால மீறிலேறி வெகுசனுக்காய்
காதார்ந்த விட்டைத்தாண்டி, பத்திபுடன் விதியதனால் மதிமைய
நீக்கிப் பானுவெனும் ரவியினிடம் பதிவாய்நின்று, முத்தியெனு
மத்தியாஞ் சோதிவீட்டில் முன்முகப்பில் நீயிருந்து முழித்துப்
பாரு, சுத்தமதாய் நின்றிலங்குஞ் சோதியான சுயஞ்சோதி யான
தொரு தீபம்பாரே. (759)

பாரப்பா பரஞ்சோதி யானதீபம் பதிவாகிப் பூரணமாய்
நின்றதீடம், மேரப்பா மேருநடு வானதீபம் மேல்கீழாய் நின்றி
லங்கு மேலாந்தீபம், காரப்பா வாலைபதம் பணிந்திட்டாக்கால்
கனமான வட்டமா சித்தியெய்தும், ஆரப்பா வறிவார்க ளாதி
தீபம் மாகார வறிவான தீபந்தானே. (760)

அறிவான தீபமடா அகாரதீபம் மந்தாரக் மாண்டிரு வாம
தீபம், நெறியான தீபமதைக் குறியாய்க்கண்டால் நீச்சில்லை பேச்
சில்லை நிலையுமில்லை, குறியான குறியோடே காலாலேறிக் குடி
யிருந்து மடிந்தவிடங் குணத்தைப்பாரு, சரியான மூலமடா மூப்
பர்மூகும் § சன்னையற்ற விடமதுதான் றுய்விடாமே. (761)

§ சன்னையென்பது—கவலை.

தாமான மூலமடா வுகாரமாமி சக்கையில்லா வாசமுள்ள சவிகைக்காரி, மாயான மாயமுள்ள மார்க்கந்தானு மகத்தான போதையுள்ள வாமருமி, பேயான மதிமயக்கிப் பேசாசித்தம், பேச்சறியான் மூச்சறியான் பிணம்போலத்திருப்பான், வாயார மதி யமுர்தம் சொன்னாப்போதை வலிமையுள்ள பூரணியை வணங்கி நில்லே. (762)

வணங்கியன மகிழ்ந்தருமை மாமிகின்றல் மார்க்கமுள்ள சத்தியவள் வலுமைமாமி, இணங்கியிந்த மாதுமுந திடத்தே நின்று சரெழுத்து மோரெழுத்து மிணக்கியிப்பாள், குணக் குவிக்த கலமான குருவைப்போற்றிக் கூடடனே வாழமாமற் குறிப்பெகொண்டு, § கணங்களைப்போற் றிரித்ததனை காவிதன்ன சழிமுனையும் வழிதுறையுந் திறந்துபாரே. (763)

மச்சமுனி சரக்குவைப்பு என்னூரில் பார்க்கவும்.

பாரான சக்கிவிட வைப்புதானும் பாடினார் மச்சமுனி யென்னாதிற்று, சோரமெல்லாம் பாடல்பார்த்து நிச்சயமாய்ச் சொல்லுவர் சக்குவைத்தார், போரான போக்குமோர் பாடுனவிற் பெருமையுடன் சாக்குகளைச் சொல்லிச்சொன்னார், பூரமய மாவேதான் சட்டைசாதப் போக்குடனே போவழிகள் பொருள்சொன்னாரே. (764)

சொன்னாரே யகத்தியருஞ் சாக்குசேர்மை சகமான சாலி யத்தில் சன்னமாப்பாரு, என்னாரை சித்தாதி சொப்படன்களைக் கருத் துறவே பாரதிலே காடுகிக்கும், விண்ணாரை பதிதலைக்கும் வியாமாகும் வேதாந்தஞ் சித்தாந்தம் வியாக்கியானம், பண்ணாரை பலபாஷை பாஷைகளும் பருவமுடை வசித்தியிற் பணிக்குகில்லை.

கற்பூர வைப்பு.

பணிக்குகின்றந் சொல்லுவேனுஞ் சாக்குசேர்மை பத்தி யுடன் வைக்குவா லறுதன்னைக் கவிக்குமமை கருவிமுறும் பாரு பாரு கருவான வீரத்தின் வைப்புதன்னை அணிக்கவெடி யுப்பு டனே சீனக்கார மன்பான நவச்சார மன்னமேறி, தனிக்கதொரு இச்சுப்பு துரிசுவெள்ளை தப்பாமலெழுசாக்குஞ் சிவாப்பிவேண்டே.

§ கணங்களென்பது—காய்.



வேண்டியதோர் சாக்குவிறை ரசமுங்கூட்டி மேலான தாமதுவும் பத்துக்கொன்று, பூண்டதோர் சாக்கெல்லாங் கல்வத் திட்டு பொடித்துநன்று மறுவகையாய்ப் பிரட்டிக்கொண்டு, ஆண் டபதி யானதொரு காசிக்குப்பி யளவாக மருந்திட்டு மண்ணும் பூசி, பாண்டமென்ற பதிதனிலே மணலுமிட்டுப் பதிவான குப்பி வைத்து மேலும்போடே. (767)

போட்டுநன்று மடுப்பேற்றித் தீயைமூட்டிப் புத்தியுடன் தீயெரிக்கும் போதிலேயா, காட்டினின்ற குப்பிதனிற் § சிலாகைப் போட்டு நன்மையுடன் பதனமதாய்க் கிண்டிப்பாரு, பூட்டிநின்ற சரக்கதுதா னுருகுங்காலம் புத்தியுடன் தீயாற்றிக் கு ளிரவைத்து, தாட்டிகமாய்க் குப்பிதனை யுடைத்துப்பாரு சந்தனம்போ லொளி யாகிக் கட்டுந்தானே. (768)

வீரவைப்பு.

கட்டிநின்ற வீரத்தைப் பொடித்துமைத்தா கருவான செயநீராற் பிசறிக்கொண்டு, திட்டமுடன் முன்போலே குப்பிக் கேற்றித் திர்க்கமாய்ப் பாண்டமதிற் செலுத்திமைத்தா, சட்ட மதாய் முன்போலே யெரித்துவாங்கத் தயவான சவ்வீர மென்ன சொல்வேன், மட்டில்லா வேதைய தற்கானவீர மாசற்ற வீர மதை வணங்கிநில்லே. (769)

வணக்கமுள்ள கற்பூரஞ் சொல்லக்கேளு வாணவெடி சீன மொடு காரங்கூட்டி இணக்கமுள்ள குக்குருக்கஞ் சரியாய்க்கூட்டி யெட்டிலொன்று வால்மிளகு விசைத்துநல்ல, கணக்குடனே சரக் கையொரு கல்வத்திட்டுக் கதிக்கான்றாய்த் தான்பொடித்து வைத் துக்கொண்டு, பிணக்கில்லாக் கற்பூரம் பத்துக்கொன்று பேணி நன்றாய்ச் சேர்த்ததிலே பின்னுங்கேளே. (770)

கேளப்பா வப்பொடியிற் பாணம்பூட்டிக் கிருபையுடன் தான்குழப்பி தாழிக்கேற்றி, காளப்பா மண்டலமே சமாதிவைத்து நன்மையுடன் தானெடுத்து மைத்தாகேளு, மீளப்பா தான்வற்றி யிட்டுப்பேசலே விசமாக விருக்குமடா பூரம்பூரம், ஆளப்பா வட பூர மதிகபூர மாகார கற்பத்திற் காதியாமே. (771)

§ சிலாகையென்பது—இரும்புக்கம்பி.

ஆதியந்த கற்பூர மார்தான்காண்பா ரருளான பூரணத்தை யறிந்தோர்காண்பார், சோதியென்ற கற்பூரத் தன்மைதன்னாற் றொல்லுலகி லுதாக்கட்டு முவமேறி, நீதியென்ற காயாதி கற்பங் கொண்டு நிலைத்தார்கள் கற்பவரை நிமிஷமாகச், சாதியென்ற சங்கற்பந் தன்னிற்சத்தி சிவமந் நிரத்திற் றுறுப்பில்லை. (772)

தானாகத் தனித்திருந்து கற்பங்கொண்டு தன்மையுள்ள பூரணத்தி லேக்கியில்லை, கோனான சற்குருவை வணங்கிக்கொண் டாற் குருவான பதியறிந்து கூர்ந்துபாரு, தேனான மதியமுர்தங் கொண்டுதேறி சின்மயத்தி லருள்பெருகத் தியானம்பண்ணு, வானான காயமடா வலுத்துப்போகு முற்றறிவு யோகமதி யகர்ந்திலனே. (773)

## அரிசு வைப்பு.

உகந்தநன்று பின்னையொரு சரக்குச்சொல்வே னரிமை யென்ற பச்சையடா அரிதப்போக்கு, வருந்தியன்றுச் சொல்லு கிறேன் தினக்கார மார்க்கமுட னகாரமதை வாங்கிவந்து, உகந்து செய்யு பாத்திரத்தி லிட்டுமைந்தா வுண்மையுடன் பழச்சாறுந் தயிரும்வார்த்து அகத்தனிலே குழிவெட்டி சமாதிவைப்பா யப் பனே மண்டலந்தான் சென்றவாங்கே (774)

வாங்கியன்றாய் வெந்தயறிம் பின்னுமக்கள் வளமான பழச் சாறுந் தயிரும்வார்த்து, தாங்கியன்றாய் குழிவெட்டி முன்போ லப்பா சமாசமாய் சமாதிதனில் வைத்துப்பாரு, பாங்குபெறத் தரிசிற்ற பொன்னசொல்வேன் பச்சையென்ற பச்சைநிற மிதந் தொவ்வாது, சாங்கமுள்ள சரக்குகளுந் தெருதானப்பா தன்மை யுள்ளத் தரிசுவெகு அதிசயம்பாரே. (775)

## நவச்சார வைப்பு.

அரிதான நவச்சாரஞ் சொல்லக்கேளு அர்த்தனந்த தாழி யடா பீங்கான்றாழி, பச்சைக் கொண்டுவந்து மைந்தகேளு பன் னியுட னமுரிமாட் டமுரிதானும், பெரிதான பரியின் § பரி யொட் டைக்கூட்டு பெருமையுட னமுரியொன்றாய் சமனாய்க்கூட்டித், தரு சான பாண்டமதி லிட்டுமைந்தா சொல்லுகிறேன் தினமுடன் காரஞ்சேரே. (776)

§ பரியென்பது—குதிரை.



சேர்த்தநன்றாய்க் கரைத்துவடிப் பேற்றிநீயுஞ் செம்மை யுடன் றிவெரித்து வற்றக்காய்ச்சி பார்த்திபனே குழம்பான பரு வந்தனிலிற் பற்றிக்கொண்டு பழந்தயிரை புறையிட்டுத்தி, போற்றி நன்றாய் மேற்சட்டி கொண்டுமூடி பூமிதனில் § மண்டலமே சமாதி வைத்து, காத்திருந்து தானெடுக்க சாரமொன்றாய்க் கட்டியது நவச்சாரக் கருவேயாச்சே. (777)

ஆச்சப்பா நவச்சார மதிகச்சார மடங்காத சரக்குகளை யடக்குஞ்சார, மூச்சப்பா முன்னிலைய பிறந்தஞ்சாரம் மூதண்ட காயத்தாங் கானசாரம், வீச்சப்பா வியாதிகளை விலக்குஞ்சாரம் வேதாந்த சிரோன்மணியாய் நின்றசாரம், பேச்சப்பா பேசாத வமாய்நின்று பெருமைகொண்ட சாரமடாப் பேணிப்பாரே. ()

பாரப்பா அரிசபா ஷாணஞ்சொல்வேன் பத்திகொண்டு நாகாச மொன்றாய்ச்சேர்த்து, கேளப்பா கெந்தகமுந் தாரம்பச்சை நிசமான லிங்கமுடன் வீரங்கூட்டி, காரப்பா கல்வமதிற் பொடித் துக்கொண்டு காசியென்ற குப்பியிலே சேர்த்துமைந்தா, கேளப்பா மூடிநன்றாய் மண்ணுஞ்செய்து கோடைக்குந் தாழியொன்று விரும்பிவாங்கே. (779)

வாங்கியந்தத் தாழிதனை மண்ணுமிட்டு மணல்தனிற் குப்பிவைத்து வரிசையாகத் தாக்கியந்த வடுப்பில்வைத்துத் தீயை மூட்டு சமாசமா யிருதபத்தை தன்னைக்காணை, பாங்குபெறச் சொ லையிட்டுக் கிண்டிப்பாரு பருவமுள்ள சரக்கெல்லா முருகிநின்று அங்காம லப்பதத்தி லிறக்குமைந்தா அறுங்கன்று பாரவைத்து வெடுத்துப்பாரே. (780)

எடுத்துமிக மேருவைத் யுடைத்துப்பாரு பொன்னசொல் வேன் அரிசபா ஷாணந்தன்னை, அடுத்தாக் கறுபத்து நான்கு மைந்தா வன்பான அரிசபா ஷாணங்கண்டார், தொடுத்தமனந் தட்டியவர் கட்டிப்போவார் நீற்றினமுங் கட்டிவிடுஞ் சமா மைந்தா, நடுத்தமாய்ச் சொன்னதொரு பாஷாணத்தை நலமான குருமுறையாய் காட்டிப்பாரே. (781)

§ மண்டலமென்பது—நாற்பதுநாள்.

### தாளக பாஷாணம்.

நாடிநின்ற தாளகபா ஷாணஞ்சொல்வே னயமான நாகமுடன் ரசத்தைக்கட்டி, கூடியொன்றாய்த் தான்கட்டிப் பொடித்துக்கொண்டு குணமாக வீதற்கிடைதா ரண்டுஞ்சேர்த்து, தேடி நன்றாய்ப் பச்சையுடன் வெடியுப்பாரஞ் சோவே யொன்றுக்கு நிறுத்துக்கொண்டு கூடியதோர் கல்வமதில் பொடித்துமைந்தா சுகமான வறுவகைநீர் பிசறிக்கொள்ளே. (782)

பிசறினதோர் மருந்ததனை ரவியிற்போட்டு பிரியமுடன் பொடித்துநன்றாய்க் குப்பிக்கேற்றி, சுசகாமல் மண்சீலை வலுவாய்ச் செய்து கருத்துறவே முன்போலே § தாழிக்கேற்றி, நிசமாக வடுப்பேற்றி யனலூட்டி நீமகனே யுருகுபதந் தனிலிறக்க, மசகாமற் குளிரவைத்துக் குருவைப்போற்றி மார்க்கமுட மேருவைவி யுடைத்துப்பாரே, (783)

உடைத்துமிகப் பார்க்கையிலே சாக்கெல்லாந்தா னுகமூடிந்து வொன்றாகி யுருகிநிற்கும், படைத்தகுரு பரமனருளாற்கட்டிநின்ற பாஷாணப் பேதமதை பகரக்கேளு, நிடத்துடைய தாரபா ஷாணமப்பா நிருத்தமுடன் பாஷாணம் பதனம் பண்ணி, விடைத்தகவ லோகமதி லாற்றக்கொன்று விட்டுருக்கிப் பார்க்காவி போலாங்காணே. (784)

### லிங்க பாஷாணம்.

காணப்பா லிங்கபாஷாணஞ் சொல்வேன் கருவான லிந்துவுட னாதங்கூட்டி பேணவே புனல்ரசமுங் கூடச்சேர்த்து பெருமையுடன் மூன்றுமொன்றாய்ப் பொடித்துக்கொண்டு, தோணவே யிடைக்கிடைதான் லிங்கம்பச்சை சுத்தமுள்ள தாரமுடன் காரம் வீரம், பூணவே லயர்துமய் லிடையேவாங்கி பொருந்தவொன்றாய் ரேசித்துக் கல்வத்தாட்டே. (785)

ஆட்டிநன்றாய்ப் பொடித்துகல்லக் குப்பிக்கேற்றி யமுருபெற மண்சீலை வலுவாய்ச்செய்து பூட்டியதோர் தாழிதனில் முன்போல்வைத்துப் பூரகமாய்த் தீயெரித்துப் பதத்தைப்பாரு, காட்டியதோர் குப்பிதனிற் சாக்கெல்லாந்தா னன்மையுட னுருகியது குழம்பாய்நிற்கும், நீட்டியதோர் சிலாகையினாற் சோதித்தேதான் செம்மையுடன் தீயாற்றிக் குளிரவையே. (786)

§ தாழியென்பது—மூடாப்பானை.



வைத்ததொரு குப்பிதனை யெடுத்துமைந்தா வரிசையுட னுடைத்துப் பார்த்தாயாகிற், சுத்தமுள்ள பாஷாண மென்ன சொல்வேன் சோதியென்ற லிங்கபாஷாண மென்பேன், பத்தியுள்ள பாஷாணந் தன்னில்மைந்தா பழுப்பானவேதையிலே யனந்தமுண்டு, புத்தியுடன் பார்த்தவர்க் கெல்லாமுண்டு பூரணமா மாயிரத்திற் புகுந்துபாரே. (787)

### கெந்தி பாஷாணம்.

பார்க்கையிலே சிவயோக நன்றாய்த்தோற்றும் பரஞான கேசரியும் பதிவாய்நிற்பான், ஏர்க்கையுடன் கெந்திபா ஷாணஞ் சொல்வே னின்பமுள்ள ரசமூன்று மொன்றாய்க்கூட்டி, மார்க்கமுட னிதற்குநிகர் கெந்திதார மனமில்லாப் பச்சையுடன் வீரங் காரஞ், சேர்க்கையுட னெண்சரக்கு மொன்றாய்க்கூட்டிச் செம்மையுடன் றான்பொடித்துக் குப்பிக்கேற்றே. (788)

ஏற்றிநன்றாய் மண்சீலை யிறுகச்சுற்றி யின்பமுடன் முன்போலே தாழிக்கேற்றி, போற்றிநன்று யடுப்பேற்றித் தீயை மூட்டிப் புத்தியுடன் பதனமதாய் வைத்துப்பாரு, சோத்தியங்கள் வந்ததினு லில்லம்வேகுஞ் சுருதியுள்ள மனந்தனிலே பயம்வைத்தப்பா, காத்திருந்து தீயெரித்து வுருகும்போதிற் கருணையுடன் றனிறக்கி யாறவையே. (789)

ஆறிநன்றாய்க் குளிர்ந்ததன்மேற் குப்பிவாங்கி யன்பாகத் தானுடைத்துப் பார்க்கும்போது, மீறிநின்ற வெண்சரக்கு மொன்றாய்க்கூடி, விபரமுட னுருகியது கட்டிபோல, மாறிநின்ற மருகாதே யிதுதானப்பா மார்க்கமுள்ள கெந்தபா ஷாணமாகும், வீரியத்தைத் தாண்டக்கும் கெந்திதன்னை வினையமுற்றுப் பார்த்த திறல் வேதையாமே. (790)

### உப்புக் கட்டு.

வேதையென்று லவணமடா வுப்புகட்டு வெகுதெளிவாய்ச் சொல்லுகிறே னின்னங்கேளு, பேதையென்ற குதிரையடி § குழி மீட்டானும் பெருந்தும்பை தாழையுடன் மேனிகூட்டி, சீதமுட னிவகைச்சார் சரியாய்க்கூட்டி நேர்மையுள்ள சாறதற்கு நாலுக்கொன்று, போதமுள்ள கரியுப்பைக் கரைத்துக்கொண்டு பொங்காமற் றீயெரித்து வற்றக்காச்சே. (791)

§ குழிமீட்டானென்பது—ஓர்பூண்டு.

காய்ச்சினதோ ருப்பதுவுங் கட்டிப்போகுங் கருணையுடனதற்கரைதான் வெடியுஞ்சினம், பாய்ச்சினன்று பறுவலைகயாலரைத்துருட்டிப் பாலகனே யோட்டில்வைத்துப் புடத்தைப்போடு, தாய்ச்சியொன்று மில்லாம லுப்புநீறி தன்மையுள்ள சுண்ணமதா யிருக்கும்பாரு, நீச்சில்லாச் சுண்ணமதை வைத்துக்கொண்டு நினைத்தபடி முடித்துவிடு நிசமாம்பாரே. (792)

## கல்லுப்புச் சுண்ணம்.

பாரான கல்லுப்பைப் பொடித்துக்கொண்டு பதிவான சாறதிலே கரைத்துமைந்தா, சீராக வடுப்பேற்றித் தீயைமூட்டிச் செம்மையுட னீர்வற்றிக் காய்ச்சிப்பாரு, கூரான கல்லுப்பு கட்டிப் போகுங் கூடவுடனே யிதற்கரைதான் வெடியுஞ்சின, னேராகக் கட்டிநல்ல செயநீர்விட்டு நிசமாக வரைத்துருட்டி § வட்டுப் பண்ணே. (973)

பண்ணியந்த வட்டதனை யோட்டில்வைத்துப் பரமகுருதன்னருளாற் புடத்தைப்போடு, உண்ணியது யோகாம லுப்புநீறி யுரிசையுள்ள சுண்ணமதா யிருக்குமைந்தா, புண்ணியமாய் நின்றவர்க்குச் சுண்ணங்கிட்டும் பொல்லாத பாவியென்றாற் புத்தப்போமானு, சென்னிமையை நோக்கியந்த குருவைக்கார்த்தாற் செம்மையுடன் கண்டதெல்லாங் குருவாய்ப்போமே. (794)

## கற்பூரச் சுண்ணம்.

குருவான கற்பூர சுண்ணக்கேளு கூர்மையுடன் பூரமதின் கட்டிவாங்கி, இருவான வறுவலைநீர் தன்னிற்றோய்த்துச் செம்மையுடன் கவியில்விடு பத்துமுறைப்பப்பா உருவான கற்பூரங் கட்டிப்போகு முறையுள்ள நீபமதி லேறுதைபா, கருவாக விப்படியே கட்டிக்கொண்டு கனக்காக விடைக்கிடையே வெடிசினக்கூட்டே. ()

கூட்டினன்று பறுவலைநீர் தன்னலாட்டிக் கூர்மையுடன் வழித்துருட்டி வட்டுச்செய்து காட்டியே யோட்டில்வைத்துப் புடத்தைப்போடு கலமான கற்பூரச் சுண்ணமாகும் இட்டியதோர் சுண்ணமதில் வேதைகோடி தெளிவான கற்பத்திற் குறுதியாகும், பூட்டியதோர் சிச்சுண்ண மார்தான்செய்வார் பொருண்மையுள்ள மச்சமுனி செய்தார்பாரே (796)

§ வட்டுயென்பது—வில்லை.



பாரப்பா மச்சமுனி யென்னுநிற்றான் பதிவான சரக்குவைப்பு சுண்ணக்காடு, சேரப்பா சொல்லுகிறு கதைநீபாரு நிசமாக வப்பொருளு மிப்பொருளுமொன்றே, சேரப்பா சித்தாதி நூல்களெல்லாந் திறமாகச் சொன்னபொரு டெரியாதப்பா, யோப்பா பெலத்ததோ ராயிரத்தைப் பெருமையுட னிருதயத்திற் பேணிக்காணே. (797)

## துரிசு சுண்ணம்.

காணவே துரிசுனிட சுண்ணங்கேளு கட்டியொன்று பருமனியா யெடுத்துமைந்தா பேணவே முப்பூவும் பூரச்சுண்ணம் பலமாக விடைக்கிடைதான் சேர்த்துக்கொண்டு, காணவே பறுவலைநீர் தன்னலாட்டி நன்றாக வழித்துருட்டி யோட்டில் வைத்து, பூணவே மண்சிலே பூட்டிமைந்தா புடம்போட நீறியது சுண்ணமாமே. (798)

சுண்ணமென்றால் வெகுசுறுக்குத் துரிசச்சுண்ணந் தொட்டசரக் கத்தனையு மாண்டுபோகுஞ் சொன்னசரக் கத்தனையு மாண்டுதானும் முடையில்லா வேதைமுறை செந்தூரங்கள், கண்ணிறைந்த களங்குவகை மெழுகுகோடி காணாத காட்சிதருஞ் சிமிட்டுப்போக்கு, விண்ணிறைந்த நீபமதிற் றாமவேதை. வேணபடி யாடிவினையாடலாமே (799)

## தாம்பர சுண்ணம்.

ஆடலாம் வெகுகோடித் தாம்பரத்தை யருமையுள்ள சுண்ணமதாய்ச் சொல்லக்கேளு, தேடலாம் சாரவுடன் காரங்கூட்டி செம்மையுள்ள வாய்நீரா லரைத்துக்கொண்டு, போடலாந் தாம்பரத் தகட்டுக்கேதான் பூசியன்று யோட்டில்வைத்துச் சீலைசெய்து, காடலாம் புடமதிலே வைத்துப்பார்க்க நன்மையுள்ள தாம்பரந்தான் § செத்துப்போமே (800)

செத்துநின்ற தாம்பர மெடுத்துமைந்தா சிவசிவா கல்வமதிற் பொடித்துக்கொண்டு, பத்தியுடன் முப்பூவும் பூரச்சுண்ணம் பதிவான துருசுடனே மூன்றுமொன்றாய்ப் புத்தியுடன் பொடிக்குநிகர் சேர்த்துக்கொண்டு பூரணமாய் ரசமதுவும் பாதிசேர்த்து, சுத்திகன்றாய் யாட்டிவழி வாய்நீராலே துட்டதுபோல் வட்டதனைத் துலங்கச்செய்யே. (801)

§ செத்துப்போமென்பது—நீறிப்போகும்.

செய்ததொரு வட்டதனை யோட்டில்வைத்து சிவசிவா குழிவெட்டிப் புடத்தைப்போடு, கொய்துவைத்தப் புடமாறி யெடுத்துப்பாரு குருவான சுண்ணமதாய் நீறிநிற்கும், கைதவருஞ் சுண்ணம்வெகு காக்கராங் § காசினியி லாரறிந்து செய்வாரையா, மெய்தவருஞ் சித்தனென்றுஞ் செய்வான்பாரு வேதையிதிற் கோடான கோடிதானே. (802)

## நந்தியுப்புச் செயநீர்.

தானென்ற தத்துவத்தை யகற்றவேண்டும் தயவான பூரணத்தைப் பணியவேண்டுங், கோனென்ற குருவருளா லுதவித்து கூடிநின்ற செயலதனை குறிக்கவேண்டும் தேனென்ற மதியமுர்த பானந்தன்னிற் றெளிவான சத்தியநிற் சேர்த்துகொண்டு வானென்ற பூரமதிற் பொடித்துபோட்டா லுண்மையென்ற நந்தியுப்புச் செயநீராச்சே. (803)

ஆச்சப்பா வின்னீரில் வீரம்போட்டு அப்பனே ரவியில் வைக்கக் காரமாகும், போச்சப்பா சவர்க்காரத் தென்னைதானும் புத்தியுடனக் கந்நீர் கண்டபோதே, பேச்சப்பா பேசாமலெண்ணைக் கக்கிப் போகண்ட வெண்மையிதற் கிணையாய் நிற்கும், காச்சப்பா வண்டசவர்க் காரவெண்ணை கருவான பூரணத்தின் வாடையாமே. ()

## பூரண மை.

வாடையென்ற பூரணத்தின் மையைச்சொல்வேன் வரிசையுடன் கேளுமா லுக்காரியு; மேனட்டென்ற மேருவடா கமலபீட மெய்யான பீடமதி லமுர்தம்வாங்கி, சாடையென்ற கருவென்ன சல்லிமூலை தாமரையின் கொடியான சமூலம்வாங்கி, ஆடையென்ற சீலையிலுங் கொடியைச்சுற்றி யந்தரமாய்த் தீக்கொளுத்தி யட்டிடாயே. (805)

கட்டதொரு கருவெடுத்துக் கருவிற்சேர்த்து கமான கற்பூரம் காலுக்கொன்று வட்டமுள்ள புனுகுடன் சவ்வாதுசேர்த்து வாகாகக் குருவண்டுங் கூடச்சேர்த்து, சட்டமுள்ள கஸ்தூரி பச்சைப்பூரம் சாங்கமாய் கோசினையுஞ் சரியாய்ச்சேர்த்து திட்டமுள்ள கருவினிலே சேர்த்துக்கொண்டு திறமாக விடைக்கிடைதான் கூட்டிக்கொள்ளே. (806)

§ காசினியிலென்பது—உலகத்தில்.



கொள்ளவே சாம்பிராணித் தைலம்வாங்கி கொள்கையுடனந்தவிடைத் தனதாய்ச்சேர்த்து, மெள்ளவே கல்வமதி லரைக்கும்போதின் மெய்யான மையுறுதி யென்னசொல்வேன், நில்லவே நிலையறிந்து மையைவாங்கி சேர்மையுள்ள குருபதத்தை நினைவில்வைத்து, சொல்லவே மந்திரந்தான் றும்-சவ்வென்று. அருவமுள்ள புருவநடுத் திலர்தம்போடே. (807)

போட்டவுடன் மூலமதில் வாசிபூட்டி பூரணமாய் ரேசகபூரகமும்பண்ணி, நாட்டமுடன் கும்பகத்தி னின்றுகொண்டு நாதாந்தப் பேரொளியை கண்ணிநில்லு, தேட்டமுட னுனதிடத்தில் வந்தபேற்கு தீராத கர்மவினைத் தீர்ந்துபோகுங், கூட்டமென்ற சொல்லாகா நாட்டமாய்நில் குவிந்தபரி பூரணத்தின் கொள்கையாமே. (808)

## கேசரி மை.

ஆமப்பா வின்னமொரு மையைக்கேளு வந்தான மானதொரு கேசரியின்மைந்தா, காமப்பாற் பெருகிநின்ற கருவைவாங்கி கருவான மைதனிலே மையைக்கேளு, வாமப்பா பேய்பிடித்தவற்குப் புகைக்குங்கட்டி வலுவான சாம்பிராணி தைலம்வாங்கி, தாமப்பா வண்டமதிற் கருவிற்சேர்க்க தவித்துநின்ற கருவிரண்டு மொன்றாய்ப்போமே. (809)

ஒன்றான மைதனிலே புனுகுசேர்த்து வரிமையுடனன்றாக மதித்தேதான், நன்றான கொம்புசிமிழ் தன்னில்வைத்து நடுவான ருத்திரனைத் தொழுதுபோற்றி, குன்றாத வட்சரமாயேகந்தன்னை குறிப்புடனே தான்றெழுது § திலர்தம்போட்டு யன்றுன மூலமதில் வாசியேற்றி பத்தியுடன் ரேசகபூரகமாய்நில்லே. ()

நில்லந்தப் பதவியிலே நிட்டைகூடி நேமமுட னீயிருக்கும் போதில்மைந்தா, சொல்லந்த மானவுயிர் பயிர்களெல்லாந் தொழுதடிமை யாகுமடா சொன்னேன்கேளு, உள்ளந்த மானகுரு மையைப் போலே யுகமைவெரு மையுண்டு வசியமில்லை; நல்லந்த மானமையை வைத்துக்கொண்டு நடுநாடு சென்றுவலம் வருகலாமே. (811)

§ திலர்தமென்பது—போட்டு.

### உப்பு மை.

வருகிறதற் கின்னமொரு வகையைக்கேளு வணக்காத வெடியுப்பு கல்லுப்போடு, உருகினதோர் சீந்துப்பு கறியுப்போடு மூர்க்கமுள்ள சவர்க்கார வுப்புக்கூட்டி, கருக்காம லேத்துப்பு மொன்றுப்சேர்த்து கம்பளத்தின் சாறதனு லரைத்துக்கொண்டு, மருகாமல் வழித்ததனை வட்டுப்பண்ணி மார்க்கமுடன் காய வைத்துப் புடத்திலேற்றே. (812)

புடத்தினிலே வைப்பதற்கு வகையைக்கேளு புதிதான வோட்டிலதை வைத்துமூடி, இடத்தினிலே மண்சீலை வலுவாய்ச் செய்து செம்மையுட னெருவடுக்கிப் புடத்தைப்போடு, கடத்தின தேர் புடமாறி யெடுத்துப்பார்க்க கன்மையுள்ள கருக்கலோர்தாங் கருக்கிற்கு, மடத்தனமா யிருக்காமற் கரியைவாங்கி வைத்த தின்மே லின்னமொரு கிரியைக்கேளே. (813)

கரியான பிப்பிலே காசுஞ்சேர்த்து கருவான சருகதுவுங் கூடச்சேர்த்து, செறியாகப் பழச்சாறும் விட்டரைத்து சேர்மையுடன் வழித்துருட்டிக் காயப்போட்டு, குறியான மண்சீலை செய்துகல்ல குப்புடனே சிறுபுடம்போட் டெடுத்துப்பாரு, முறைக்காத காயதுபோ லாருக்கிற்கு முன்னதோர் கரியுடனே சேர்த்துக்கொள்ளே. (814)

சேர்த்தன்று மரைக்கையிலே யினிக்கல செம்மையுள்ள மையதனை யென்னசொல்வேன், போற்றினன்றாய் வழித்துருட்டிச் சிமிழில்வைத்து புத்தியுடன் குருபதியைப் போற்றி பார்த்திபனே புனைவெதிர கண்டபேர்கள் பத்தி கொண்டு வாய்ப்புதைத்துப் பயந்திருப்பார், சேர்த்துவைத்த மையிதைத் தான் வசியத்துக்கு சேர்மையுள்ள வாடையொன்று நிலைத்துப்பாரே,

### வாடை.

பாரப்பா வாடையொன்று சொல்லக்கேளு பரிவான பூரணத்திற் பலமேயாக்கி, கோப்பா ரோடுடன் சாம்பிராணி சீசமான வாப்புடனே மட்டிப்பால்தான், சாப்பா § திரிமஞ்சள் சந்தங்கஸ்தூரி தயவான சாதிக்காய் இரும்புபத்திரி, போரான வரத்தையொடு பஞ்சமூலம் பெருமையுள்ள வினிபூரல் சேர்த்துக் கூட்டே. (816)

§ திருமஞ்சளென்பது—மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள்.



ரக்கியதைக் கல்வமதிற் பொடித்துக்கொண்டு, சுகமான பன்னீரா லரைத்துக்கட்டி, தாக்கியே ரவிதனிலே காயப்போடு தன்மையுட னீர்வற்றிக் காய்ந்ததாலும், பாக்கியமென் றேயதனை யெடுத்துக்கொண்டு பதிவாக வீயிருக்கு மொடுக்கந்தன்னில், வர்த்தியந்தான் றவராம லகனிலல்ல லதுவான தழலதனை யெடுத்துக் கொள்ளே. (817)

எடுத்ததொரு விள்ளேதனிற் பணவிடைதானெடுத்து வேகாத மானதொரு தனல்மேல்வைக்க, தொடுத்தபுகை மேலெழும்பித் சுற்றும்பாரு சுகமாகப் புகையிலகப் பட்டதெல்லாம், அடுத்த தொரு வாண்டுமை போலேமக்கா ளன்பான வசிகரமாய் வணங்கி கொள்வார், தடுத்ததொரு வசிகரமாம் வாடைதன்னை தனதான வடக்கமதா யடுத்துக்காரே. (818)

காராத மூடருக்கு ஞானமேது கருவறியா மாந்தருக்குக் கருத்தங்கேது, சேராத யோகிக்கு வாசியேது நிட்டையறி வில்லார்க்குப் பொருளங்கேது, கூராத வட்சரத்தைப் பனிந்து கொண்டு குருவிருந்த சன்னிதியிற் குவிந்துநின்றால், தேறாத சிந்தையெல்லாந் தேறுந்தேறுஞ் சிவசிவா பூரணமுந் திறக்கும்பாரே,

### திலர்தம்

திறமாக வின்னமொரு திலர்தஞ்சொல்வேன் சிவசிவா வாசிநின்ற வினிஞ்சிற்றன்னின், மரமான மஞ்சளுடன் கஸ்தூரி மஞ்சள் வரிசையுள்ள சந்தனமும் வரிசைபூரம், உறமான வெள் ளாரமுங் கோவுங்கூட்டி யுயர்ந்ததொரு புழுகதுவு மொன்பதாச்சு, திறமான வொன்பதுவுஞ் சரியாய்க்கூட்டி—நிச்சயமாய் முலைப்பாலி லரைத்துக்கூட்டே. (820)

கூட்டிநன்று யரைத்துருட்டிக் § கயறுசெய்து கூர்மையுட னிழல்தனிலே யுலர்த்திமைந்தா வாட்டிநன்று யுலரவைத் தெடுத்துக் கொண்டு மக்களே தானுரைத்துத் திலர்தம்போடு, நாட்டிமா யுனதிடத்தி லார்வந்தாலுந் தன்மையுடன் வணங்கியுன் வசனங் கேட்பான், நாட்டமுள்ள திலர்தவகை யதிகமப்பா நாதாந்தக் குருவுதனை நாடிநில்லே. (821)

§ கயறுஎன்பது—மாத்திரை.

நாடிநின்ற விடமதிலே நாட்டம்பாரு நடுவான பூரணத்தை நயந்துகாரு, கூடிநின்ற § வைம்புலனுர் கூத்தைப்பாரு குருவான கேசரத்தின் குறியைக்காரு, வாடிநின் றலையாதே மைந்தாமைந்தா வரிசையுடன் சத்திசிவ மறவாதே, தேடியெங்கும் திடையாத வித்தமார்க்கம் திறமான வாயிரத்தின் செய்கைதானே. (822)

## அமுர்த சஞ்சீவி.

தானென்ற வமுர்த சஞ்சீவிசொல்வேன் சங்கையில்லாக் கங்கைபடா கன்னிகன்னி, தேனென்ற கன்னியவன் குடத்துநீரை செம்மையுடன் பீங்கானிற் சேரவாங்கி, கோனென்ற கற்பூரக் கொஞ்சம்போட்டு குருவான மேருவென்ற காசிக்குப்பி, வானென்ற குப்பிதனி லடைத்துமைந்தா வணக்கமுடன் காசிடைதான் கொண்டுதேறே. (823)

தேறவ தென்னவென்றால் மைந்தாகேளு சிந்தைமன தொன்றாகச் சிவனைப்போற்றி, பேறுபெற வெனைக்காக்க வேண்டுமென்று பேணியே சத்திதனைப் பூசைபண்ணி, பூறுவமாய் ரேசகபூ ரகமும்பண்ணி புத்தியுடன் கும்பகத்தில் பத்திவைத்து, சேருடனே யமுர்தசஞ் சீவிகொண்டா லழியாத தேகமது நிலைக்குங்காணே. (824)

## மூடர்கள்.

நிலையாத மூடர்கள்தான் பேசும்வார்த்தை நிர்மூடபயல்கள் தான் கூடிக்கொண்டு, கலையான நூல்களென்ன கற்பமென்ன கருணையுள்ள சத்திசிவ பூசையென்ன, நிலையான மேருவென்ன வமுர்தமென்ன தங்கமென்ன வாதமென்ன குளிகையென்ன, மலையான குகைகளென்ன வனங்களென்ன மாயமென்ன மாயமடா தேகந்தானே. (825)

தானான தேகமதை யறியமாட்டான் தன்மையுள்ள சித்தர்களைத் தர்க்கம்பண்ணி, வீணான வீண்பயல்கள் மதக்கள்பேசி மெய்நிறைந்த பூரணத்தை யறமாட்டான் ஊனான வசைவைமேல் விருப்பமாக வுழன்றுமிகப் பாதகித்து வுறுதிகெட்டு, தானான வகங்காரத் தலைமேற்கொண்டு நரகமென்ற படுகுழியி லன்னுவானே.

§ ஐம்புலனுரென்பது—பஞ்சபூதம்.



கன்னுவான் படுகுழியில் விழுந்தானல்ல நங்கையர்மேலாசைகொண்டு மயங்கியந்த, புன்னி துறவாயுயிர் தழன்று தன்னு புகைந்துமதி யரிவழிந்து புலம்பிவாடி, தன்னுயிரைத் தானறிய மாட்டமற்றான் சங்கையுள்ள சாத்திரத்தைப் பாடம் பண்ணி, கன்னிநிலை யறியாமற் கதறுவான்பார் காசினியிற் கண்டவரைத் தள்ளுதல்லே. (827)

தள்ளடா தனையறியா மாந்தர்தன்னை தத்துவத்தை யறியாத சவுங்கல்தன்னை, கொல்லமனர் துணிந்துயிரைக் கொன்றுசுட்டு குவலயத்திற் பூசைசெய்யுங் § குரும்பர்தன்னை, மெள்ளவரைத் தானகற்றி யறிவினின்று வேதாந்த சாத்திரத்தை விரும்பிபார்த்து, நில்லாத வந்தநிலை தன்னிற்சென்று நேசமுடன் வாசமதாய் வாசிபூட்டே. (828)

வாசியென்ற பூரணமே தெய்வந்தெய்வம் வையகத்துத் தெய்வமெல்லா மாங்களாச்சு, நேசமைந்த பூரணத்திற் றொன்றுறாகி நிசமான வாசிமனோன் மணியைப்போற்றி, கூசிமனந் தளராமற் குவிந்துநின்று குருவான பதிநோக்கி யமுர்தங்கொண்டு, மாசியென்ற மாய்கையெல்லா மகன்றுபோகும் வையகத்து ளியுமொரு சித்தனாமே. (829)

சித்துமய மாவதற்கு சித்துகேளு சித்தமென்ன வென்றாக் காற்பச்சைமண்ணு, சுத்தமுள்ள பச்சையடா சேறுசோறு துஞ்சிநின்ற மண்ணதனைக் கொண்டுவந்து, பத்தியுட னக்கசடு போக்கிநல்ல பருவமுள்ள நாதமதை வைத்துக்கொண்டு, புத்தியுடன் ஆம்பாலில் லவைத்துமைந்தா யொரியரிசி யிளகுசிரகமுங்கூட்டே (830)

கூட்டியே மஞ்சளுடன் கொத்தமல்லி குணமான பெருங்காயமொன்றாய்க்கூட்டி, நாட்டியே பொடியையன்றாய்ப் பொடித்துத்தூவி நலமாகத் தானிறக்கி வைத்துக்கொண்டு, நாட்டிகமாய்ச் சட்டிதனி னெய்யைவிட்டு தன்மையுட வெண்காய மரிந்துபோட்டு, வாட்டியதோர் பொரிக்கரியைக் கூடச்சேர்த்து மைந்தனே செய்யாலே வறுத்திடாயே. (831)

§ குரும்பரென்பது—உண்மையறியா மூடர்.

வறுத்தபத மென்னவென்றால் மைந்தா கேளு மார்க்கமுடன் பொன்னிறமாய் வறுத்துக்கொண்டு, கறந்துடனே வறுத்ததனைப் பாணிற்சேர்த்து கருணைபெற வந்திசந்தி பணவிடைதான்கொள்ளு, திருத்தமுடன் மண்டலமே கொண்டாயானால் சிவசிவா தேகமதிற் காந்திமீறி, பெருத்ததொரு தேகமதிற் சட்டைதள்ளி பெருமையுடன் தேகமதாய்ச் சூட்சமாமே. (832)

தேகமென்ற வகைதனைக் கண்டுகொண்டு சின்மயத்தி னருளாலே நிறமாய்நின்றால், ஆகமென்ற வாகயங்கள் முத்தி யாச்சு, அருள்பெறுஞ் சிவபோகத் தநேகலாச்சு தாகமென்ற விகற்பமெல்லாந் தனிபலாச்சு சச்சிதா னந்தமென்ற தேகமாச்சு, பாகமென்ற வறுக்கையைத் தள்ளிமைந்தா பத்திகொண்டு சத்தி சிவ பூசைபண்ணே. (833)

பூசையென்ற சிவபூசை மானதமாம்பூசை புத்திகொண்ட பூரணந்தாம் பூசைமார்க்கம், நேசமுடன் பராபர பூசைசெய்தால் [illegible] யீயுமொரு தவசியாகும், பாசையென்ற பலபாசை தன்றுக்கண்டு பத்தியுள்ள ஜோதியதைப் பதிவாய்ப்பார்த்து, ஆசைகொண்டு வாசிதன்னை யடுத்துப்பார்த்து அப்புறந்தான் சிவ யோகத் தடியினிலே. (834)

அடிவான வடிமுடிதா னண்டபிண்ட மாதியந்த மானதோ ரணாயிட, முடியான மூலமடா முதலாமூல முத்திகொண்டு கடுவெளியாய் நின்றமூலம், படியான மூலமடா சுழினைமூலம் பகுத்தநின்ற மூலமெல்லாம் பதிவாய்ப்பார்த்து, அடியான மூல மடா வேதமூலங் கலக்கிவிண்ட யாமடா பசளைதானே. (835)

பசளை.

பசளையென்றால் சிறுபசளை பெரும்பசளையுண்டு பதிவான கொடிப்பசளை தன்னைவாங்கி, அசளையென்ற களைக்காயைக் கண்ட மாக்கி பதிவிருக்கும் குடல்வினையை யகற்றிப்போட்டு, குரவை யென்ற கடுகுமஞ்சள் அரைத்துப்பூசி குறைகவே ரவிதனிலே காயப் போடு, விசளையென்று காய்க்குவைத்துச் சரியாய்ச்த விபரமுள்ள சருகதுவு முடியுஞ்சேரே. (836)

§ அகமம்யென்பது—சாஸ்திரம்.



சேரப்பா முப்பூவும் பூரஞ்சேர்த்து செம்மையுட னிடித்து நன்றாய்க் காடிவார்த்து, நேரப்பா பிசைந்துருட்டிக் காயப்போடு நிசமான புதுப்பாண்டந் தன்னிற்சேர்த்து, காரப்பா மேற்சட்டி கொண்டுமூடி கனக்கவே மண்ணிட்டுத் § தமருஞ்செய்து, சாரப்பா குழிவெட்டிக் கலசம்வைத்துத் தன்மையுடன் குழித்தைல மிறக்குவாயே. (837)

இறக்கியந்தத் தைலமதைப் பாணிற்சேர்த்து வின்பமுடன் சற்குருவைத் தியானம்பண்ணி, அறக்குமணி மாளிகையார் தேக மப்பா வத்தேகர் தானறிந்து தைலமூட்டு, நிறக்கருவாய் முப்பூவிற் றைலம்விட்டு நேரமென்ற விருநோ மண்டலமேகொள்ளு, இறக்குமடா காயமது வலுத்துப்போகுந் தேகமென்ற செம்பில் நின்ற களிம்பைப்பாரே. (838)

செம்பு சுத்தி.

களிம்பான செம்பதனைச் சுத்திசெய்ய கருவான கரு வொன்று சொல்லக்கேளு, வளும்பான பாறையுப்பு சத்துச்சூடன் மார்க்கமுள்ள பச்சையுடன் வெடியுங்கூட்டி தளும்பாமல் வாய் நீரா லரைத்துருட்டி சங்கையுடன் ரவிதனிலே யுலரப்போட்டு, அளும்பான மனதைவிட்டுக் கவசஞ்செய்து வடக்குமுள்ள குழி வெட்டிப் புடத்தைப்போடே. (839)

புடந்தனிலே கவசமது வெந்தாலல்ல புகழான சுண்ண மதா யிருக்கும்பாரு, மடத்தனமாய்த் திரியாமற் குருவைப்போற்றி மானதமாம் பூசையிலே வணங்கிநில்லு, திடத்துடனே சுண்ண மதை யெடுத்துமைந்தா திடமான குப்பிதனிற் பதனம்பண்ணி, கடத்தினிலே லெருவெடுத்து சாம்பல்வாங்கிக் களிம்பான செம்பு களை வாங்குவாங்கே. (840)

வாங்கியந்தச் செம்புகளைத் தகடுதட்டி வாய்நீரால் சுண்ண மதைக் குழைத்துப்பூசி, பாங்குபெற வோட்டினிலே சாம்ப லிட்டுப் பதிவாகச் சல்லிவைத்து மேலும்போட்டு, ஓங்கியே யெருவடுக்கிப் புடத்தைப்போடு வுத்தமனே செம்பினின்ற களிம் பெல்லாந்தான், ஏங்கியே பறந்தோடி ரவிபோலப்பா விருக்குமடா செம்புகளிம் பற்றவாரே. (841)

§ தமர்யென்பது—துவாரம்.

வாரான செம்புகளிம் பருவதற்கு வகையுடனே யின்ன மொருவிசைகேளு, போரான நாயுருவி சாம்பல்வாங்கி பெருமையுள்ள கல்லுப்பு வளையலுப்பு, கூராக மூன்றுமொன்றாய்ப் பொடித்துக் கொண்டு குருவான பழச்சாற்றி லரைத்துருட்டி, கோரகச்செம்பு தனைத் தகடுதட்டி சேர்கூராய் நன்றாகச் செலுத்திடாயே. (842)

## செம்பு சுத்தி.

செலுத்தியின்று முருட்டியதிற் சீலைசெய்து திறமாக வெரு வடுக்கிப் புடத்தைப்போடு, வழுத்துகின்ற செம்பதனிற் களிம்பு அற்று மார்க்கமுடன் ரவிபோலே காந்திபோலாம், அழுத்த முள்ள செம்பதுதான் மக்காள்மக்கா ளருமையுட னின்னமொரு சுத்திகேளு, வெளுத்துநின்ற பொடிக்குஅரை துரிசுகாரம் பொன் னூன வெடியுடனே பூரஞ்சீனம். (843)

தொடுத்துநன்றாய்க் கட்டியபரை வாய்நீராலே துப்புறவா யதையரைத்து வட்டுப்பண்ணி, கொடுத்தவிடு புடந்தனிலே வெளுத்துநீறி குருவான வண்ணமதா யிருக்குமைந்தா, எடுத்த முடன் வாலையுட பதத்தைப்போற்றி நயவாக § வழுவாமற் செய்து கொண்டு, அடுத்தவொரு வண்ணமதை செம்பிற்பூசி யருமை யுடன் முன்போலே புடத்தைப்போடே. (844)

புடம்போட்ட செம்பதனை யெடுத்துப்பாரு பொல்லாத களிம்பற்று ரவிபோலாகும், நடம்பற்ற செம்பதனை வைத்துக் கொண்டு நல்வினைத் தீவினையும் நயந்துபாரு, இடம்பெற்ற மாது குறி கொள்ளவப்பா சிந்தைமன தொன்றுகி யறிவினிலது, இடம்பெற்ற தேகமடா சிவரூபம் தெளிவான செம்பதுபோற் சுத்திபண்ணே. (845)

பண்ணப்பா வின்னமொரு செம்புசுத்தி பக்குவமாய்ச் சொல்லுகிறேன் பற்றிப்பாரு நண்ணப்பா வெள்ளியிலே காரியஞ் சேர்த்து நன்மையுட னிடைக்கிடைதான் சேர்த்துக்கொண்டு, பொன்னப்பா பொன்னதுபோ லுருக்கிக்கொண்டு புதுமையுடன் றெடுத்து மைந்தாகேளு, வின்னப்பா விறைத்தசெம்பைக் குகை யிலிட்டு விரும்பியே காரமிட்டு வுருக்கிக்கொள்ளே. (846)

§ வழுவாமல்யென்பது—குற்றம் வராமல்.



உருக்கமுட னுருகிநின்ற செம்புதன்னி லுண்மையுட னிதற்கிடைதான் சேர்த்துக்கொண்டு, நிருக்குடனே யதையெடுத்து வோட்டில்வைத்து செம்மையுடன் காரமிட்டு வூதிப்போட்டால், மருக்குடனே கின்றகளிம் பெல்லாமைந்தா மாண்டுபோம்ச் செம் பதுவும் வளமையாகும், அருக்கெனவே வெள்ளிதன்னுற் சுத்தி செய்த அருமையுள்ள செம்பிதுதா னதிகசித்தே. (847)

## குடவன் சுத்தி.

சுத்தியுள்ள குடவனைத்தான் சுத்திபண்ணச் செப்புகிறேன் சிவயோகந் திறந்தாலப்பா, பத்தியுள்ள பூரணமும் வெடியுஞ் சீனம் பாங்கான சாரமுடன் துரிசுகட்டி, புத்தியுட னொருமன தாய்க் கல்வத்தாட்டி புதிதான வோட்டிலதை வழித்துக்கொண்டு, சுத்திசெய்யக் குடவனைத்தான் தகடுதட்டி சுகமான மருந்திலதை § விரவுவாயே. (848)

விரவியதைப் புடத்தினிலே வைத்துப்பாரு விளங்கின்ற பித்தளைதா னென்னசொல்வேன், இரவியதாய்க் குடவனது செம் பாய்ப்போகுஞ் சிவசிவா விப்படியே மூன்றுதரம்போடு, இரவி யதோர் பித்தளைதான் செம்பாய்ப்போச்சு நிசமான செம்பதனை வைத்துக்கொண்டு, உரமான வெள்ளியிலே நாலுக்கொன்று உண் மையுடன் கொடுத்துருக்கப் பொன்றும்பாரே. (849)

பாரப்பா வின்னமொரு சுத்திகேளு பத்தியில்லாத் பித் தளையைத் தகடுதட்டி, கோரப்பா துரிசுடனே காரஞ்சாரம் நிச மான வெடியுப்புப் புளியுங்கூட்டி, சாரப்பா சம்பழத்தா லாட் டிக்கொண்டு சதுரான வோட்டிலதை வழித்துவைத்து, சோப்பா தகடுதனிற் குழப்பிக்கொண்டு செம்மையுடன் புடம்போட்டு வெடுத்துப்பாரே. (850)

எடுத்துமிகப் பார்க்கையிலே குடவன்று மின்பமுள்ள செம்பதுபோற் சுத்தியாகும், அடுத்தவொரு செம்பதனை வைத்துக் கொண்டு அன்பான வெள்ளியிலே நாலுக்கொன்று, கொடுத்து மிக வுருக்கிடவே நாற்சரக்குங் குருவான தங்கமதைக் கூடச் சேர்த்து, விடுத்தநன்று முருக்கியதை யெடுத்துப்பார்த்தால் மேலான பொன்னதுபோல் விசிதமாமே. (851)

§ விரவுயென்பது—பிசறுதல்.

விசிதமுள்ள குடவனிலே பின்னமொன்று விளம்புகிறே னின்னமொரு புளியுங்கூட்டி, கசிதமுள்ள கல்வமதி லாட்டிமைந்தா களிம்பான குடவனிலே பூசிக்கொண்டு, உசிதமுடன் புடம்போட் டாற் செம்பாய்ப்போகும் உற்றசெம்பை வெள்ளியிலே நாலுக் கொன்று, கசிதமுடன் கொடுத்துருக்க நாலுமாற்றும் நாட்டமுட னித்தொழில்தா னண்மையாமே. (852)

நாக சுத்தி.

ஆமப்பா நாகத்தின் சுத்திகேளு அருளான மனோன்மணி யாள் சொன்னவார்த்தை, நாமப்பா சொல்லுகிறேன் பழச்சாற் றன்னில் நலமான ரசிதம் கூடச்சேர்த்து, தாமப்பா சார மதி ரூசுக்கூட்டி தன்மையுடன் ருஜுருக்கிச் சாய்ப்பாயப்பா, சாமப்பா சாலித்து நிறத்தைக்குன்னே தனித்துநின்ற நாகமது கட்டிப்போச்சே. (853)

கட்டிநின்ற நாகமதின் நிறத்தைக்கேளு கருவான வெள் ளியைப்போல் சுத்தியாகும், வெட்டிகன்றாய்ப் பணவிடைபோ லெடுத்துக்கொண்டு மேலான சாரமது பொடித்துச்சேர்த்து, திட்டமுடன் வாய்கோசக் குமிழ்பிகல்ல சிமிழ்தனிலே வைத்து நன்றாய் மூடிக்கொண்டு, சட்டமுடன் தங்கமதை யுருக்கிநல்ல சுதரான நாகமதிற் கொடுத்துவாங்கே. (854)

வாங்கிடவே § பரிநாக மொன்றுப்கூடி மாசற்ற வெள்ளி மணி போலாமைந்தா, ஏங்கியே திரியாதே நாகமணிதன்னை யாக்க வெள்ளியிலே பத்துக்கொன்று, பாங்குபெறத் தாலுருக்கிக் கொடுத்துப்பாரு பசுமையுள்ள பொன்னதுபோ லிருக்குமைந்தா, தாங்கியேதேர், பொன்னெடுத்து வைத்துக்கொண்டு தன்மையுடன் சிவவேர்க்கு சதராய்ப்பண்ணே. (855)

நாக பற்பம்.

சுதாரக வின்னமொரு நாகசுத்தி தன்மையுடன் சொல்லு கிறேன் மைந்தாகேளு, விதியான காரொன்று தைலத்தாலே வியாமுடன் ருஜுருக்கித் தேக்காய்ப்பாலில், மதியாம லிங்குதாற் சாய்ந்தாயானால் மார்க்கமுள்ள நாகமது சுத்தியாகும், தீதியான முப்பூவுஞ் சாரங்கூட்டி கேர்மையுட னரைத்துநன்றாய் நாகத்தப்பே.

§ பரிநாகமென்பது—தங்கநாகம்.



நாகமதிற் கவசமதை நன்றாய்ப்போட்டு கழுகாமல் மண் ஓலை வறுவாய்ச்செய்து, பாகமுடன் கெசபுடத்திற் பதிவாய்வைத் தாற் பாமருரு நாகமது கட்டிப்போகும், ஆகமுடன் கட்டி னதை யெடுத்துக்கொண்டு அன்பாக ஈயதற்கிடைதான் பரியைக் கூட்டி, தாகமுட னுருக்கிப்பா ரொன்றாய்ச்சேர்ந்து தனதான வெள்ளிமணி போலாமென்னே. (857)

என்னவென்று யிருக்காதே மணியைவாங்கி இன்பமுடன் வெள்ளிசெம்பிற் புக்துக்கொன்று, சொன்னமொழி தவறாமற் கொடுத்துப்பாரு சோதியென்ற பொன்னொளியை யென்னசொல் வேன், வின்னமில்லாப் பேரொளியைக் கண்டபோதே வேதாக் தஞ் சித்தாந்த மெய்யில்தங்கும், நன்னயமா யின்னமொரு நாகக் கட்டு காட்டுகிறேன் கருக்குருவாய் காட்டுறேனே. (858)

காட்டுகிறேன் § குளப்பாலைக் கொண்டுவந்து நடனமென்ற வெடியுப்புக் கூடச்சேர்த்து, நாட்டிகமாய்த் தானிடித்து வோட் டில்வைத்துத் தன்மையுடன் வெள்ளியக் கட்டிவாங்கி, மூட்டிநன் றாய்த் தகடுதட்டி மருந்துள்வைத்து மூர்க்கமுட குழிவெட்டிப் புடத்தைப்போடு, கூட்டிநன்றாய்ப் புடமாறி யெடுத்துப்பார்க்க துப்பறவாய் நீறியது பற்பமாமே. (859)

ஆமப்பா பற்பமதைப் பதனம்பண்ணி அன்பாக வராக னிடை யெடுத்துக்கொண்டு, தாமப்பா நவச்சாரம் விராகன்பத்து தன்மையுள்ள பொரிகாரம் விராகன்பத்து, நாமப்பா மூன்று மொன்றாய்க் கூட்டிக்கொண்டு நன்மையுடன் வாய்நீரா லரைத் துருட்டி, தமப்பா நாகமது சுத்திபண்ணி உண்மையுட னதனி லொரு பலத்தைவாங்கே. (860)

